www.padippakam.com



கே. மகாதேவன்

திறமையுள்ள
தமிழனுக்குத் தடை

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
ஜூலை 2004 ■ ரூ.6
Volume : 1 - Issue : 9

## புரையோடியிருக்கும் பொது சுகாதாரம்

படிப்பகம்

www.padippakam.com



# மக்களாட்சித் தத்துவங்களை மறுக்கும் கிராமங்கள் - II

விவசாயப் பருவம் முடிந்த பிறகு தீண்டத்தகாதவர்களுக்கு வேலை கிடையாது; அதனால் வருமானமும் கிடையாது. அந்தக் காலங்களில் அவர்கள் காடுகளில் புல்வெட்டியும், விறகு வெட்டியும் அவற்றைப் பக்கத்து நகரங்களில் கொண்டு சென்றும் விற்கிறார்கள். அரசின் காடுகளிலிருந்து இவற்றை வெட்டிக் கொண்டு செல்வதற்கு, வனக் காவலரின் தயவு வேண்டும். அவருக்கு லஞ்சம் கொடுத்தால்தான் கொண்டு செல்ல முடியும். வாங்குவோர் பெரும்பாலும் இந்துக்கள்தான். அவர்கள் சதி செய்து விலைகளைக் குறைத்தே வைப்பார்கள்.

இவர்கள் பொருள் ஈட்டுவதற்கு எந்தவொரு வியாபாரமும் செய்ய முடியாது. அதற்கு வேண்டிய முதலும் இவர்களிடம் இல்லை. அப்படியே இருந்தாலும், இவர்களிடமிருந்து யாரும் வாங்க மாட்டார்கள். இவர்களுடைய வருமான ஆதாரங்கள் எல்லாம் நிச்சயமில்லாதவை; சிறிது காலம் மட்டும் கிடைத்து மறைந்து விடுபவை. நாட்டின் சில பகுதிகளில் இவர்களுக்கு நிச்சயமான ஒரேயொரு வாழ்க்கை வழி இருப்பதைத்தான் நான் அறிவேன். கிராமத்தின் இந்து விவசாயிகளின் வீடுகளில் பிச்சை கேட்கும் உரிமைதான் அந்த வழி.

ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு நிர்வாக எந்திரம் உள்ளது. இந்த நிர்வாகத்தில், தீண்டத்தகாதவர்கள் பரம்பரையாக கீழான வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதற்காக இவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தின் ஒரு பகுதியாக, தீண்டத்தகாதவர்கள் அனைவருக்குமாகச் சேர்த்து - ஓரளவு நிலம், பண்டைக் காலத்திலிருந்தே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தின் அளவு ஒருபோதும் அதிகரிக்கப்படாது. இந்த நிலமும் மிகப்பல துண்டுகளாகச் சிதறி அமைந்திருப்பதால், தீண்டத்தகாதவர்கள் அதைப் பயிர் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். இதனுடன் சேர்ந்ததாகப் பிச்சை எடுக்கும் உரிமையும் கொடுக்கப்பட்டுள்ளது.


இது ஓர் அதிர்ச்சி தரும் உண்மை என்றாலும், இது தீண்டத்தகாதவர்களின் வழக்கமுறையான உரிமையாகி விட்டது. தீண்டத்தகாத ஒருவர் அரசுப் பணியில் அமர்த்தப்பட்டால், அவருக்கு ஊதியம் நிர்ணயிக்கும் போது பிச்சையெடுப்பதன் மூலம் அவர் பெறக்கூடிய உணவின் மதிப்பையும் அரசு கணக்கில் எடுத்துக் கொள்கிறது. தீண்டத்தக்கவர்களிடமிருந்து உணவைப் பிச்சை எடுப்பதற்கான உரிமைதான், இப்போது இந்தியாவின் 6 கோடி தீண்டத்தகாத மக்களின் முதன்மையான வாழ்க்கை ஆதாரமாகும். கிராமத்தில் வழக்கமான உணவு நேரத்திற்குப் பிறகு போய்ப் பார்த்தால் - தீண்டத்தகாதவர்கள், கூட்டம், கூட்டமாகச் சென்று இதைச் சொல்லிக் கொண்டு பிச்சை கேட்பதைக் காணலாம்...



இதுதான், இந்துக்கள் மிகப் பெருமையாகப் பேசுகின்ற கிராமக் குடியரசு. இந்தக் குடியரசில் தீண்டத்தகாதவர்களின் நிலைமை என்ன? அவர்களின் இடம் கடைசியானது மட்டுமல்ல, அதன் முக்கியத்துவமும் குறைவானது. அவர்கள் மீது தாழ்ந்தவர் என்ற முத்திரை குத்தப்பட்டு, பெரும்பான்மையினருக்கு எத்தனை வழிகள் கிடைக்கின்றனவோ அத்தனை வழிகளிலும், அவர்கள் தாழ்ந்த நிலையிலேயே அழுத்தி வைக்கப்படுகிறார்கள். இந்தத் தாழ்ந்த நிலையில் வாழ்வது ஒரு தனிப்பட்டவருக்கு மட்டும் அன்றி, ஒரு வகுப்பு முழுவதற்கும் விதித்த விதியாக உள்ளது. வயது, தகுதி என்ற எதையுமே கருதாமல் தீண்டத்தகாதவர்கள் எல்லோருமே தீண்டத்தக்கவர்களைவிடத் தாழ்ந்தவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்...

...தீண்டத்தக்கவர் என்றால் எப்போதுமே தீண்டத்தக்கவர்தான்; தீண்டத்தகாதவர் என்றால் எப்போதுமே தீண்டத்தகாதவர்தான். பார்ப்பனர் என்றுமே பார்ப்பனர்தான், தோட்டி என்றுமே தோட்டிதான். இந்த அமைப்பில் உயர்ந்த பிறப்பைப் பெற்றவர்கள், உயர்ந்தவர்களாகவே உள்ளனர். வேறு விதமாகச் சொன்னால், இந்த அமைப்பு முறை மாற்ற முடியாத 'கர்ம விதி'யை அல்லது நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்ட 'தலைவிதி'யை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தத் 'தலைவிதி'க்கும் இதற்கு உட்பட்ட தனிநபரின் தகுதிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தீண்டத்தகாதவர் ஒருவர், அறிவிலும் ஒழுக்கத்திலும் எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும், தாழ்ந்தவரான தீண்டத்தக்கவர் ஒருவரை விட, அந்தஸ்தில் குறைந்தவராகவே வைக்கப்படுகிறார். எவ்வளவுதான் செல்வந்தராக இருந்தாலும், தீண்டத்தகாதவர் ஒருவரின் அந்தஸ்தைவிட உயர்ந்ததே ஆகும்.

இதுதான், இந்தியக் கிராமத்தின் உட்புற வாழ்க்கைச் சித்திரம். இந்தக் குடியரசில் ஜனநாயகத்திற்கோ, சமத்துவத்திற்கோ, சுதந்திரத்திற்கோ, சகோதரத்துவத்திற்கோ இடமே இல்லை. இந்தியக் கிராமம், குடியரசின் தத்துவங்கள் எல்லாவற்றையும் மறுப்பதாக உள்ளது. இது ஒரு குடியரசு என்றால், தீண்டத்தக்கவர்களால் தீண்டத்தக்கவர்களுக்காக நடத்தப்படும் - தீண்டத்தக்கவர்களின் குடியரசாகும். இது, தீண்டத்தகாதவர்களைச் சுரண்டி வாழ்வதற்காக, இந்துக்களால் உருவாக்கப்பட்ட ஒரு வகைக் காலனி ஆதிக்கமாகும். இதில் தீண்டத்தகாதவர்களுக்கு உரிமைகள் எதுவும் இல்லை. அவர்கள் வாழ்வதெல்லாம் காத்திருக்கவும், பணி செய்யவும், பணிந்து நடக்கவுமே. செய்வதற்கு அல்லது செத்து மடிவதற்கே அவர்கள் உள்ளனர். அவர்கள் கிராமக் குடியரசுக்கு வெளியே உள்ளவர்கள் என்பதால், அவர்களுக்கு உரிமைகள் இல்லை. குடியரசு என்று கூறப்படுவதற்கு வெளியே உள்ளதால், அவர்கள் இந்து சமூகத்துக்கு வெளியே உள்ளனர். இது ஒரு விஷச் சக்கரம். ஆனால், இது மறுக்க முடியாத உண்மை.



*பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு : 5 பக்கம் : 20*


**“ இந்திய கிராமம் ஒரு குடியரசு என்றால், தீண்டத்தக்கவர்களால் தீண்டத்தக்கவர்களுக்காக நடத்தப்படும் - தீண்டத்தக்கவர்களின் குடியரசாகும். இது, தீண்டத்தகாதவர்களைச் சுரண்டி வாழ்வதற்காக, இந்துக்களால் உருவாக்கப்பட்ட ஒரு வகைக் காலனி ஆதிக்கமாகும். குடியரசு என்று கூறப்படுவதற்கு வெளியே உள்ளதால், தீண்டத்தகாதவர்கள் இந்து சமூகத்துக்கு வெளியே உள்ளனர். இது ஒரு விஷச்சக்கரம். ஆனால், இது மறுக்க முடியாத உண்மை. ”**

படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி



கொடுங்கரம் வரைந்த
குறிப்புகள்
எலும்புக் கூடுகளாயின

உயிர்கள் எரிந்த
புகைக் கூட்டங்கள்
திணறடிக்கின்றன
மனிதத்தின் சுவாசப் புற்றுகளை


பரிசோதனைக் கூடத்தில்
உரிக்கப்பட்ட மனிதத் தோல்கள்
காவித் துண்டுகளாய்
கழுத்தில் இருக்கின்றன

கூக்குரலை நசுக்கிய
கோஷங்களுக்கிடையில்
வெளிவருகின்றது
மனித நாகம்
கொலையுண்ட உடல்களை
மிதித்துக் கொண்டே
இன்னும் அடங்காத
உயிர்தாகத்தோடு.



படிப்பகம்

www.padippakam.com




இடஒதுக்கீட்டுக்கு எதிரான
திருவள்ளுவர் பல்கலைக் கழகம் ................8

அம்பேத்கர் கல்வி
**அன்பு செல்வம்** ........................................10

"அம்பேத்கரியத்தில்தான்
சமூக விடுதலை உள்ளது"
கே. சந்துரு............................................12

புரையோடியிருக்கும் பொது சுகாதாரம்
அழகிய பெரியவன் ..................................16

'தொடரும் தவிப்பு' திறனாய்வு
**ஜெனிபர்** ..............................................20

"திறமையுள்ள தமிழனுக்குத் தடை"
**கே. மகாதேவன்**......................................22

சாமியை ஆக்கிரமிக்கும் ஜாதி
பூவிழியன்..............................................29

வேட்டையாடப்படும் விவசாயிகள்
**பி. சாய்நாத்** ..............................................30

இடஒதுக்கீடு : விடுதலைக்கான கருவியா?
கவுதம சன்னா ..........................................36



- முன் அட்டைப் புகைப்படம் : People's Health Movement
- அட்டை வடிவமைப்பு : **யாக்கன்**
- இதழ் வடிவமைப்பு : **ஜெமிமா ஆலிஸ், பிரேமா**
- அலுவலக ஒருங்கிணைப்பு : **ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார், சி. ராமன்**




படிப்பகம்

www.padippakam.com

தலித் முரசு

Volume : 1 Issue : 9

சூலை, 2004

8 - 6

•

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்
அழகிய பெரியவன்
யாக்கன்
காவ்யா
விழி.பா. இதயவேந்தன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

தொலை நகல் : 2374 65 11

E-mail : ambedkar@md4.vsnl.net.in

# பசிக்கும் இந்தியா !

இந்நாட்டின் அரசியல் குறித்துப் பேசப்படும் அளவுக்கு, பசி - பட்டினியால் மக்கள் நாள் தோறும் இறப்பது குறித்துப் பேசப்படுவதில்லை. அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் விண் வெளிக்கு 'ராக்கெட்' அனுப்புவதற்கு செலவிடப்படும் அளவுக்கு - வறுமையால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதைத் தடுப்பதற்கு, நிதி செலவழிக்கப்படுவதில்லை. நாட்டின் பாதுகாப்பு குறித்து அக்கறை செலுத்தும் அளவுக்கு, நாட்டு மக்களின் பாதுகாப்பு - பொது சுகாதாரம் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. மூடநம்பிக்கைகளை வளர்ப்பதற்கும், கோயில் களின் கும்பாபிஷேகத்திற்கும், புனரமைப்புப் பணிகளுக்கும் கோடிக்கணக்கில் செலவிடப் படுகின்றன. ஆனால், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த, திட்டங்கள் வகுக்கப்படுவதில்லை.

வறுமை - மிகக் கொடியதொரு வன்முறையாக இருப்பினும், வறுமை ஒழிப்பு குறித்தும் பொருளாதார முன்னேற்றம் குறித்தும், ஆய்வு அரங்குகளில் புள்ளி விவரங்கள் வெளிவருவதோடு சரி. உருப்படியான செயல் திட்டங்கள் ஏதுமில்லை. இந்நாட்டின் முதுகெலும்பான விவசாயத் தின் மூலம்தான் - நாட்டுக்கு மூன்றில் ஒரு பங்கு வருவாய் கிடைக்கிறது; மூன்றில் இரண்டு பங்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால், நாட்டின் வளங்கள் பெரும்பாலும் விவ சாயம் அல்லாத துறைக்கே பயன்படுத்தப்படுகின்றன. "உணவு தானியங்களைச் சேகரிப்பதில் இந்தியா தன்னிறைவு பெற்றுள்ளது. நாட்டின் சேமிப்புக் கிடங்குகள் நிறைந்து வழிகின்றன. இருப்பினும், 30 கோடி மக்கள் பசியால் வாடுகின்றனர். இதற்கு யார் பொறுப்பேற்பது?" என்ற கேள்வியை நோபல் பரிசு பெற்ற டாக்டர் அமர்த்தியா சென் எழுப்பியுள்ளார்.

கம்யூனிஸ்டுகள் 26 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்யும் மேற்கு வங்காளத்தில் - பசி, பட்டினியால் மக்கள் இறக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இம்மாதம் இம்மாநிலத்தின் ஆம்லாஷோல் என்ற கிராமத்தில், 5 பழங்குடியினர் பட்டினியால் இறந்துள்ளனர். பொது விநியோகத் திட்டமும், நிலச் சீர்திருத்தமும் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படுவதாக சொல்லப்படும் ஒரு மாநிலத்தில், இத்தகைய பட்டினிச் சாவுகள் பல கேள்விகளை எழுப்புகின்றன. 'மேற்கு வங்கத்தின் வேறு சில இடங்களிலும் பட்டினிச் சாவுகள் நிகழ்வதாக' அம்மாநில முதல்வரே ஒப்புக் கொண்டுள்ளார். ஆந்திரப் பிரதேசத்தில் இன்றளவும் தற்கொலைகள் நின்றபாடில்லை. நாட்டின் பிற மாநிலங்களிலும் பட்டினிச் சாவும், உணவுப் பற்றாக்குறையும் நிலவுகிறது.

'தேசிய மனித மேம்பாட்டு அறிக்கை' 2002 இன்படி, கிராமப்புறங்களில் 9.48 சதவிகித மக்களுக்குதான் கழிவறைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது. ஆனால், நகர்ப்புறங்களில் இதுவே 63.85 சதவிகிதமாக இருக்கிறது. இத்தகைய இடைவெளிகளும் சீர் செய்யப்படுவ தில்லை. விவசாயத்தை மேம்படுத்தாமல் இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்த முடியாது என்பது, அனைவரும் அறிந்த உண்மை. நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்புச் சட்டம், பஞ்சமி நில மீட்பு ஆகியவை நோய் தீர்க்கும் முக்கிய காரணிகளாகப் பேசப்பட்டாலும், அவை நடை முறைப்படுத்தப்படுவதில்லை. மத்தியில் காங்கிரஸ் தலைமையில் அமைந்துள்ள கூட்டணி அரசு, 'வேளாண் துறைக்கே அதிகளவு முதலீடு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்' என்று குறைந்தளவு பொது செயல் திட்டத்தில் உறுதியளித்துள்ளது. இதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திரைப்படங்கள், அரசியல், பாலியல், குற்றம், பொழுதுபோக்கு, மேற்கத்திய உணவு வகைகள், அழகிப் போட்டி, விளையாட்டு என இன்னும் இதுபோன்ற பயனற்றவைகளுக்கு முன்னுரிமை அளித்து அட்டைப்படம் வெளியிடும் பத்திரிகைகளுக்கு, பின்வரும் பிரச்சனை கள் ஒரு பொருட்டாகவே தெரிவதில்லை : ஏறக்குறைய 3 கோடி இந்திய மக்கள் போதிய ஊட்டச் சத்தின்றி தவிக்கின்றனர். 2001இல் உணவு இருப்பு ஒருவருக்கு ஓராண்டுக்கு 143 கிலோ இருந்தது. தற்பொழுது அதிலிருந்து இன்னும் குறைந்து கொண்டே செல்கிறது. ஏறக்குறைய 45 சதவிகித மக்கள் ஒரு நாளைக்கு 45 ரூபாய்க்கும் குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர். 47 சதவிகித குழந்தைகள் போதிய ஊட்டச் சத்தில்லாததால், வளர்ச்சியும் எடையும் குறைந்தே காணப்படுகின்றனர். 50 சதவிகிதப் பெண்கள் ரத்தசோகை மற்றும் ஊட்டச் சத்தின்றி பாதிப்புக் குள்ளாகின்றனர்.

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, சாதி அமைப்பு முறையே தடையாக இருப்பதாக, பொருளியல் அறிஞரான அம்பேத்கர் கூறினார். சாதி - தொழில்களை மட்டும் பிரிக்கவில்லை; அது தொழிலாளர்களையும் பிரித்துள்ளது என்ற உண்மையையும் அவர்தான் சுட்டிக்காட்டியுள்ளார். ஆதிக்க சாதிகளின் ஆக்கிரமிப்பைத் தகர்ப்பது மட்டும் அவரின் நோக்கம் அல்ல. அவருடைய போராட்டத்திற்கு அடிப்படையாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் இருப்பதை மறுக்க முடியாது. பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் சாதியை யும், இந்நாட்டு மக்களின் பசியையும் போக்காத வரை - இனிவரும் ஆட்சிகளிலும் இந்தியா ஒளிராது.


•



படிப்பகம்

www.padippakam.com





நன்றி : 'இந்து'

உலகில் பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள், மதங்கள், பொருளாதார முறைகள், அரசியல் ஆட்சிமுறைகள் கொண்ட பல நாடுகள் உள்ளன. எனவே, அவை அனைத்துக்கும் அதிகாரம் கிடைக்க வகை செய்ய வேண்டும். உலக மக்கள் சமுதாயத்தின் பெரும் பகுதியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில், அய்.நா. அவையின் பாதுகாப்பு மன்றத்தை விரிவுபடுத்த வேண்டும். ஆனால், மேலாதிக்க வெறிகொண்ட, தனியொரு அதிகார அமைப்பை - உலக மக்கள் மீது திணிக்கும் முயற்சிகள் நடைபெறு கின்றன. முதலாளித்துவத்தின் உச்சபட்ச வடிவத்தை, உலக மக்கள் மீது திணிப்பதாக உலகமயமாக்கல் இருக்கக் கூடாது. மனித உரிமைகளைப் பாதுகாக்கிறோம்; ஜனநாயகத்தை ஏற்படுத்துகிறோம் என்று கூறிக்கொண்டு, ஒரு நாட்டில் தலையிடுவதற்கு - அய்க்கிய நாடுகள் மாமன்றத்தைத் தவிர வேறு யாருக்கும் அதிகாரம் கிடையாது.

- **டாக்டர் கே.ஆர். நாராயணன்,** முன்னாள் குடியரசுத் தலைவர், 14.6.2004 அன்று பெய்ஜிங்கில் நடைபெற்ற மாநாட்டில் ஆற்றிய உரை.

உலகில் வேலையில்லா திண்டாட்டம் பெருகி வருகிறது. 2003 இல் வேலையில்லாத ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை 18 கோடியே 60 லட்சமாக இருந்தது. இது, தற்பொழுது மேலும் கூடி யிருப்பதாகத் தெரிகிறது. 2004 ஆம் ஆண்டிலும் 'உழைக்கும் ஏழை' மக்களின் எண்ணிக்கை 55 கோடியாகவே உள்ளது. 2003 இல் வேலை இல்லாமலும் - வேலை தேடி அலையும் நபர்களின் எண்ணிக்கையும் 18 கோடியே 60 லட்சமாகும். உலகத்தில் வேலையில்லாத ஆண்களின் எண்ணிக்கை 10 கோடியே 80 லட்சமாகும். 'ஏழைகளுக்கு ஆதரவான' கொள்கைத் திட்டங்களை வகுப்பதுதான் இதற்குத் தீர்வாக இருக்க முடியும்.

- உலகத் தொழிலாளர் அமைப்பு (ILO) அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து.




நன்றி : 'டைம்ஸ் ஆப் இந்தியா'

கறைபடிந்த அமைச்சர்களை நீக்க வேண்டும் என்று சொல்லு வதற்கு, சவப்பெட்டி ஊழலிலும், தெகல்கா டேப் வழக்கிலும் குற்ற வாளிகளாக இருப்பவர்களுக்கு தார்மீக உரிமை இல்லை. தேசிய ஜனநாயக அரசே ஒரு ஊழல்வாத கும்பல்தான். 'பாபர் மசூதி வழக்கில் எல்.கே. அத்வானிக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்ட காரணத்திற்காகவே அவர் பதவி விலக வேண்டியதில்லை' என்று வாஜ்பேயி கூறினார். நாங்கள் மத்திய ஆட்சியில் இருக்கும் போது, வாஜ்பேயி உட்பட பலரும் என்னை 'மாட்டுத் தீவனத் திருடன்' என்றனர். ஆனால், மாட்டுத் தீவன வழக்கு நேர்மையான முறையில் விசாரிக்கப் பட்டால், இவர்கள் எல்லாரும் திகார் சிறையில்தான் இருப்பார்கள்.

- **லாலு பிரசாத்,** மய்ய ரயில்வே அமைச்சர், 'இந்திய டுடே' இதழுக்கு அளித்துள்ள பேட்டியில்.




நன்றி : 'தி வீக்'



நன்றி : 'இந்து'

ஏழை விவசாயிகளுக்கு உதவ முயலும் அரசு

இந்துத்துவ கொள்கையே பா.ஜ.க.வின் அடையாளம். அதில் உறுதியாக இருக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ். இயக்கமே பா.ஜ.க.வின் பிறப்பிடம். கட்சியின் எதிர்காலப் பயணத்தில், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தையும் உடன் அழைத்துச் செல்வோம். இந்துத்துவா கொள் கையையும், இந்தியத் தன்மையை யும் நாம் வேறுவேறாகப் பார்க்க வில்லை. பா.ஜ.க.வின் வெற்றி யிலும், தோல்வியிலும் ஆர்.எஸ்.எஸ். நமக்கு ஆதரவு அளித்ததை மறந்து விடக் கூடாது.ஒவ்வொரு தேர் தலிலும் ஆர்.எஸ்.எஸ். இயக்கம், பா.ஜ.க.வுக்கு ஆதரவு அளித்து வந்துள்ளது. அவர்களின் ஆதரவைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

- **எல்.கே. அத்வானி,** முன்னாள் துணைப் பிரதமர், மும்பையில் 23.6.2004 அன்று நடைபெற்ற பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு கூட்டத்தில் உரையாற்றியபோது.



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டெழுவோம்


மக்களின் கவனத்தை ஈர்க்காத - உச்சபட்ச வன்கொடுமை!

"சாதிப் பற்றுடையோரின் பகுத்தறிவு நேர்மையற்றது; முன்னுக்குப் பின் முரணானது. சாதிப் பெருமை பேசுகின்ற, தீண்டாமையை நெஞ்சுக்குள் ஒளித்து வைத்துள்ள எவரும் - பகுத்தறிவு பேசவோ, பார்ப்பனியத்தை எதிர்க்கவோ சிறிதும் தகுதியற்றவர்கள்."

- சுப. வீரபாண்டியன்

**வறுமையிலும் வேறுபாடு!**

மு. தங்கராஜ் - கோயம்புத்தூரிலுள்ள வடவள்ளி கிராமத்தில், சுப்பிரமணிய சாமி தேவஸ்தானம் மேல்நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவன். பள்ளிக்கூட கட்டணம் 200 ரூபாய் கட்ட முடியாததால், அரளி விதை சாப்பிட்டு உயிர்விடத் துணிந்துவிட்டான் ('இந்தியன் எக்ஸ்பிரஸ்' 26.6.04). பள்ளிக் கூட நிர்வாகம், கட்டணம் கட்ட வேண்டும் என எச்சரித்தது. பெற்றோர் கைவிரித்துவிட்டனர். ஒரு தலித் மாணவன் ஆண்டுக்கு 25 ரூபாய் கட்டணமாகக் கட்டினால் போதும். இந்து அறநிலைத் துறையால் பராமரிக்கப்படும் இப்பள்ளியில், போதிய நிதி ஆதாரம் இல்லாததால் இக்கட்டணத்தை, சாதி வேறுபாடின்றி வசூலிப்பதாக அதன் தலைமை ஆசிரியர் கூறியுள்ளார். தங்கராஜின் தம்பி கார்த்திக், இப்பள்ளியில் ஆறாம் வகுப்பு சேர்ந்துள்ளான். அவனும் 400 ரூபாய் கட்ட வேண்டுமாம். இப்பணத்தைக் கட்டாமல், பள்ளிக்கு வரவேண்டாம் என நிர்வாகம் கண்டிப்பாக சொல்லிவிட்டது. வேறு சாதி மாணவர்களின் வறுமை, தற்கொலைக்கு இட்டுச் செல்லவில்லை. தொடக்கப் பள்ளிக் கட்டணம் கூட கட்ட இயலாத நிலையில்தான் தலித் வறுமை இருக்கிறது. ♦

**ஜாதி இந்து நாய்கள்!**

தூத்துக்குடி மாவட்டம் - எட்டயபுரத்தின் அருகில் உள்ளது டி. சண்முகபுரம். இங்கு ரெட்டியார் சாதி மற்றும் பிற சாதி தவிர, சேரியில் 50 தலித் குடும்பங்கள் உள்ளன. இங்கு தலித் பகுதியில் வாழும் ஆண் நாய்கள், சாதி இந்து நாய்கள் வாழும் பகுதிக்குச் செல்லக் கூடாதாம்! ஏன்? ''நாங்க வளர்க்கிற ஆண் நாய் அங்கே போய் அவுக தெரு நாய்களோட சேர்ந்து, மேல்சாதிக்காரத் தெரு பொம்புளை நாய்களை செனைப்படுத்திப்புடுதாம். மேல்சாதித் தெரு பொட்டை நாய், சக்கிலியத் தெரு ஆண் நாய்க்கு குட்டி போட்டா அசிங்கமாம். அதனால்தான் இப்படி தடைபோடுறாக.'' இந்த ஊரில், தலித்துகள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதை விளக்கத் தேவையில்லை. இக்கொடுமையை, முதலில் 'மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை'யின் மாணவர் ஏடு வெளிக்கொணர்ந்தது. 'நக்கீரன்' (9.6.04) இதழும் பிறகு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (22.6.04) ஏடும் இச்செய்தியை உறுதிப்படுத்தியுள்ளன. சென்ற இதழின் இதே பகுதியில், 'நாய்க்கு ஜாதி இல்லை' என்று எழுதியிருந்தோம். ஆனால், நமது கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. ♦

**வன்னியப் பகுத்தறிவுச் சிங்கம்**

'புரட்சிப் பாதை' ஏடு 'மீண்டும் கருஞ்சட்டைப் படை - டாக்டர் ராமதாசு' என்று சூன் 2004 இதழில் அட்டைப்படம் வெளியிட்டுள்ளது. தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியின் 81 ஆவது பிறந்த நாள் விழாவில், ''பெரியார் கொள்கைகள் முழு அளவில் வெற்றி பெற வேண்டும்; கருணாநிதி முன்புபோல் கருஞ்சட்டை போட வேண்டும்; எங்களையும் போடச் செய்ய வேண்டும்'' என்று ராமதாஸ் பேசியிருக்கிறார். இவர், மஞ்சள் சட்டையைக் கழற்ற மாட்டாராம்; இவருக்கு இன்னொருவர் கருஞ்சட்டையைப் போட்டு விட வேண்டுமாம்! ஆனால், இச்செய்தியைக் குறிப்பிட்டு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏடு கூட 'பெரியாரியத்துக்கு இது வலிமை சேர்த்திருப்பதாக'க் கூறியிருப்பது வியப்பாக இருக்கிறது! வன்னியர் வெறியைத் தூண்டிவிட்டு, அதில் குளிர்காயும் ராமதாசையும் - அவருடைய சாதி அரசியல் பெரியாரியலுக்கும், திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும் எதிரானது என்பதை இவர்கள் சுட்டிக்காட்டத் தயங்குவது ஏன்? அவர் அப்படியே கருஞ்சட்டைப் போட்டுக் கொண்டாலும், அதற்குள் மஞ்சள் சட்டை இருக்கிறவரை - அது பெரியாரியலுக்கு இழைக்கிற துரோகமாகத்தானே இருக்க முடியும்?

**இது வன்கொடுமை இல்லையா?**

சூன் 26 - துன்புறுத்தல்களுக்கு எதிரான நாள். இதை உலகெங்கும் அய்.நா.அவை கடைப்பிடிக்கிறது. அபுகிரெய்ப் சிறையில் அமெரிக்க ராணுவத்தின் சித்திரவதை, காவல் நிலையங்களில் கைதிகள் துன்புறுத்தப்படுவது, குடும்பத்தில் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள்... என இவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்பப்படுகிறது. 'மக்கள் கண்காணிப்பகம்' சார்பாக, சென்னையில் ஒரு நாள் கருத்தரங்கமும், தொடர் விழிப்புணர்வுப் பயணமும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், உச்சபட்சமான துன்புறுத்தல் - ஒரு மனிதனின் மலத்தை மற்றொருவர் எடுப்பது - பலரின் கவனத்தையும் ஈர்க்கவில்லை. 'அருந்ததியர் கூட்டமைப்பின்' தலைவர் கு. ஜக்கையன், ''திண்ணியத்தில் மலம் தின்ன வைக்கப்பட்டது பற்றியும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் குரல் கொடுக்கிறார்கள். ஆனால், நாங்கள் நாள்தோறும் மலத்தைத் தின்ன வேண்டிய வன்கொடுமைக்கு ஆட்படுகிறோமே! இதைத் தடுக்க வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று எவரும் குரல் கொடுப்பதில்லையே ஏன்?'' என்ற வேதனையான கேள்வியை நம்முன் வைத்தார். ♦



படிப்பகம்

www.padippakam.com



# இடஒதுக்கீட்டுக்கு எதிரான திருவள்ளுவர் பல்கலை

## தமிழக அரசின் நடவடிக்கை என்ன?

தனியார் துறைகளிலும் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முழக்கத்திற்கு, இந்திய அளவில் தற்பொழுது செயல்வடிவம் கொடுக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால், இடஒதுக்கீடு பாரம்பரியமிக்க திராவிட இயக்கங்கள் ஆட்சி செய்யும் தமிழகத்தில், நிலைமை வெட்கக் கேடாக உள்ளது. அரசுத் துறைகளிலேயே இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த, மக்கள் போராட வேண்டியிருக்கிறது. அந்தப் போராட்டத்தின் விளைவாக வெளியான வெள்ளை அறிக்கைகளும்கூட, குப்பைக்குச் செல்லும் நிலையே உள்ளது.

தமிழ் நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட (சட்ட எண் 32, 2002) 'திருவள்ளுவர் பல்கலைக் கழகச் சட்டம் 2002'இன்படி, வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக் கழகம், 16.10.2002 அன்று தொடங்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தின் கீழ் வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள 52 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இப்பல்கலையின் முதல் துணைவேந்தராக டாக்டர் அன்னாவி சுசீலா திருமாறன் நியமிக்கப்பட்டார். இவர், இப்பல்கலைக் கழக அமைப்புகளைப் புறந்தள்ளிவிட்டு, தன்னிச்சையாகச் செயல்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவருடைய தன்னிச்சையான செயல்பாடுகளால், இப்பகுதியில் உள்ள தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர் கல்வியே கேள்விக்குறியாகி உள்ளது.

வேலூர் கோட்டையில் இருந்து செயல்படும் இப்பல்கலைக்கழகத்தில், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் 46 பேர் பணிபுரிகின்றனர். இதில் துணைவேந்தர் உள்ளிட்ட ஆறு ஆசிரியர்களும், ஆறு ஆசிரியரல்லாத பணியாளர்கள் மட்டுமே நிரந்தரப் பணியாளர்கள். மற்றவர்கள் தினக்கூலியாகவும் / தொகுப்பூதியம் பெறுபவர்களுமாக உள்ளனர். ஆனால், இப்பணியாளர் நியமனங்களில் இடஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்பது தற்பொழுது தெரிய வந்துள்ளது. அதுமட்டுமல்ல, துணைவேந்தரால் அவரது சாதியைச் சார்ந்த 13 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் புகார் எழுந்துள்ளது. இவர், அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட கல்வி அமைச்சர் செம்மலையின் நெருங்கிய உறவினர் என்று கூறிக்கொண்டு, அமைச்சர் பெயரில் தன்னிச்சையாக செயல்படுபவர். இவை குறித்து விசாரிக்கும்படி, 'பல்கலைக் கழக ஆசிரியர்சங்க'த்தின்சார்பில் - 'பல்கலைக் கழக ஒருங்கிணைப்பு' சார்பில் அரசின் கல்வித் துறை செயலாளருக்கும் ஆளுநருக்கும் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர் சுசீலா திருமாறனின் சட்டவிரோத செயல்பாடுகளைக் கண்டித்துப் போராடி வரும் 'திருவள்ளுவர் பல்கலைக் கழக ஒருங்கிணைப்புக் குழு' செயலாளர் பேராசிரியர் அய். இளங்கோவன் அவர்களிடம் இது குறித்து கேட்டோம். அவர், துணைவேந்தர் மீது மேலும் பல குற்றச்சாட்டுகளை அடுக்கினார்: ''இப்பல்கலைக் கழகம் சிறப்பாகச் செயல்பட இரு இன்றியமையாத அலுவலர்கள் - பதிவாளர் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால், இப்பதவிகளுக்கான பணி நியமன விண்ணப்பம் கேட்டு, பல்கலைக் கழகத்தின் செய்தி இதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு, சுமார் பத்து மாதங்கள் முடிந்த நிலையிலும், இப்பணியிடங்களுக்கான தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்யாமல் துணைவேந்தர் காலங்கடத்தி வருகிறார். தற்போது மீண்டும் இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கேட்டு விளம்பரம் செய்துள்ளார்.

2002 - 2003 நிதி ஆண்டில் தமிழக அரசு, திருவள்ளுவர் பல்கலைக் கழகத்திற்கு ரூபாய் அய்ம்பது லட்சம் மான்யம் அளித்தது. இப்பணத்தில் சுமார் இருபத்தைந்து லட்சத்தை - பல்கலைக் கழக துணைவேந்தர், ஒரே மாதத்தில் (மார்ச் 2003) செலவழித்துள்ளார். இச்செலவினங்கள், இந்நாள் வரை தணிக்கை செய்யப்படவில்லை. இப்பல்கலைக் கழகத்திற்குத்தளவாடங்கள், எழுது பொருட்கள் வாங்க எவ்விதமான ஒப்பந்தப் புள்ளிகளும் பெறப்படவில்லை. துணைவேந்தரே தன்னிச்சையாகப் பொருட்களை வாங்கியுள்ளார். தேவையற்ற செலவினத்தை உள்ளடக்கிய பொருட்களை வாங்கியுள்ளார். பல்கலைக் கழகத்திற்கென அய்ந்து குளிர்சாதனப் பெட்டிகள் வாங்கப்பட்டு, இந்நாள்வரை மூன்று



படிப்பகம்

www.padippakam.com

# "தலித் கலை, இலக்கிய ஆய்வு மய்யத்தை நிறுவுக"

*துணைவேந்தர் நிராகரித்துள்ள கல்விக் குழு உறுப்பினர் களின் தீர்மானங்கள் :*

- தலித் கலை இலக்கிய ஆய்வு மய்யத்தை உடனே நிறுவவும், நிர்வகிக்கவும், தொடர்ந்து நடத்தவும் வேண்டும் எனவும் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

- திருவள்ளுவர் பல்கலைக்கழக அமைப்புகளுக்கு உறுப் பினர்களை, வேந்தர் மற்றும் துணைவேந்தர் நியமனம் செய்யும் போது, பிரதிநிதித்துவம் இல்லாத, பிரதிநிதித்துவம் குறைந்த எண்ணிக்கையில் உள்ள, விடுபட்டுப்போன - அட்டவணைப் பழங்குடியினர், அட்டவணை இனத்தவர் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை அளித்துப் பரிந்துரைத்து, நியமனம் செய்ய வேண்டும்.

- அட்டவணைப் பழங்குடி, அட்டவணை இனத்தவர் சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள் எழுதிய புத்தகங்களை வெளியிட, ஒரு நூல் பதிப்பு மற்றும் வெளியீட்டுத்துறையை உடனே ஏற்படுத்த வேண்டும்.

- அட்டவணைப் பழங்குடியினர், அட்டவணை இனத் தவர், சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கலைஞர்கள் கிராமத்தை உடனே நிறுவ வேண்டும்.

- அட்டவணைப் பழங்குடியினர், அட்டவணை இனத்தவர், சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப் பைச் சார்ந்த எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளிகளின் நாளிதழ், வார, திங்களிதழ்கள், ஆண்டிதழ்கள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஓவியங்கள், புகைப்படங்கள், ஒலி - ஒளி நாடாக்கள், குறுந்தட்டுகள் மற்றும் திரைப்படங்கள் ஆகிய வற்றைச் சேகரிக்கவும், பாதுகாக்கவும் ஆவணக் காப்பகம் ஒன்றினை உடனே ஏற்படுத்த வேண்டும்.

- அட்டவணைப் பழங்குடியினர், அட்டவணை இனத் தவர், சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் நிகழ்த்துக் கலைகள் பயிற்சிக் கல்லூரி களை உடன் நிறுவவும், நிர்வகிக்கவும், தொடர்ந்து நடத்தவும் வேண்டும்.

குளிர்சாதனப் பெட்டிகள் பயன்படுத் தப்படாமலே உள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்பல் கலைக் கழகத்தில் பணிபுரியும் ஆசிரியர் கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நாள்தோறும் கையொப்பமிடும் வருகைப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. எவரும் வருகைப் பதிவேட்டில் கையொப் பமிடுவதாகத் தெரியவில்லை.''

2003 இல் இப்பல்கலைக் கழகத் தில் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணி யாளர்கள் பணி நியமனத்திற்காக விண் ணப்பங்களைக் கோரிய விளம்பரத்தில், இடஒதுக்கீடு பற்றி குறிப்பிடாமல், எல்லா இடங்களையும் பொதுப் போட் டியாக அறிவிக்கப்பட்டதையும், அட்ட வணையினர், அட்டவணைப் பழங்குடி யினருக்கு அளிக்க வேண்டிய வயது வரம்பு தளர்வு, இட ஒதுக்கீடு இல்லாததையும் எதிர்த்து - சென்னை உயர் நீதி மன்றத்தில் வேலூர் ஊரிசு கல்லூரி ஏ.யு.டி. கிளை தொடர்ந்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் 18.6.2004 அன்று (வழக்கு எண். டபிள்யு 237 / 2004, 238 / 2004) பணி நியமனத்திற்கு இடைக்காலத் தடை வழங்கியுள்ளது. இப்பல்கலைக் கழ கத்தில் ஏழாண்டுகளாகப் பணிபுரிந்த தலித் விரிவுரையாளர் (விலங்கியல்துறை) அமுதா, நான்காண்டுகளாகப் பணி புரிந்த விரிவுரையாளர் (விலங்கியல் துறை) ஜெயபாரதி ஆகியோரைப் பல் கலைக் கழகச் சட்டத்திற்குப் புறம்பாகப் பணிநீக்கம் செய்தார் துணைவேந்தர்.

இப்பல்கலைக் கழகத்தின் தொடக்க விழாவில், இப்பகுதி தலித் மக்களுக் காகவும், அவர்களின் உயர்கல்விக் காகவேதான் இப்புதிய பல்கலைக் கழ கத்தைத் தொடங்குவதாக தமிழக முதல்வர் அறிவித்தார். ஆனால், அவ ரது அமைச்சரவையில் கல்வி அமைச் சராக இருந்த செம்மலையின் பெயரால் தற்போதைய துணைவேந்தர், தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோரின் நலனுக்கு எதிராகச் செயல்படுவதை கல்வித் துறை செயலாளரும் ஆளு நரும் கண்டுகொள்ளவில்லை.



அய்.இளங்கோவன்

திருவள்ளுவர் பல்கலைக் கழகம் தொடர்ந்து முறையாகச் செயல்படா மல், தன்னிச்சையாக செயல்படும் துணைவேந்தரால் - மாணவர்களின் கல்வி நலனும், உயர் கல்வி நலனும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பல்கலைக் கழக வேந்தரான தமிழக ஆளுநர் மற்றும் உயர்கல்விச் செயலாளர் அவர்களும் - உடனடியாகத் தலையிட்டு, நிர்வாக முறைகேடுகளை பல்கலைக் கழகச் சட்ட விதிகளின்படி விசாரிக்க வேண் டும். 'இத்துணை வேந்தரை உடனே நீக்க வேண்டும்' என்ற கோரிக்கை, மக்களி டையே வலுப்பெற்று வருகிறது. •

\- நம் செய்தியாளர்

**"தன்னிச்சையாக செயல்படும் திருவள்ளுவர் பல்கலைக் கழகத் துணை வேந்தரால், மாணவர்களின் கல்வி நலனும், உயர் கல்வி நலனும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இத்துணை வேந்தரை உடனே நீக்க வேண்டும்."**



படிப்பகம்

www.padippakam.com



# அம்பேத்கர் கல்வி

புரட்சியாளர் அம்பேத்கரின் சிந்தனைகளை, விடுதலை இயக்கப் பாதையில் அணியமாக்குகின்ற பணி, அம்பேத்கர் உயிரோடு இருந்த போதே தொடங்கிவிட்டது. அம்பேத்கரின் அதிர்வலைகளில் எழுந்த இந்தியக் குடியரசுக் கட்சியும், 'செட்யூல்டு இன இயக்க'மும், 'சமத்துவத் தொண்டர்படை'யும் நாலாபுறமும் நீட்சியடையத் தொடங்கியபோது, அவரின் சமகால முன்னோடிகள் - தங்களை தலித் அறிவுஜீவிகளாக அடையாளப் படுத்திக் கொண்டனர்.

மராட்டிய மண்ணில் புகைந்தெழுந்த கிசான் பாகோஜி பன்சோடு, தாதாசாகேப் கெயிக்வாட், வாமன் ராவ் காட்பாலே, வி.எஸ். கதேங்கர், குசுமகராஜ், என்.எஸ். பட்கே, என்.ஆர்.ஹின்டே போன்ற அம்பேத்கரியப் போராளிகளும், இலக்கிய வாதிகளும் அம்பேத்கரின் சிந்தனைகளை எழுதத் தொடங்கினர். தனஞ் செய்கீர் எழுதிய 'அம்பேத்கரின் வாழ்வும் பணி'யும்கூட அப்போது வெளியானதுதான்.

இந்தியா முழுவதும் விரிந்து கிடந்த தலித்துகளின் இயங்கியலுக்கு, அது அம்பேத்கர் என்கிற ஒற்றை ஆரத்தை அறிமுகப்படுத்தியது. அம்பேத்கர் என்கிற ஆரச் சக்கரத்திலிருந்து தலித்துகளின் விடுதலை எரி நட்சத்திரம் சுழலுவதற்கு ஒரு அறிமுகமாகவும் அமைந்தது. மராட்டியத்தில் அம்பேத்கரைப் பற்றி எழுதிய அவரின் சமகால முன்னோடிகளைப் போல, தமிழகத்தில் பெருமளவு எழுத்துகள் வெளியாக வில்லை.

ஆனால், அம்பேத்கரின் மறைவுக்குப் பிறகு தமிழகத்திலும் மராட்டியத்திலும் அவரைப் பற்றிய எழுத்துகளின் வேகம் கூடியது. நானக் சந்த் ரட்டு, வசந்த் மூன் போன்றோரின் கடின உழைப்பால் அம்பேத்கரின் தொகுப்புகள் வெளிவந்தன. அம்பேத்கருக்கு சிலை வைப்பதும், படங்களை சட்டங்களாக்கி வீடுகளில் தொங்கவிடுவதும், 'தலைவர் வழிபாட்டு' மாயைகளாகவும் நடந்தேறின. அம்பேத்கரை ஆய்வு செய்த பல மேலை நாட்டவர்களும் அவரைப் பற்றி அதிகம் எழுதத் தொடங்கினர்.

அம்பேத்கரின் மறைவுக்குப் பிறகு எழுந்த இயக்கங்கள், இந்தியத் துணைக் கண்ட மய்ய நீரோட்ட அரசியலுக்குள் நுழைவதில் காட்டிய ஆர்வத்தைக்கூட, அம்பேத்கரின் சிந்தனைகளை மக்கள் முன்பு எடுத்துச் செல்வதில் காட்டவில்லை. அரசியல் என்று வருகின்றபோது குறைந்தபட்சம் பூனா ஒப்பந்தம், இரட்டை வாக்குரிமை, இடஒதுக்கீடு என்பதைக்கூட மக்கள் முன் தெளிவுபடுத்தவில்லை.

ஆனாலும், 1990களுக்குப் பிறகு அம்பேத்கரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தைத் தொடங்கிய எஸ்.சி./எஸ்.டி. அரசு ஊழியர்களும், தலித் இயக்கங்களும், வட்டார, மத்திய அளவில் நிறுவப்பட்டுள்ள அம்பேத்கர் பவன்களும், அம்பேத்கர் கல்வி நிறுவனங்களும், அம்பேத்கர் பன்னாட்டுப் பேரவைகளும் - அம்பேத்கரின் எழுத்துகளையும், உரைகளையும் கல்வியியல் சார்ந்து எடுத்துச் செல்ல ஒரு சில வேலைகளையும் தொடங்கி உள்ளன. இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து தலித்துகளுக்கும், தலித் இயக்கங்களுக்கும் - ஒரு ஒற்றைப் பரிமாணத்தை உருவாக்குவதற்கு, இது துணையாக இருக்கும். அது, புரட்சியாளர் அம்பேத்கர் என்பதே தீர்வாகவும் இறுதியாகவும் இருக்கும். அப்படியானால் நமக்கான விடுதலையை நாம் அம்பேத்கரிலிருந்துதான் தொடங்கியாக வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு புறம் அம்பேத்கரைக் கற்பதில் ஒரு பின்னடைவு தலித்துகளுக்கு இருந்தாலும், இன்னொருபுறம் அம்பேத்கரை வீழ்த்துவதில் சாதி இந்துக்களின், இந்துத்துவ அடிவருடிகளின் செயல் திட்டங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. எனவே, அம்பேத்கரை நாம் கற்றாக வேண்டும். அதற்கு 'அம்பேத்கர் கல்வி' என்கிற ஒன்று அவசியமானதாக இருக்கிறது.

புரட்சியாளர் அம்பேத்கரின் போர்க்குணம் மிக்க உறுதியான ஒப்படைப்பு, ஒரு ஜனநாயக நாட்டைக் கட்டமைக்க உறுதுணையாக இருந்துள்ளது. அவரின் கடின உழைப்பும், சமூக மாற்றுப் பார்வையும் - சாதிய சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட மக்களுக்காகவே கூக்குரலிட்டது. இந்தியத் துணைக் கண்டத்தில் சமநீதிக்கான மானுடம் உருவாக, அவரின் தொலைநோக்குத் திட்டங்கள், எல்லை கடந்த விடுதலைக் களத்தில் இன்று நம்மை அணியப்படுத்தியுள்ளன. சமூக, அரசியல் தட்பவெப்பத் தளங்களில் அவர் இயக்கிய விடுதலை அழுத்தங்கள், சமூகத்தைப் பற்றி அக்கறை கொள்கிற சிந்தனையாளர்களிடையே பன்முக ஒழுக்கத்தைக் கற்பிக்கச் செய்துள்ளன. அதன் விளைவாக இன்று 'அம்பேத்கர் கல்வி'யைப் பெறுவதில், தலித்துகளுக்கு ஒரு தன்முனைப்பு உருவாகியுள்ளது.

எந்த ஒரு தளத்தில் இருந்தும் வெளியாகின்ற சமூக விடுதலைக்கான மூச்சிறைச்சலின் வாழ்நிலையைப் புரட்டுகின்றபோது, அம்பேத்கர் என்கிற அடையாளத்தை மறைத்து விட்டு அல்லது புறக்கணித்து விட்டு, இந்தியத் துணைக் கண்டத்தின் இன்னொரு விடுதலைப் போரை - எந்த முனையிலிருந்தும் தொடங்கிவிட முடியாது. இதை உணர்ந்த பல்கலைக் கழகங்கள், இன்று புரட்சியாளர் அம்பேத்கரின் கல்வியைப் பாடத் திட்டமாக்கி, பட்டப்படிப்புக் கல்வியை வழங்க முன்வந்துள்ளன.

தலித் கருத்தியலை உருவாக்க களத்தில் நின்று, தலித் விடுதலைக்கான புதிய வியூகத்தில் புரட்சியாளர் அம்பேத்கரின் சிந்தனைகளை அசைவுகளுக்குட்படுத்தி, நவீனம் - பின் நவீனம் ஆகியவற்றைக் கடந்து அம்பேத்கர் இவைகளை எவ்வாறு எதிர்கொண்டார்? சமூகவியல், பொருளியல், மதம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற தத்துவார்த்தக் கட்டமைப்புகளின் கருத்துக் கலகமாக எவற்றை முன் நிறுத்துகிறார்? என்பதை விவாதித்து, களத்தில் செயல்படுத்தி வருகின்ற மதுரை 'தமிழ் நாடு இறையியல் கல்லூரி'யில் இப்போது 'அம்பேத்கர் கல்வி' என்கிற பட்டய, சான்றிதழ் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான அங்கீகாரத்தை 'மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்' வழங்கியுள்ளது.




ஆனந்த் டெல்டும்டே, ஜெயகரன்

புரட்சியாளர் அம்பேத்கரின் கல்விப் படிப்பைத் தொடங்குவதற்கு முன் இன்றைய சமகாலச் சூழலில், அம்பேத்கர் சிந்தனைகள் எவ்வாறு பொருந்திப் போகின்றன என்பதை விவாதிக்க - 'தலித் ஆதார மய்ய'த்தின் சார்பில் 2004 மே 27 - 31 வரை ஏலகிரியில் ஓர் கருத்தரங்கு நிகழ்த்தப்பட்டது. 'புரட்சியாளர் அம்பேத்கரின் கருத்துக் கலகம்' என்கிற இக்கருத்தரங்கில், முனைவர் ஆனந்த் டெல்டும்டே, முத்துமோகன், ஊர்துநாதன், அந்தோனி குருசு, பூ. சந்திரபோசு, வடிவேல் ராவணன், பாலச்சந்திரன், டோமினிக், ஜெயகரன் ஆகியோர் அம்பேத்கரின் சிந்தனைகளை யொட்டி கட்டுரைகள் வாசித்தனர். தமிழக தலித் இயக்கப் போராளிகள், சிந்தனையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கேற்று அம்பேத்கரின் சிந்தனைகள் மீது தலித் விடுதலைக்கான விவாதங்களைக் கூர்மைப் படுத்தினர்.

சமகாலச் சூழலில் எழுந்து வருகின்ற வல்லாதிக்க முதலாளித்துவம், உலகமயம், பண்பாட்டு வன்முறை, ஒற்றைத் தேசியம், நவீன மநுதர்மம் என பார்ப்பனியத்தின் தொற்று நோய்களாகத் தொடருகின்ற - எல்லா நச்சுக் கதிர்வீச்சுகளையும் அழித்தொழிக்க, புரட்சியாளர் தர்க்கம் செய்த மூலாம்பரமான கருத்துகளை மறுவாசிப்புச் செய்து, இன்று எழுந்துள்ள சிக்கலான ஆதிக்கக் குவியங்களை வீழ்த்தி, சமத்துவத்தை வென்றெடுக்க - 'அம்பேத்கர் கல்வி' அவசியமானதாகவும், அவசரமானதாகவும் படுகின்றது.

கல்லூரி, பல்கலைக் கழக மாணவர்களும், தலித் இயக்கப் போராளிகளும், பெண்கள் அமைப்புகளும், அணி அணியாய் சேர்ந்து, அம்பேத்கர் கல்வியைக் கற்றாக வேண்டும். புரட்சியாளர் அம்பேத்கரின் அடங்க மறுத்த போராட்டங்களையும், அத்து மீறிய யுக்திகளையும், பேச்சுகளையும், எழுத்துகளையும் மூடிமறைக்க முற்பட்ட கதவுகளே இப்போது உடைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. இனி அடியெடுத்து, ஆர்ப்பரித்து, எழுச்சியுடன் உள்ளே செல்ல வேண்டியது நாம்தான்.

**- அன்பு செல்வம்**



படிப்பகம்

www.padippakam.com



மூத்த வழக்கறிஞர் **கே. சந்துரு** அவர்களின் பேட்டி, இந்த இதழிலும்...

# "அம்பேத்கரியத்தில்தான் சமூக விடுதலை உள்ளது"

**கட்சியை விட்ட பிறகு வாழ்க்கை எப்படி இருந்தது?**

கட்சி என்னைக் கை கழுவி விட்டவுடன், நான் தனிமைப்படுத்தப்படுவேனோ என்ற சந்தேகம் எனக்கிருந்தது. ஆனால், அதையெல்லாம் பொய்யாக்கும் விதமாக என்னுடைய உற்றமும் சுற்றமும் பெருகின. அதுவரை என்னைத் தொழில் ரீதியாக அணுக முடியாது என்றெண்ணிய குழுக்களும், தனி நபர்களும் என்னிடம் அதிகமாகவே வந்தனர். சி.பி.எம். கட்சியினரே சிலர் ரகசியமாகவும் பலர் பகிரங்கமாகவும் என்னை அணுகினர். என்னுடைய வட்டம் விரிவடைந்தது. எனது அரசியல் சமூகப் பார்வையும் விசாலமானது.

மனித உரிமை வழக்குரைஞர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஆந்திரப் பிரதேசத்தின் மூத்த வழக்குரைஞர் திரு. கே.ஜி. கண்ணபிரான் தனது சமீபத்தில் வெளியான புத்தகத்தில் (The Wages of Impunity) இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: For human rights lawyers and activists to be really successful the first struggle is to establish credibility, and just as importantly, not to become a pawn of radical or militant groups. You should always be in a position to maintain your independence. இவ்வார்த்தைகள் என் எதிர்கால நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருந்தின.

**வழக்குரைஞர் தொழிலைத் தவிர வேறு ஏதேனும் நடவடிக்கைகளில் ஈடுபட்டீர்களா?**

பம்பாயிலிருந்து வெளிவரும் Lawyers Collective என்ற சட்ட உலகம் பற்றிய ஆங்கில மாத இதழில் ஆசிரியர் குழுவில் சேர்ந்தேன். அதில் சட்டங்கள் பற்றிய எனது ஆங்கிலக் கட்டுரைகள் வெளிவந்தன. அதுமட்டுமல்லாமல், அப்பொழுது உச்ச நீதிமன்ற நீதிபதியான வி. ராமசாமி அவர்கள், சண்டிகரில் தலைமை நீதிபதியாக இருந்தபோது செய்த சில நிர்வாக முறைகேடுகள், எனது கவனத்திற்கு வந்தன. நான் பஞ்சாப் மாநிலம் சென்று முழு விவரங்களையும் திரட்டி, அதுபற்றி ஒரு கட்டுரை எழுதினேன். அதையொட்டி அவரைப் பதவி நீக்கம் (Impeachment) செய்ய வேண்டும் என்ற இயக்கத்தை - நானும் உச்சநீதிமன்றத்தில் பணியாற்றும் எனது மரியாதைக்குரிய சகோதரி இந்திரா ஜெய்சிங் அவர்களும் ஆரம்பித்தோம். முதல் கூட்டமே சென்னை மயிலாப்பூரில் நடந்தது. அதன் பிறகு அவ்விவகாரம் சூடுபிடித்து, அகில இந்தியப் பிரச்சினையாக உருவெடுத்தது.

நாடாளுமன்ற நண்பர்கள் உதவியுடன் பதவி நீக்கப் பிரேரணை அம்மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதையொட்டி மூன்று நீதிபதிகள் விசாரணைக் குழு (Judges Inquiry Committee) நியமிக்கப்பட்டு, அக்குழுவும் அவர் மீது சுமத்திய குற்றங்கள் உண்மையென அறிக்கை வெளியிட்டது. ஆனால், நாடாளுமன்ற ஓட்டெடுப்பின்போது அன்றைய பிரதமர் பி.வி. நரசிம்மராவின் நரித்தனத்தால் அம்மனு தோற்கடிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் Impeachment முறை கடினமானது. அதற்குப் பதிலாக வேறு விசாரணை முறைகள் கொண்டு வர வேண்டும் என்ற விவாதங்கள், இப்பொழுது பரவலாகப் பேசப்படுகின்றன. ஒரு தமிழ் நாட்டு நீதிபதிக்கெதிராகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதற்காக என்னை 'விபீடணன்' என்று பெயரிடாமல் 'விடுதலை' ஏடு தாக்கியது. ஆக, நானும் ஒரு இதிகாசப் பாத்திரமாக்கப்பட்டேன்.

**தாங்கள் சந்தித்த வேறு சில அனுபவங்கள் பற்றிக் கூறுங்கள்?**

கும்பகோணத்தை அடுத்த குடிதாங்கி என்னும் கிராமத்தில், தலித் மக்கள் மயானத்திற்குப் பாதை கிடையாது. ஊருக்குள் எடுத்துச் செல்ல சாதி இந்துக்கள் (குறிப்பாக வன்னியர் பெரும்பான்மை) தடை. இதை மாற்ற, அப்பொழுது பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பல முயற்சிகளை மேற்கொண்டார். தானே தீர்த்து வைக்க முடியவில்லை என்றால், அங்கு தனது கட்சியைக் கலைப்பதாகக்கூட கூறினார். ஆனால், அவரது முயற்சிகள் எதுவும் எடுபடாததோடு - சாதி இந்துக்கள் கும்பகோணம் முன்சீப் கோர்ட்டில் தலித்துகளுக்கெதிராக, சிவில் வழக்கு தொடர்ந்தனர். அதைப்பற்றி கேள்விப்பட்ட நான், அப்படி வழக்கு தாக்கல் செய்ய சட்டத்தில் இடமில்லையென்றும், முன்சீப் அவ்வழக்கை விசாரிக்கக் கூடாது என்றும், உயர் நீதிமன்றத்தில் அரசியல் சட்ட ரீதியாக சீராய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்தேன்.

'ஒரு வழக்கைப் பதிவு செய்யும் முன் சிவில் நீதிபதி, அவ்வழக்கு செல்லத்தக்கது தானா என்றும், அதற்கு சட்டத்தில் தடை உள்ளதா என்றும் ஆராய வேண்டும்' என்ற எனது வாதத்தை எடுத்துக் கொண்டு, உயர் நீதிமன்றம் அவ்வழக்கை ரத்து செய்தது. இந்தத் தீர்ப்பை தமிழகமெங்கும் உள்ள கீழமை நீதிமன்றங்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்ப உத்தரவிடப்பட்டது. டாக்டர் ராமதாசுக்கும் சற்று சுமை குறைந்தது. அதைப் பற்றி கேள்விப்பட்ட அவர், விரைவிலேயே என்னிடம் வேறு ஒரு வழக்குக்கு அணுகினார்.

அன்றைய தமிழக அரசு, இலங்கை



படிப்பகம்


www.padippakam.com

அகதிகள் முகாமையெல்லாம் மூடிவிட்டு, கட்டாயமாக அவர்களை இலங்கைக்குத் திருப் பியனுப்ப உத்தரவிட்டது. இது, சர்வதேச அகதி கள் சட்டத்திற்கு விரோதமான செயலாகும். உடனே டாக்டர் ராமதாசு அதைத் தடுக்க வேண்டுமென்று விழைந்தார். நான் உயர் நீதிமன்றத்தில் அவர் சார்பாக ரிட்மனு ஒன்று தாக்கல் செய்து, அரசின் எதேச்சதிகார திட்டத்தை முறியடித்தேன். அப்பொழுது அவர் எனக் கொரு கடிதம் (8.8.92) எழுதினார். அதில் ஒரு பகுதி: "பாட்டாளி மக்கள் கட்சி வெறும் ஒரு அரசியல் கட்சியாக மட்டுமில்லாமல், மனித உரிமைகளுக்கான ஒரு இயக்கமாகவும் செயல்பட்டு வருகிறது. இப்பணிகளில் தங் களைப் போன்றவர்களின் ஆதரவும், ஒத்து ழைப்பும் என்றும் விரும்பி வேண்டுகிறோம்."

அப்படிப்பட்ட கடிதங்கள் அனுப்பிய அக்கட்சி, பத்து ஆண்டுகளில் மதவெறி பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டு வைத்தது மட்டுமில்லாமல், கடைசி வரை POTA சட் டத்தை ஆதரித்தும் வந்தது. மனித உரிமை பேசியவர்களின் சாயம், இவ்வளவு சீக்கிர மாக வெளிப்பட்டது நமது பாக்கியமே!

**தங்களின் குடும்ப வாழ்க்கை எப்படி யிருக்கிறது?**

1991இல் எனது திருமணம் நடந்தது. எனது மனதிற்குப் பிடித்த பாரதியை, சடங்கு மறுப்பு மணம் செய்து கொண்டேன். திரு மணங்களுக்குத் தேவையில்லாமல் அதிக செலவினங்கள் செய்யப்படும். இக்காலத்தில் எனக்குப் பதிவுத் திருமணக் கட்டணமே செலவுத் தொகையாயிற்று. நீதிபதிகள் யாரையும் அந்நிகழ்ச்சிக்கு நான் அழைக்க வில்லை. அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து ஓய்வுபெற்ற நீதிபதி திரு. டி. சத்தியதேவ் அவர்கள் அதை மறக்காமல் நினைவுபடுத்தி - அவர் ஓய்வுபெற்ற பிறகு 7 ஆண்டுகள் கழித்து எனக்கு கல்யாணப் பரிசு கொடுத்த விதம் என்னை நெகிழ வைத்தது. அதன் பின்னர் 1995இல் எங்கள் குழந்தை சக்தி பிறந்தாள்.



அதுவரை தனியனானவன் அத்துடன் மூவரா னோம். அன்பு மனைவி, ஆசைக் குழந்தை இவர்களது வருகைக்குப் பின்னர் எனது வேலைகளில் இன்னும் மெருகேறியது.


**உங்களது எழுத்துகள், வெளியீடுகள் பற்றி சொல்லுங்கள்?**

நான் சட்டப் பிரச்சினைகள் பற்றி பல நூல்களும் சிறு பிரசுரங்களும் வெளியிட்டி ருந்தாலும், என்னை மிகவும் கவர்ந்த செயல், நான், சட்ட உலகை சூழ்ந்திருக்கும் பனி மூட்டத்தை (Demystifying Law) வெளிச்சம் போட்டுக் காட்டி எழுதிய தொடர் கட்டுரை கள்தாம். 1994இல் 'ஜுனியர் விகடன்' வார இதழில், 'ஆர்டர் ஆர்டர்' என்ற தலைப்பில் என்னுடைய 28 கட்டுரைகள் வெளிவந்தன. பொது மக்களிடம் பேராத ரவைப் பெற்ற அக்கட்டுரைகள், சட்ட உலகில் பலரை முகம் சுளிக்க வைத்தது. என் மீது 'பார்கவுன்சில்' நடவடிக்கை எடுக்கவும் முயற்சிகள் நடந்தன. பல வழக்கறிஞர்கள் சங்கங்கள், என் மீது கிரிமினல் வழக்குத் தொடர முடிவெடுத்தனர். ஆனால், சாதாரண மக்களிடமிருந்து ஒவ்வொரு வாரமும் நான் பெற்ற நூற்றுக்கணக்கான கடிதங் கள்தான் எனக்கு டானிக். பல நீதிபதிகளும் என்னை மனதாரப் பாராட்டினர்.

வெறுப்புற்ற சில நீதிபதிகள், எனது வழக்குகளை அவர்களது நீதிமன்றத்தில் விசாரிக்க மறுத்தனர். சட்ட உலகின் மீது படர்ந்த புகை மூட்டங்கள் விலகியதா என்று எனக்குத் தெரியாது. ஆனால், சட்ட உலகில் உள்ளோர் பொது மக்களின் விமர் சனத்திற்கு அப்பாற் பட்டவர்கள் என்ற மாயை உடைந்தது.

**உங்களுக்கு வழக்கறிஞர் சங்கத் திடம் உறவு எப்படியுள்ளது?**

1996 இல் வழக்கறிஞர் சண்முக சுந்தரம் தாக்கப்பட்டபோது, உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்த நான், அவரது தாக்குதலுக்கு எதிராக மிகப் பெரிய இயக்கம் ஒன்றைத் தொடங்க முயற்சித்தேன். அப் பொழுது நீதிமன்றங்கள் கோடை விடுமுறை யில் இருந்த போதும், ஆளுநர் மாளிகைக்கு கண்டனப் பேரணி நடத்தி அவ்வியக்கம் வலுப்பெறச் செய்தேன். பிறகு எங்களது கோரிக்கையான சி.பி.அய். விசாரணை மற்றும் அவருக்கு மருத்துவச் செலவு ஆகிய வற்றிற்கு, உயர் நீதிமன்றத்தில் நானும் தோழர் கே.டி. பால்பாண்டியன் அவர்களும் வாதாடி வெற்றி பெற்ற பிறகும், சில சக்திகள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த விரும் பின. அதற்கு எதிர்ப்பு தெரிவித்த எங்களுக் கெதிராக 'கருங்காலி' என்று சில விஷமிகள் கோஷமிட்டனர். மனமுடைந்த கே.டி.பி. தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். முதன் முறையாக இந்தப் போராட் டங்களின் உண்மையான தன்மையைப் பற்றி எனக்குப் பல கருத்துகள் தோன்ற ஆரம்பித்தன. வழக்குரைஞர்கள் போராட்டம் எந்த அளவிற்கு நன்மை பயக்கின்றன; அதனால் பொதுமக் களுக்கு ஏற்படும் நன்மை, தீமைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று நான் விரும் பினேன். வழக்கறிஞர்களின் காலவரையற்ற போராட்டம், மனித உரிமை மீறல்களுக்கு அச்சாணியாகி, காவல் துறையின் அத்துமீறல் களுக்கு அச்சாரமாகி விடும் என்ற அச்ச உணர்வு எழுந்தது.



கே. சந்துரு தமது மனைவி, மகளுடன்

இதுபற்றி பல கூட்டங்களில் நான் பேச ஆரம்பித்தேன். என்னைப் பேசவிட மறுத் தனர். வேலை நிறுத்தத்திற்கு ஆரம்ப கர்த் தாவான நானா இப்படிப் பேசுகிறேன் என்று வியப்படைந்தனர். பிறகு 2000 ஆம் ஆண்டு வந்த உரிமையியல் நடைமுறை சட்டத் (Civil Procedure Code) திருத்தத்திற்கு எதிராக, அகில இந்திய அளவில் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடைபெற்றது. வக்கீல் சங்கக் கூட் டத்தில் என்னைப் பேசவிட மறுத்தனர். நான் உடனே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி' ஆகிய நாளிதழ்களில் சட்டத் திருத்தம், பொது மக்களுக்கு ஆதரவானதே என்று கட்டுரைகள் எழுதினேன். 'சன் டிவி'யில் சட்டத் திருத்தத் திற்கு ஆதரவாகவும், வக்கீல்களுக்கெதிராகவும் பேசினேன். உடனே என்னைக் கண்டனம்



படிப்பகம்

www.padippakam.com

செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போராட்டத்தின்போது, நான் கோர்ட்டுக்குச் செல்லவில்லை. ஆனால், இதே நிலைமை நீடித்தால் பொறுத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவெடுத்தேன். ஒரு சிறிய குழுவின் மிரட்டல்களால் மனித உரிமைகள் மீறப்படும்போது, அதைச் சந்திக்க நமக்கு மன பலம் வேண்டும்.

2002 ஆம் ஆண்டு அதேபோல், வக்கீல்கள் வேலை நிறுத்தம் நடக்கும்பொழுது சந்தர்ப்பங்கள் சில கிடைத்தன. திண்ணியம் கொடூரங்களுக்கெதிராக தொல். திருமாவளவன் நடத்திய பேரணிக்கு, காவல் துறை தடை விதித்தது. அதை எதிர்த்து வழக்குத் தொடர அவர் என்னை அணுகியபோது, வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அவருக்கோ இக்கட்டான சூழ்நிலை. ஆனால், நான் அவரை தைரியமூட்டி, அப்போராட்டத்தின்போது வழக்கு நடத்தி தடையை உடைத்தெறிந்து -



உயர் நீதிமன்றம் உத்தரவுடன் பேரணி திருச்சியில் நடைபெற உதவினேன்.

அதைப் போலவே, பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன் கைது மற்றும் அவர்கள் இயக்கம் தடை, அவற்றிற்கெதிராகவும் வேலை நிறுத்தக் காலங்களில் கோர்ட் படியேறி, வழக்கு நடத்தினேன். மனித உரிமை ஆர்வலர்களுக்கு எனது நியாயம் புரிந்தாலும், பல தோழர்கள் இன்னும் குழப்பத்திலேயே உள்ளனர். எனது சீனியர் வக்கீல் என்.ஜி.ஆர். பிரசாத் அவர்களும், வழக்கறிஞர் திருமிகு. வைகை அவர்களும் எனது போக்கைக் கண்டித்து, சி.பி.எம். நாளிதழில் ஒரு கட்டுரை எழுதினர். பா.ஜ.க.வின் ஊதுகுழல் என்றும், அமெரிக்க ஏஜெண்ட் என்றும், தங்களுக்கே உரிய பாணியில் அவர்களது கட்டுரையில் என்னை விமர்சனம் செய்திருந்தனர். வழக்கறிஞர்களின் அடிக்கடி வேலை நிறுத்தம் தேவைதானா என்ற விவாதம் தொடர வேண்டும் என்பதே எனது அவா.

**தங்களுக்கு 'சீனியர் அட்வகேட்' அந்தஸ்து எப்பொழுது கிடைத்தது?**

நான் பன்முகப்பட்ட பிரச்சினைகளில் ஈடுபட்டு வந்ததால், தினசரி தொழில் நடத்துவதும், அதையொட்டி ஒரு அலுவலகம் நடத்துவதற்கும் மிகவும் சிரமப்பட்டேன். அப்பொழுது உயர் நீதிமன்ற நீதிபதிகள் சிலர், 'மூத்த வழக்குரைஞர்' அந்தஸ்து எனக்கு வழங்க விருப்பப்பட்டனர். நானும் அதுவே சரியான முடிவாக இருக்குமெனக் கருதி, அதற்கு ஒப்புதல் அளித்தேன். பிறகு 12.11.1997 அன்று நடைபெற்ற உயர் நீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகளும் பங்கேற்ற (Full Court) கூட்டத்தில் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு எனக்கு 'சீனியர் அட்வகேட்' அந்தஸ்து வழங்கப்பட்டது. எனக்கும் அலுவலகம் நடத்தும் சுமையும் குறைந்தது. அகில இந்திய ரீதியில் பல உயர் நீதிமன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் சென்று, முக்கிய வழக்குகளை நடத்த ஒரு வாய்ப்புக் கிட்டியது.

**"மனித உரிமைகளுக்கான இயக்கமாக சொல்லப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் சாயம், இவ்வளவு சீக்கிரமாக வெளிப்பட்டது நமது பாக்கியமே."**

**நீங்கள் உயர் நீதிமன்ற நீதிபதியாக முடியாதா?**

அரசியல் சட்டப்படி, பத்து ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றினால், உயர் நீதிமன்ற நீதிபதியாக குறைந்தபட்ச தகுதி வந்து விடும். கடந்த அய்ந்து ஆண்டு காலமாக, எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு கிட்டினால், அதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீதிபதி வி.ஆர். கிருஷ்ண (அய்யர்) அவர்கள் வற்புறுத்தி வந்துள்ளார். அதேபோல, காலஞ்சென்ற நீதிபதி திரு. டி. சத்தியதேவ் அவர்களும் என்னிடம், வக்கீல் தொழில் நடத்தியது போதும்; சேவை மனப்பான்மையுடன் செயல்பட உன்னைப் போன்றவர்கள் தேவை என்றும் என்னிடம் உறுதி பெற்றார். ஆனாலும், என்னைப் போன்றவர்களுக்கு யார் அப்படிப்பட்ட பதவியை வழங்குவார்கள் என்பது, எனக்கு கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனால், தலைமை நீதிபதி திரு. என்.கே. ஜெயின் என்னை 2001 மார்ச் மாதம் தனது அறைக்கு அழைத்து, என்னை நீதிபதியாக்க விரும்புவதாகவும், அதற்கு நான் ஒப்புதல் தர வேண்டுமென்றார். நானும் அப்படியே ஒப்புதல் அளித்தேன்.

அது பின்னர் மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவில் (Collegium) விவாதித்து ஏற்கப்பட்டு, மத்திய அரசுக்கு எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதுபற்றிய செய்தியும் அப்பொழுது பத்திரிகைகளில் வெளியானது. ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டன. அந்தக் கோப்பு என்னவாயிற்று என்ற கேள்விக்கு இன்றுவரை யாரிடமும் விடையில்லை.

**உங்களுக்கு தொழிலில் சோர்வு தட்டவில்லையா?**

இதுபற்றி எனக்கு உடனே தோன்றுவது, சமீபத்தில் நடந்த இரு சம்பவங்கள். நான் சென்ற வாரம் உயர் நீதிமன்றத்திற்குச் செல்லும்போது, ஒரு சிறுவன் என்னிடம் துண்டு பிரசுரம் ஒன்றைக் கொடுத்தான். அதில் சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வுப் பயிற்சிக்கு, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை அணுகுமாறு போடப்பட்டிருந்த விளம்பரம் அது. அந்தத் துண்டு பிரசுரம் கொடுத்த சிறுவனுக்கு, ஏற்கனவே வக்கீலாக உள்ளவர்களுக்கு அது தேவையில்லை எனத் தெரிந்திருக்க நியாயமில்லை. சென்ற மாதம் ஜெர்மனி நாட்டிலிருந்து மூன்று வழக்கறிஞர்கள் எனது அலுவலகத்திற்கு வந்திருந்தனர். அதில் இருவர் பெண்கள். அவர்கள் என்னிடம் நான் தற்பொழுது நடத்திவரும் திரு. சி.பி. காஜுரோல் என்ற நேபாள மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் வழக்கைப் பற்றி கேட்டறிந்தனர். என்னிடம் விடை பெற்றுச் செல்லும்போது, அதில் பெண் வழக்கறிஞர் ஒருவர், ''28 ஆண்டு இந்த சட்டப் போராட்ட வாழ்க்கை, இன்னும் மன அயற்சியை உண்டு பண்ணவில்லையா?'' என்று கேட்டார். புதிதாக கற்றுக் கொள்வதற்கு சட்டங்கள் ஏராளம். அதே நேரத்தில் சோர்வடையாமல் இப்போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள டானிக்கும் தேவை. இதற்கிடையில்தான் உள்ளது எமது வாழ்க்கை.

**இறுதியாக?**

'கல், கற்பி, கலகம் செய்' என்று அண்ணல் அம்பேத்கர் படிப்பித்தார். எனது வாழ்க்கையை கிட்டத்தட்ட அப்படித்தான் அமைத்துக் கொண்டேன். ஆனால், அவர் குறிப்பிட்டது ஒரு தனிமனித முயற்சியை மட்டுமல்ல. ஒடுக்கப்பட்ட சமுதாயமே அந்த ஈர்ப்பு வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு முயற்சி செய்வதில்தான் உள்ளது - உண்மையான சமூக விடுதலை'. ●

நேர்காணல் : பாண்டியன், கோ. சுகுமாரன்

பேட்டி நிறைவு பெறுகிறது



படிப்பகம்

www.padippakam.com



## சங் பரிவாரின் சதி வரலாறு

விலை ரூ.60

"நாட்டின் பன்முகத்தன்மையைச் சிதைத்து - தனது கொள்கை, கோட்பாடு, கலாச்சாரம் முதலியவற்றை அனைவர் மீதும் திணிப்பதுதான் சங் பரிவாரின் குறிக்கோளாகும். இட்லரிடமும், முசோலினியிடமும் நேரடியாகப் பயின்ற பாசிச பாடங்களை, ஒவ்வொன்றாக அது நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து, அதன் பணியை இன்னும் கடைமாக்கியுள்ளது. இதன் பிரதிபலிப்புகளை நாம் அன்றாடம் கவனித்து வந்தாலும், அதன் பின்னணியில் உள்ள ஆபத்துகளை உணராமல் வாழ்ந்து வருகிறோம். இதை உணர்த்தும் பணியை இந்நூல் செய்கிறது."





■ ஆசிரியர் : **விடுதலை க. ராசேந்திரன்** ■ வெளியீடு : தந்தை பெரியார் திராவிடர் கழகம், 27, கே.எம்.என். தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28 ■ பக்கங்கள் : 232

●●

## குடும்பமும் அரசியலும்

விலை ரூ. 10

"சாதி மறுப்புக்கான ஒரே வழி, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டிற்குப் போராடுவதே. குறிப்பாக, தலித் மக்கள் என அறியப்படும் அட்டவணைச் சாதியினர், சமூகத்தின் ஏனைய சாதி மக்கள் அனைவரோடும் சமமாக வாழும் நாளே, தமிழகத்தின் பொன்னாள் ஆகும். ஆகவே, தலித் மக்களின் விடுதலைக்கு நம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதே, சாதி மறுப்பில் முதல்படி என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்."





■ ஆசிரியர் : **சுப. வீரபாண்டியன்** ■ வெளியீடு : தமிழ் முழக்கம், 2/66, நூறடிச் சாலை, வடபழனி சென்னை - 600 026 ■ பக்கங்கள் : 48

●●

## கழிசடை

விலை ரூ.90

"டாக்டர் அம்பேத்கர் நகர் பெயர்ப் பலகையை வைத்த பிறகுதான் - இந்தக் குப்பத்துக்கே தனி மரியாதை. அனாவசியமாக குடிசையைக் காலி பண்ணச் சொல்லி யாரும் தொல்லை கொடுப்பது கிடையாது. குப்பத்துக்குப் பக்கத்தில் இருக்கும் 'உயர் சாதி'க்காரர்கள் கூட வாயடங்கிப் போனார்கள். கட்சிக்காரர்கள் கூட இந்தக் குப்பத்திற்கு ரோடு போடணும்; கால்வாய் கட்டணும் என்றெல்லாம் மேடை போட்டு பேசுகிறார்கள். தாசில்தார் கூட எல்லோருக்கும் பட்டா கொடுக்கப்போவதாக வீட்டுக்கு வீடு வந்து அளந்து கொண்டு போனார். சுதந்திரம் கிடைத்த உடனே ஏற்பட்ட சந்தோஷத்தைப் போல, இப்போது இங்கே இருக்கிற எல்லோருக்கும் சந்தோஷம்."




■ ஆசிரியர் : **அறிவழகன்** ■ வெளியீடு : பல்கலைப் பதிப்பகம், 25, தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 24 ■ பக்கங்கள் : 248

## கையால் மலம் அள்ளுதல் ஒழிப்பு

சட்ட ரீதியான ஓர் அணுகுமுறை




"தீண்டாமைக் கொடுமையின் உச்சகட்ட வடிவமாக உள்ள கையால் மலம் அள்ளும் வேலை - நாகரீக சமுதாயத்தைக் கட்டியமைப்பதைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, தீண்டாமை 1950இலேயே ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டாலும், இன்னமும் கையால் மலம் அள்ளும் தொழிலை - அரசு உள்ளாட்சி அமைப்புகளும், நகராட்சி நிர்வாகமுமே கடைப்பிடித்து வருகின்றன. இதைத் தடை செய்யும் சட்டத்தைப் பொறுத்தமட்டில், செவிடாகிப்போயுள்ள மத்திய, மாநில அரசுகளின் செவிகளுக்கு இச்செய்தியைக் கொண்டு சென்று - இச்சட்டத்தையும், ஆணையத்தையும் செயல்பட வைப்பதே, இன்று மனித உரிமை ஆர்வலர்களின் முன்னுள்ள தலையாயப் பணியாகும்."

■ ஆசிரியர் : **பாண்டியராசன்** ■ வெளியீடு : மக்கள் கண்காணிப்பகம், 6, வல்லபாய் சாலை, சொக்கி குளம், மதுரை - 625 002 ■ பக்கங்கள் : 36

●●

## நோட்டம்




விலை ரூ.50

"கவிதை சிறுகதை, நாவல், கட்டுரை எதுவானாலும் சரி, அது படிப்பவர்களுக்குப் புரிய வேண்டும் என்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். அதற்காகப் படைப்புகளுக்கே உரிய அழகியல் தன்மையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதல்ல என் வாதம். அலங்காரங்களுக்காக விஷயங்களைத் தட்டி, வளைத்து, நசுக்குவதில் எனக்கு உடன்பாடில்லை. எதன்பொருட்டு அந்தப் படைப்பு உருவானதோ, அந்த அடிப்படை நோக்கத்தைப் படைப்பாளியே வெட்டிச்சாய்ப்பதில் எனக்குச் சம்மதமில்லை. நம்மிடையே அலங்காரக்காரர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால், விஷயங்களைத் தெளிவாகவும் அதே நேரத்தில் முனை மழுங்காமலும் சொல்லக்கூடியவர்கள் மிகக் குறைவு."

■ ஆசிரியர் : **சுகதேவ்** ■ வெளியீடு : செம்புலம் பதிப்பகம், 23, பாண்டிய விநாயகர் கோயில் சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை - 625 001 ■ பக்கங்கள் : 164

●●




## கறுப்புச் சிகரம் - புதினம்

விலை ரூ.85

"ஆரம்பத்தில் குப்பவுக்கு தான் அழகி என்ற கர்வமெல்லாம் இல்லை. ஆனால், மற்றவர்கள் அவளது அழகைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் மற்றவர்கள் மத்தியில், தான் மட்டும் பிரத்யேகமாகப் பேசப்படும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுவிட்ட தன் விசேஷத்தை எண்ணிப் பெருமிதம் கொள்வாள். இப்படி மற்றவர்கள் சிறப்புநிலை கொடுத்துப் பேசப்பேச, அவளையும் அறியாமல் ஒரு கர்வம் அவளிடம் ஒட்டிக் கொண்டது."

■ ஆசிரியர் : **பரிக்கல் என். சந்திரன்** ■ வெளியீடு : சக்தி நிலையம், 7, வில்லியம் லே-அவுட், 2 ஆவது தெரு, கே.கே. சாலை, விழுப்புரம் - 605 602 ■ பக்கங்கள் : 264



படிப்பகம்

www.padippakam.com



# புரையோடியிருக்கும் பொது சுகாதாரம்

■ அழகிய பெரியவன்

மக்களால் தூக்கி எறியப்பட்ட முந்தைய இந்துத்துவ ஆட்சியில் - செய்தித் தாள்களின் வழியாக அவ்வப்போது ஒரு செய்தி, அதிக முக்கியத்துவத்துடன் வெளியாகிய வண்ணம் இருந்தது. 'குருடர்கள் பார்க்கிறார்கள்; செவிடர்கள் கேட்கிறார்கள்; முடமானவர்கள் நடக்கிறார்கள்' என்பது போன்ற எழுப்புதல் கூட்டச் செய்தி மாதிரியானது அச்செய்தி. அது இதுதான் : பாகிஸ்தானிலிருந்து கண் சிகிச்சைக்காக இந்தியா வந்த சிறுமி பார்வை பெற்றாள்; பாகிஸ்தானிலிருந்து இதய மாற்று அறுவை சிகிச்சைக்கு (அவர்களுக்கு இதயமில்லை என்பது, இந்து இந்தியர்களின் நம்பிக்கை!) வந்த சிறுவனுக்கு வெற்றிகரமாக சிகிச்சை நடந்தது.

'இந்தியா ஒளிர்கிறது' என்று புளுகிய பெரிய பொய்யின் ஒரு பகுதிதான் அச்செய்திகளும். (இந்த விளம்பர வாசகம், ஒரு வெளிநாட்டு விளம்பர நிறுவனத்தால் உருவாக்கித் தரப்பட்டது. இதில் எல்லாம் பா.ஜ.க.வுக்கு சுதேசிய கவுரவம் போய்விடவில்லை.) தேர்தல் நேரத்தில் மக்கள் பத்திரிகையாளர் பி. சாய்நாத் சொன்னதைதான் இங்கே நினைவு படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. 'வெறும் மூன்று சதவிகிதம் இந்தியாதான் ஒளிர்கிறது; மற்றவை இருண்டிருக்கிறது' என்றார் அவர். இந்தத் தொடரும் உண்மை, மீண்டும் மீண்டும் நிரூபணமாகிக் கொண்டேதான் இருக்கிறது.

வெளிநாட்டினர் இந்தியா வந்து சிகிச்சை பெறுவது இயல்பான ஒன்று. ஆனால், அச்செய்தியைப் பெரிதுபடுத்தி உண்மையான இந்தியாவின் சுகாதார நிலையை மறைக்கிறது அரசு. அடல் பிகாரி வாஜ்பேயிக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நடந்தால், பிரதமர் அலுவலகத்தையே மருத்துவமனைக்கு அருகில் உள்ள உயர் நட்சத்திர உணவு விடுதிக்கு மாற்றிக் கொள்ளவும், முரசொலி மாறனின் இதய நோய்க்கு செலவான பலகோடி ரூபாய் மருத்துவச் செலவினை ஏற்றுக் கொள்ளவும் அரசு தயாராக இருக்கிறது.

சவுரவ் கங்குலிக்கோ, சச்சின் டெண்டுல்கருக்கோ காயம் ஏற்பட்டால், இந்தியாவே நோய்வாய்ப்பட்டு விட்டது போல செய்திகள் வெளியிடப்படுகின்றன. அவர்களுக்குப் பல கோடி ரூபாய் செலவில், மருத்துவ நிபுணர்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து சிகிச்சை அளிக்கவும் - நம் நாட்டில் சூழ்நிலை இருக்கிறது. குற்றம் புரிந்துவிட்டு அரசியலுக்கு வந்த தலைவர்களும், அரசியலுக்கு வந்து குற்றம் புரியும் தலைவர்களும், தயாரிப்பாளர்களை சுட்டுத் தள்ளும் கதாநாயக நடிகர்களும், கைதாகும்போது நோய்வாய்ப் பட்டால் உடனடியாக அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை தர, நம் நாட்டு உயர் சிகிச்சை மருத்துவமனைகளின் கதவுகள் அகலத் திறந்துள்ளன.

ஆனால், இருண்டிருக்கும் இந்தியாவின் மக்களான அடித்தட்டு மக்களின்



படிப்பகம்

www.padippakam.com

**❝ எண்பது சதவிகித மருத்துவ வசதிகள் நகரங்களில் உள்ளன. ஆனால், எண்பது சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். ❞**

சுகாதார நிலையும், அவர்களுக்குக் கிடைக்கும் மருத்துவ வசதிகளும் எப்படி இருக்கின்றன? கேட்பாரின்மை, மருந்தின்மை, அலட்சியம், ஊழல் போன்ற கொடும் நோய்களால் புரையோடிக் கிடக்கிறது - இந்தியப் பொது சுகாதாரம். இந்திய மருத்துவத் துறைக்கு உடனடி அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது.

வெறிநாய்க்கடி ஊசிக்காக ஒரு ஏழை முதியவர் - அரக்கோணம், காஞ்சிபுரம், செங்கற்பட்டு எனப் பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு அலைந்துவிட்டு - தனியார் மருத்துவமனையில் 300 ரூபாய் கொடுத்து அதைப் போட்டுக் கொண்ட செய்தியை நாம் படித்திருப்போம் - 'தினமலர்' 23.6.2004. வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டுக்கு அருகில், தலித் முதியவர் ஒருவருக்கு நேர்ந்த கதை வேறு மாதிரியானது. அவருக்கு ஒரு விதத்தில் இடுப்பு எலும்பு முறிந்து போனது. அரசு மருத்துவமனையில் இருந்த முடநீக்கியல் நிபுணர், 500 ரூபாய் கையூட்டாகப் பெற்றுக் கொண்டு தான் அவரை வந்து பார்த்து சிகிச்சையைத் தொடங்கினார். இவை சில எடுத்துக்காட்டுகள்தான். இவைகளைப் போன்ற பல ஏழைகளின் கதைகள், வெளிச்சத்துக்கு வராமலேயே இருக்கின்றன.

அரசு மருத்துவமனைகளில் போதிய மற்றும் உயிர் காக்கும் அவசிய மருந்துகளும், மருத்துவ வசதிகளும் இல்லை. இருக்கின்ற சில வசதிகளைப் பெறவும் ஏழை மக்கள் மருத்துவர்களுக்கும், மருத்துவப் பணியாளர்களுக்கும் கையூட்டு தர வேண்டியுள்ளது. அடித்தட்டு மக்கள், அரசு மருத்துவமனைகளை நாடுகின்ற போது அலட்சியம், கவனிப்பாரின்மை, காலதாமதம் ஆகியவற்றால் அலைக்கழிக்கப்படுகின்றனர். இது, நோயைவிடக் கொடுமையானது. வெளிநாடுகளிலிருந்து இந்தியா வந்து இதய மாற்று அறுவை சிகிச்சைகளை செய்து கொள்ளும் பல நோயாளிகளுக்கு, இங்கே மிகக் குறைந்த செலவில் சிகிச்சை வசதிகள் கிடைக்கின்றன. இதை மனதில் கொண்டு மய்ய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் ரேணுகா சவுத்திரி, 'சுகாதார சுற்றுலாவை' மேம்படுத்தி அன்னிய செலாவணியைப் பெருக்க திட்டம் தீட்டியிருப்பதாக அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

''எண்பது சதவிகித மருத்துவ வசதிகள் நகரங்களில் உள்ளன. ஆனால், எண்பது சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்த இடைவெளியை அரசு சரி செய்யும்'' என்று கூறியிருக்கிறார், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி. இந்த இரு அமைச்சர்களின் கருத்துகளுமே - நமக்கு அரசின் சுகாதாரம் குறித்த அக்கறையையும், நிலையையும் காட்டப் போதுமானதாகும். அரசு இங்கிருக்கும் மக்களுக்கு குறைந்த செலவில் மருத்துவ வசதிகளை செய்து தராமல், வெளிநாட்டினர்களைப் பற்றி கவலை கொண்டிருக்கிறது. கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளில் போதிய வசதிகள் எதுவும் இல்லை. இது ஒரு முரண்பட்ட அவல நிலை!

இந்தியாவில், பொது சுகாதார கட்டமைப்பு வசதிகளான மருத்துவமனைகளும், துணை சுகாதார நிலையங்களும் அதிகம். இங்கு சுமார் 17,000 மருத்துவமனைகளும், 24,000 ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. 1,40,000 துணை சுகாதார நிலையங்கள் நாடெங்கும் இயங்கிக் கொண்டுள்ளன. இவற்றை ஒழுங்காகப் பராமரித்தாலே நாட்டில் உள்ள பல நோய்களை அடியோடு ஒழிக்க முடியும்; பல நோயாளிகளைக் காப்பாற்ற முடியும்.

ஆனால், 38 சதவிகிதம் ஆரம்ப சுகாதார நிலையங்களில்தான் போதிய மருத்துவப் பணியாளர்கள் உள்ளனர். ஒவ்வொரு பத்து துணை சுகாதார நிலையங்களில் எட்டு நிலையங்களில் மருந்துகளே கிடையாது. சுமார் 34 சதவிகித மய்யங்களில் மட்டும்தான் பிள்ளைப் பேற்றினை கவனிக்க முடியும். மூன்று சதவிகித மய்யங்களில்தான் பாதுகாப்பான கருக்கலைப்பு செய்யும் வசதிகள் உள்ளன. இவைகளில் முக்கால் பாகத்திற்கும் மேலான நிலையங்களில் - குழந்தை மருத்துவர்களோ, வேறு சிறப்பு மருத்துவர்களோ இல்லை.

இந்த நிலை, அரசு பொது சுகாதாரம் பற்றி கொண்டிருக்கும் பாராமுகத்தினை மிகத் தெளிவாக்கி காட்டுகிறது. மக்களின் உடல் நலனைப் பாதுகாப்பதிலும் அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை - மிகக் குறைந்த விலையிலோ, இலவசமாகவோ செய்து தருவதிலும் அரசுக்கு கடமை இருக்கிறது. நாட்டின் எல்லா குடிமக்களும் போதிய மருத்துவ வசதிகளைப் பெறுவது என்பது, அடிப்படை உரிமை. ஆனால், உடைமையாளர்களின் அரசு மக்களின் உரிமைகளை மதிப்பதில்லை.

நோயுற்ற நிலை - 1998 - 99 (சதவிகிதத்தில்)

| குறியீட்டளவு | தலித் | பிற்படுத்தப் பட்டோர் | பிற |
|---|---|---|---|
| | 1998 - 99 | 1998 - 99 | 1998 - 99 |
| 1. பரவும் முறை | | | |
| (i) காற்று வழி பரவும் நோய்கள் | 19.6 | 19.1 | 18.7 |
| (ii) காய்ச்சல் | 29.4 | 28.1 | 30.40 |
| (iii) பேதி | 19.8 | 18.3 | 19.10 |
| 2. ரத்த சோகையால் பாதிக்கப் பட்டுள்ள குழந்தைகள் | 78.3 | 72.00 | 72.7 |
| 3. குழந்தைப் பருவத்தில் பொது மருத்துவ சேவை பெற்றவர்கள் | 87.2 | 83.0 | 77.3 |
| 4. பொது மருத்துவ வசதிகள் மூலம் பேதிக்கு சிகிச்சை பெற்றவர்கள் | 64.6 | 63.8 | 66.10 |
| 5. வயதுக்கேற்ற எடை | | | |
| (i) % கீழ் - 3 SD | 21.2 | 18.30 | 13.80 |
| (ii) % கீழ் - 2 SD | 53.5 | 47.3 | 41.1 |

ஆதாரம் : தேசிய குடும்ப சுகாதார ஆய்வு 1998 - 99



படிப்பகம்

www.padippakam.com

**❝ நாட்டின் எல்லா குடிமக்களும் போதிய மருத்துவ வசதிகளைப் பெறுவது என்பது, அடிப்படை உரிமை. ஆனால், உடைமை யாளர்களின் அரசு மக்களின் உரிமைகளை மதிப்பதில்லை. ❞**

'அனைவருக்கும் சுகாதாரம்' என்ற முழக்கத்துடன் முந்தைய சோவியத் யூனியனின் 'அல்மா அட்டா'வில் 1978ஆம் ஆண்டு நடந்த உலக சுகாதார மாநாட்டில், இந்தியா கையெழுத்திட்டிருக்கிறது. இவ்வாண்டில் 'அல்மா அட்டா பிரகடன'த்தின் 25 ஆம் ஆண்டு விழா, உலகெங்கிலும் கொண்டாடப்படவும், நினைவு கூறப்படவும் உள்ளது. ஆனால், இந்திய அரசுக்கோ, ஏழை மக்களை மருத்துவ சேவை என்ற பெயரில் சுரண்டும் ஒட்டுண்ணி மருத்துவர்களுக்கோ, இதைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், 'அல்மா அட்டா' பிரகடனத்தைப் பற்றி தெரியாத மருத்துவர்கள் தான் இந்தியாவில் நிறைந்திருக்கின்றனர். மருத்துவர்களை கடவுளாக நினைக்கின்றனர் நம் மக்கள். இந்தியக் கடவுளர்களைப் போலவே, சாதியப் படிநிலையைப் பார்க்கிறவர்களாகவும் - கையூட்டு எனும் காணிக்கை அளித்தால் தான் அருள் பொழிபவராகவும் நம் 'மருத்துவக் கடவுளர்களும்' இருக்கின்றனர்.

இந்தியா தனது உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 5.2 சதவிகிதத்தைத்தான் பொது சுகாதாரத்துக்கென செலவழிக்கிறது. இந்தியாவின் மொத்த செலவுகளில் 17 சதவிகிதம், பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத்துக்காக செலவழிக்கப்படுகிறது. தமிழ் நாட்டின் நிகர வருவாயில் மருத்துவத்திற்கென சுமார் 1.81 சதவிகிதமும், பொது சுகாதாரத்துக்கென சுமார் 2.99 சதவிகிதமுமே செலவழிக்கப்படுகிறது - 2001 - 2002 நிதிநிலை அறிக்கை. இச்செலவுகளும்கூட ஒரு சில துறைகளுக்கே சென்று சேர்கின்றன. எய்ட்ஸ் ஒழிப்பு, போலியோ ஒழிப்பு போன்றவைகளுக்குப் போதிய நிதியை அரசு ஒதுக்குவதில்லை. இவை பெரும்பாலும் வெளிநாடு மற்றும் உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

மும்பையில் முதல் 'எய்ட்ஸ்' நோயாளியைக் கண்டறிந்த டாக்டர் ஈஸ்வர் கிலாடா, ''அரசில் இருக்கும் யாருமே எய்ட்ஸ் பற்றி அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ஒரு பைசாகூட எய்ட்ஸ் நோயாளிகளுக்காக அரசு செலவழிப்பதில்லை'' என்று கூறியிருப்பதைக் கருத்தில் கொண்டால், அரசின் மெத்தனப் போக்கைப் புரிந்து கொள்ள முடியும். ('பிரன்ட்லைன்', சனவரி 2004)

இன்று இந்தியாவின் பொது சுகாதார நிலைமைகள் பற்றி நமக்குக் கிடைக்கும் புள்ளி விவரங்கள், நம்மை அச்சுறுத்துவதாக உள்ளன. ஆப்பிரிக்க நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் அதிக 'எய்ட்ஸ்' நோயாளிகள் இருக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை சுமார் 45 லட்சத்து 80 ஆயிரம். இவர்களுக்காக அளிக்கப்படும் ஏ.ஆர்.வி. எனப்படும் வைரஸ் எதிர் உயிரி மருந்துக்கான 1500 ரூபாயை (ஒரு மாதத்துக்கு) செலவழிக்கத் திராணியற்றவர்களே - இந்நோயாளிகளில் பெரும்பான்மையினர். 'ஹெபடைடிஸ் பி' மற்றும் 'சி' நோய்களால் பாதிக்கப்பட்டோர் 5 கோடியே 80 லட்சம்.

நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையோ 3.4 கோடி. பல்வேறு வகை புற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், சுமார் 30 லட்சம் பேர்கள். காச நோயினால் பாதிக்கப்படுவோர் இந்தியாவில்தான் அதிகமாக இருக்கின்றனர். இவர்கள் சுமார் 35 லட்சம் பேர். இதில் 5 லட்சம் பேர் ஆண்டுதோறும் இறக்கின்றனர். போலியோ மீண்டும் பரவத் தொடங்கியுள்ளது. 2002இல் மட்டும் 1,600 குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட்டதாகப் பதிவாகியுள்ளது. இது, உலக அளவிலே 83 சதவிகிதம்! ஒரு குழந்தைக்குக் கொடுக்கப்பட வேண்டிய 10 தவணை போலியோ சொட்டு மருந்துகளின் மதிப்பு ரூ. 1,500 ஆகிறது. இந்தியாவில் ஒரு ஆண்டுக்குப் பிறக்கும் 2 கோடியே 50 லட்சம் குழந்தைகளுக்கு, பெருந்தொகையை இந்தியா செலவிட வேண்டும். இவ்வளவு தொகை இங்கே செலவழிக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு ஆண்டும் மலேரியா 26 லட்சம் மக்களைத் தாக்குகிறது. தொற்று நோய்களான காலரா, காசநோய், மலேரியா, மஞ்சள் காய்ச்சல், தூக்க நோய், டெங்கு காய்ச்சல் ஆகியவை தீவிரமாக இந்தியாவில் மீண்டும் பரவத் தொடங்கி

பெண்களின் சுகாதாரம் - 1998 - 99 (சதவிகிதத்தில்)

| குறியீட்டளவு | தலித் | பிற்படுத்தப்பட்டோர் | பிற |
|---|---|---|---|
| | 1998 - 99 | 1998 - 99 | 1998 - 99 |
| 1. ரத்த சோகையால் பாதிக்கப் பட்டுள்ள பெண்கள் | 56.00 | 50.7 | 47.6 |
| 2. முன்பருவ பேறு காலப் பரிசோதனை | 61.80 | 65.2 | 72.1 |
| 3. டெட்டனஸ் தடுப்பூசி போட்டுக் கொண்ட பெண்கள் | 74.2 | 76.8 | 80.0 |
| 4. வீட்டில் பிரசவம் பார்க்கும் பெண்கள் | 72.1 | 62.00 | 59.00 |
| 5. பிரசவத்தின் போது உதவி | | | |
| (i) From TAB (Dia) | 37.7 | 34.9 | 31.4 |
| (ii) பொது சுகாதார மய்யம் | 36.00 | 44.9 | 48.9 |
| 6. பின்பருப பேறுகாலப் பரிசோதனை | 17.0 | 15.6 | 18.30 |

குழந்தை இறப்பு விகிதம் - 1998 - 99 (சதவிகிதத்தில்)

| குறியீட்டளவு | தலித் | பிற்படுத்தப்பட்டோர் | பிற |
|---|---|---|---|
| | 1998 - 99 | 1998 - 99 | 1998 - 99 |
| 1. பிறந்தவுடன் இறக்கும் குழந்தை | 83.00 (88.0) | 76.00 (82) | 61.8 (69) |
| 2. சிறு குழந்தை இறப்பு | 39.5 | 29.00 | 22.2 |
| 3. 5 வயது குழந்தை இறப்பு | 119 | 103 | 82 |

ஆதாரம் : தேசிய குடும்ப சுகாதார ஆய்வு 1998 - 99



படிப்பகம்

www.padippakam.com

யுள்ளன. ஏழை பணக்காரர் விகிதம் ஒன்றுக்கு பத்து என்று இருக்கும் இந் நாட்டில், பெரும்பாலான நோய்கள் ஏழைகளையே தாக்குகின்றன. ஏழை களிலும் ஒடுக்கப்பட்டோரான தலித்து களையும், பெண்களையும், குழந்தை களையுமே தாக்குகின்றன. இந்தியா வில் பிறக்கும் குழந்தைகளில் ஏழைக் குழந்தைகளான சுமார் 47 சதவிகிதத் தினர் ஊட்டச் சத்து குறைபாடுடனேயே வளர்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,30,000 பெண்கள் குழந்தை பேறின்போது இறக்கின்றனர். ஆயிரம் குழந்தைகளுக்கு சராசரியாக 89 பேர் இறந்து போகின்றனர்.

நோய்களிலிருந்து தம்மை தற்காத்துக் கொள்ள திராணியற்றவர்களாக தலித் மக் கள் உள்ளனர். அவர்களுக்கு இன்று இருக்கும் ஒரே ஆதாரம் அரசு மருத்துவ



ஆர் ஆர். சீனிவாசன்

களுக்கும் கிட்டாமல் போய்விடு கிறது.

மருத்துவத் துறையின் தனியார்மய மாக்கல், அதிக அளவிலான மருத்து வக் கட்டணங்கள், மருத்துவ மானி யங்களைக் குறைக்க வலியுறுத்தும் 'காட்' மற்றும் 'சாப்' பன்னாட்டு நெருக்கடிகள் இன்று கிராமப்புற ஏழைகளையும், தலித்துகளையும் கடு மையாகப் பாதித்துக் கொண்டுள்ளன. பொது சுகாதாரத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு, மருத்துவ சேவைகளின் மீது அரசின் நெறிப்படுத்துதல், கிராமப் புறங்களுக்கும் நவீன மருத்துவ வசதிகள் சென்று சேர்தல், மருந்துகள் விலை குறைப்பு, மருத்துவப் பணியா ளர்களிடம் இருக்கும் மனித நேயமற்ற கையூட்டு பெறும் மனோபாவம் ஆகியவைகளை அரசு, உடனடியாகக்

**“மக்களின் சுகாதாரத்துக்காக செலவழிக்கப்படும் பணம், பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒரு முதலீடு. இந்நாட்டின் 19 சதவிகித உழைக்கும் ஏழை தலித் மக்கள் நோயாளிகளாக இருந்தால், இந்தியாவின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படும்.”**

மனைகள்தான். தங்களின் சுகாதார தேவைகளை சந்திக்க முடியாமல் தவிக்கும் தலித்துகளின் எண்ணிக்கை, பெருகி வருவதாகப் புள்ளி விவரங் கள் சொல்கின்றன. இதற்குக் காரணம், கட்டுக்கடங்காது போய்க் கொண்டி ருக்கும் மருந்துகளின் விலையேற்றம். கிராமப்புறத்தில் சுமார் 40 சதவிகித மக்கள் மருத்துவச் செலவுகளுக்காக கடனாளியாகி தவித்துக் கொண்டிருக் கின்றனர்.

வாங்கும் திராணியற்று, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து கொண்டி ருக்கும் தலித்துகள், பல்வேறு ஒடுக்கு முறைகளுடன் நோய்த் தாக்குதல்களையும் சேர்த்து அனுபவித்துக் கொண்டிருக் கின்றனர். கடந்த 99 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தேசிய குடும்ப நல ஆய்வு விவரங்கள், தலித்துகள் பிறரைக் காட்டிலும் அதிகமாக நோய்களால் தாக்கப்படுவதை நமக்குக் காட்டுகின்றன. (பார்க்க அட்டவணை) தலித் குழந்தை களின் இறப்பு விகிதம் 39 சதவிகிதமும் ஆகும். பிற சமூகக் குழந்தைகளின் இறப்பு விகிதமோ 22 சதவிகிதம். சுமார் 56 சதவிகித தலித் பெண்கள், ரத்த சோகை நோயுடையவர்களாக உள்ளனர். 40 சத விகித பிள்ளைப் பேறுகள், மருத்துவச்சி களாலேயே பார்க்கப்படுவதால் இறந்து போகும் தலித் பெண்கள் அதிகம்.

தலித்துகளின் உயிர்கள் மதிப்பில் லாதவை என்று பிற சமூகத்தினரால் கருதப்படுவது போல, அவர்கள் உடல் நலனும் முக்கியமற்றது என்று அரசு கருதுகிறது போலும். உலக சுகா தார நிறுவனத் தலைவர்களில் ஒருவ ரான ஜெப்ரியின் கருத்து ஆழமானது. ''மக்களின் சுகாதாரத்துக்காக செல வழிக்கப்படும் பணம், பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒரு முதலீடு'' என்கிறார் ஜெப்ரி.

இந்நாட்டின் 19 சதவிகிதம் உழைக் கும் ஏழை தலித் மக்கள் நோயாளிகளாக இருந்தால், இந்தியாவின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது உண்மை. ஆனால், அரசு மருத்துவத் துறையைப் பொருத்தமட்டில், நகர்ப் புறங்களில்தான் அதிக அக்கறை காட்டுகிறது. படுக்கை வசதியுடனான மருத்துமனைகள், மருத்துவர்களின் எண்ணிக்கை, அரசு செலவழிக்கும் மருத்துவ மற்றும் பொது சுகாதாரத் துக்கான நிதி அனைத்தும் நகர்ப்புறங் களில் அதிகம் காணப்படுகின்றன. இதன் மூலம் எந்த நவீன வசதிகளும் கிராமப்புற தலித் மக்களுக்கும் ஏழை களுக்கும் கிட்டாமல் போய்விடு... கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

டாக்டர் அம்பேத்கர், தனது நினை வலைகளில் - ஒரு பள்ளி ஆசிரியருக்கு நேர்ந்த அவலத்தைப் பற்றி குறிப்பிடு கிறார். ('அம்பேத்கர் பேச்சும் எழுத் தும்' நூல் தொகுப்பு : 25) ஒரு தலித் ஆசிரியரின் மனைவிக்கு குழந்தை பிறக்கிறது. அவருக்கு 'நிமோனியா' காய்ச்சல் கண்டிருக்கிறது. அந்த ஊரில் உள்ள மருத்துவர், ஒரு தலித் பெண் ணுக்கு சிகிச்சை அளிக்க விரும்ப வில்லை. அதிக கட்டணம் தர அந்த தலித் ஆசிரியர் ஒப்புக் கொண்ட பிறகே வந்து சிகிச்சை தருகிறார். அம்மருத்து வர் அப்பெண்ணைத் தொடுவதில்லை. ஒரு இஸ்லாமியரைத் துணைக்கு வைத் துக் கொண்டே சிகிச்சை அளிக்கிறார். சிகிச்சைக்காகப் பணம் பெற்றுக் கொண்ட பிறகும், மருத்துவம் பார்க்க மறுத்து சென்று விடுகிறார் மருத்துவர். தலித் பெண் இறக்க நேரிடுகிறது.

அந்த மருத்துவர் இடத்தில் நாம் அரசைப் பொருத்திப் பார்த்துக் கொள் ளலாம். இப்போது இருக்கும் அரசின் நிலைப்பாடு தொடர்ந்தால், இந்த சம் பவம் போலத்தான் தலித்துகள் நிலை யும் ஆகும். ●



படிப்பகம்

www.padippakam.com



அற்புதம்

# அற்புதத் தாய்

"

'அய்யோ'! கிட்டத்தட்ட வாய்விட்டே அலறிவிட்டார் அற்புதம். அவரது கை அவரையும் அறியாமல் அவர் வாயைப் பொத்தியது. கையிலிருந்த கடிதம் கீழே விழுந்தது. உடலெங்கும் ஒரு நடுக்கம். கை கால்கள் எல்லாம் நடுங்கின. குப்பென்று வியர்த்தது. எந்தவித நினைவுகளோ, எண்ண ஓட்டங்களோ இல்லாத ஒரு வெற்று நிலைக்குச் சென்று விட்டிருந்தார். எந்தத் தாயும் தன் மகனைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடாததை தெரிந்து கொண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி, அவர் மூளையை முழுவதும் செயலற்றதாக்கி இருந்தது.

- நூலிலிருந்து

"

ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும், ஒரு நிரபராதிகூட தண்டிக்கப்படக் கூடாது' - இந்நாட்டு ஜனநாயகம் பேசும் நீதி இது.

நடைமுறை அப்படியில்லை. மதவாதிகளும், சாதி வன்முறையாளர்களும், ஆணாதிக்கச் சிந்தனைவாதிகளும் - 'அங்கீகரிக்கப்பட்ட குற்றவாளி'களாக வெவ்வேறு வேடங்களில் உலவிக் கொண்டிருக்கின்றனர். இங்கு தண்டனைக்கு ஆட்படுவதெல்லாம் பெரும்பாலும் நிரபராதிகள்தான். பணபலம், ஆள்பலம், சாதி ஆதிக்கம் இவை மட்டுமே - ஒருவர் இந்த பூமியில் சுயமரியாதையோடு வாழலாமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்கிறது. தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, அதிகார வர்க்க துப்பாக்கிகளின் முனை, எளிய மக்களை நோக்கி...

இப்படியொரு சூழலிலும், திணிக்கப்பட்டவற்றை 'விதி' என ஏற்க மறுத்து - அடிமைத்தனத்துக்கு எதிராகவும், அடக்குமுறைக்கு சவாலாகவும் மலையென நிமிர ஒரு சிலரால் மட்டுமே முடிகிறது. தான் படும் அத்தனை வேதனைகளையும் கொடுமைகளையும் - உள்ளுக்குள் புதைத்து, ஒரு மாபெரும் மவுனப் போராட்டத்தை அவர்கள் நிகழ்த்திக் கொண்டிருப்பது நிதர்சனம்.

உண்மையையும் நேர்மையையும் கொள்கையையும் உயிர் போகிற வரை கட்டிக் காக்கிற அந்தப் போராளிகளின் வாழ்க்கை, பெரும்பாலும் மண்ணோடு மண்ணாகிப் போகிறது. தன் தரப்பு நியாயங்களை, உண்மைகளை அவர்களே சொன்னால்தான் உண்டு. இல்லையெனில், திரிக்கப்பட்ட வரலாற்றில் அயோக்கியர்களாகவே தேங்கிவிடும் ஆபத்து நேரிடுகிறது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் பேரறிவாளன் கைது செய்யப்பட்டு, சுமார் பதின்மூன்று ஆண்டுகள் சிறை சித்திரவதைகளுக்கிடையில் - மரண தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார். அவருடைய தாய் அற்புதம்மாளின் வலிமிகுந்த வாழ்வனுபவங்களை - 'தொடரும் தவிப்பு' நாவலாகப் பதிவு செய்ததன் மூலம் - அப்படியொரு பேராபத்திலிருந்து அவரை மீட்க முயன்றிருக்கிறார் ஆசிரியர் பூங்குழலி.

தூக்குமர நிழலில் நிற்கும் மகனை மீட்க, மனம் தளராமல் போராடிக் கொண்டிருக்கும் அற்புதம்மாவை கதை நாயகியாக்கி, அவரைச் சுற்றியே நகர்கிறது நாவல். அபாண்டமாகக் குற்றம் சாட்டப்பட்டு, பேரறிவாளன் கைது செய்யப்படுவதற்கு முந்தைய நாள் தொடங்கி இன்றுவரை, அவரது குடும்பம் சந்திக்கும் மன உளைச்சல்களையும் கொடுமைகளையும் - குடும்பத்தில் ஒருவராக இருந்து நேர்மையாகப் பதிவு செய்திருக்கிறார்.

'நாளை விட்டுவிடுகிறோம்' என்று சொன்ன சி.பி.அய். அதிகாரிகளை நம்பி, மகனை அனுப்பி வைத்த அந்த நேர்மைக்குக் கிடைத்த மிகப் பெரிய தண்டனை தூக்கு. பேரறிவாளன் கைதான பிறகு தன் வாழ்க்கையே - அவனுக்கு விடுதலை வாங்கிக்கொடுப்பதுதான் என வரித்துக் கொண்டார் அற்புதம் அம்மாள். மகனை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என்று அலைந்த சிறைகளின் செங்கற்களுக்கும் கம்பிகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

கேட்டிருக்கும் - அவரது கதறல்கள். மாற்று உடை கொடுக்கவும், மகனிடம் ஆறுதலாக நாலு வார்த்தை பேசி விடவும், சிறைக் காவலர்களிடம் அற்புதம்மாள் நடத்திய போராட்டம் - நம் பார்வைக்கும் புரிதலுக்கும் அப்பாற்பட்டவை.

வேலூர், சேலம் என ஒவ்வொரு முறை பேரறிவாளன் வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்ட போதும், பலகிலோ மீட்டர்கள் தனியாளாகப் பயணித்து, எப்படியாவது மகனைப் பார்த்துவிடத் துடிக்கும் அந்தத் தாயின் ஒரே நோக்கம் - மகனை தெம்பூட்டுவது மட்டுமே. பேருந்து நிலையங்களிலும் ரயில் நிலையங்களிலும் இரவைக் கழித்தபோது, கூனிக் குறுகிய அற்புதம்மாவின் தன்மானத்தின் தவிப்பையும், 'விசாரணை அதிகாரிகளால் தான் எந்தளவுக்கு சித்திரவதைக்கு உள்ளானேன்' என்ற மகனின் தன்னிலை விளக்கக் கடிதத்தை ஒரு ரயில் பயணத்தில் படித்துக் கதறியழும் அவரின் வெடித்த உணர்வுகளும் - நம் மனிதத் தன்மையை சுட்டுப் பார்க்கிறது.

'உயிர் வாழ்வதற்கான உரிமையே மனித உரிமைகளில் முக்கியமானதும் அடிப்படையானதும்' என்ற மனித உரிமைக் கருத்தியலுக்கு சவால் விடும் தூக்கு தண்டனை பற்றியும், அதை எதிர்த்து ஒன்று சேர்ந்த தமிழின உணர்வாளர்களின் கொந்தளிப்பை, கதையின் போக்கிலேயே சொல்லிவிட்டுப் போகிறார். அழுகையையும் கண்ணீரையும் மட்டுமல்லாமல், அற்புதம்மாள் எவ்வளவு திடமான கொள்கைப் பிடிப்புள்ளவர் என்பதையும், சாதாரண பெண்ணாக இருந்து பெரியார் கொள்கைக்கு அவர் மாறிய விதத்தையும் - இயல்பான நகைச் சுவையோடு விவரிக்கிறார்.

என முத்திரை குத்தப்பட்ட ஒருவன், எத்தனை ஒழுக்கம் மிகுந்தவனாய், அன்பும் அமைதியும் கொள்கைப் பிடிப்பும் உள்ளவனாக இருக்கிறான்; அவனுக்காக சோலையார்பேட்டை ஊர் மக்கள், ஆசிரியர்கள், இயக்கவாதிகள் என எல்லோரும் குரல் கொடுக்கிறார்கள். எல்லோருக்கும் செல்லப் பிள்ளையாய் சுற்றி வந்தவன், எப்படி கொலைக் குற்றவாளியாக இருக்க முடியும் என்ற நியாயமான கேள்வியை முன்வைக்கும் அதே வேளை, 'நமக்கெதற்கு வம்பு' எனப் பிரிந்து போன சொந்தங்கள் பற்றியும் கவனமாக சுட்டிக்காட்டுகிறார்.


உண்மை - இதுதான் இந்த நாவலின் பெரிய பலம். எந்தப் பின்புலமும் இல்லாத ஒரு சாதாரணப் பெண்ணின் போராட்டத்தை, அவர் வாழ்கிற காலத்திலேயே பதிவு செய்வதென்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம். ஆசிரியருக்கு இது முதல் நாவல் என்பதால், அதற்கே உரிய பலவீனங்களையும் மறுப்பதற்கில்லை. ஒரு கொடூரத்தை விளக்குவதற்கான எந்த சலனமுமின்றி பல இடங்களில் வார்த்தைகளும், வாக்கியங்களும் உயிரற்றவை

பல இடங்களில் திரும்பத் திரும்ப வருவதையும் கவனமாகத் தவிர்த்திருக்கலாம். ரத்தினச் சுருக்கமாக சொல்ல வேண்டியவற்றை, விலாவரியாக விளக்குவதால் நேர்ந்த தவறு இது எனத் தோன்றுகிறது. வார்த்தைத் தேர்வும், வாக்கியச் செறிவுமே நாம் சொல்ல வருகிற விஷயத்தை - அதன் உண்மை பலத்தோடு உணர்த்தும் என்பதால், ஆசிரியர் அவற்றில் கட்டாயம் கவனம் செலுத்தியாக வேண்டும். அப்படி செய்திருந்தால், அற்புதம்மாளின் திருமணத்திற்கு முந்தைய வாழ்நிலையையும், வளர்ப்பு முறையையும் பெரியார் சிந்தனைகள் அவருக்குக் கொடுத்த தெளிவையும் - தன்னம்பிக்கையையும் கோடிட்டாவது காட்டியிருக்க முடியும்.

மற்றபடி, உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை உறுதி செய்துவிட்ட ஒரு வழக்கின் உண்மை முகத்தை வெளிக் கொண்டு வந்திருக்கும் - இந்தத் துணிச்சலும் முயற்சியும் மரியாதைக்குரியது. 'தொடரும் தவிப்பு' அற்புதம்மாவைச் சுற்றிய சிதிலமடைந்த வாழ்வை வெளியுலகுக்கு இழுத்து வந்து போட்டிருக்கிறது. சி.பி.அய். அதிகாரிகளின் முகத்திரையைக் கிழித்து, நீதித் துறையின் நேர்மையைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. பேரறிவாளன் உள்ளிட்ட 26 பேரும் மீண்டுவர வேண்டுமென மனதார விரும்பிய அத்தனை உள்ளங்களும் - கவனமாக கவுரவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

'அர்ஜுன் அம்மா யாரு?' என்று தேடும் சமூகத்தில், அற்புதம் அம்மாள் போன்ற போராளிகளை அடையாளங் காட்ட வேண்டிய பொறுப்பு நமக்கிருக்கிறது. உண்மை மீது ஆர்வமுள்ள

நூல் : 'தொடரும் தவிப்பு'
ஆசிரியர் : பூங்குழலி
வெளியீடு : தமிழ்க்குலம் பதிப்பாலயம், 33, நரசிம்மபுரம் சென்னை - 4
பக்கங்கள் : 172
விலை : ரூ. 60




**"அடர் காடுகளையும், அருவிகளையும், பெருமலைகளையும் ரசித்துக் குதூகலித்த அற்புதம்மாவின் மனம் – 'மகன் விடுதலையான பிறகு இங்கு கட்டாயம் அவனை அழைத்து வர வேண்டும்' எனத் துடிக்கிறது."**

பாபநாசத்தில் இருக்கும் நெடுமாறனின் வீட்டிற்குச் செல்ல நேர்ந்த ஒரு தருணத்தில், அடர்காடுகளையும், அருவிகளையும், பெரு மலைகளையும் குளிர் ஆற்றையும் ரசித்துக் குதூகலித்த அற்புதம் அம்மாவின் மனம் - 'மகன் விடுதலையான பிறகு இங்கு கட்டாயம் அழைத்து வர வேண்டும்' எனத் துடிக்கிறது. சம்மட்டித் தாக்குதலுக்கு உள்ளான அந்தத் தாய் மனம், இன்னும் மகனுக்கான ஏராளமான பசுமைக் கனவுகளோடு காத்திருப்பதற்கு அதுவும் ஒரு சாட்சி.

அதே போல, சட்டமும் அரசும் மனிதர்களும் நீதிமன்றமும் கூடி நின்று 'கொலை செய்யப்பட வேண்டியவன்'

யாக இருக்கின்றன. கதைப் போக்கில் இல்லாமல் வழிநெடுக விரிவாக்கப்படும் 'ப்ளாஷ் பேக்' சம்பவங்கள், ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தி சோர்வடைய வைக்கின்றன.

'அன்றைய பொழுது என்றும் போலத்தான் விடிந்தது' என்பது மாதிரியான சம்பிரதாய சொற்களும் சொற்றொடர்களும் - பதற வைப்பதற்குப் பதிலாக அலுப்பூட்டுகின்றன. அதேபோல், ஒரே அர்த்தம் கொண்ட வாக்கியங்கள்

ஒவ்வொருவரின் தேடலுக்கும் - 'தொடரும் தவிப்பு' விடையளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. 'பேரறிவாளன் விடுதலையாகி வருவான்' என்று காத்திருக்கும் அற்புதம்மாளின் தவிப்பு, அவர் வாழ்க்கையைப் புரட்டி முடிப்பவருக்கும் பரவ - 'கண்டிப்பாக விடுதலையாக வேண்டும்' என்ற எண்ணம் உறுதியாக எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ●

- ஜெனிபர்



படிப்பகம்

www.padippakam.com

பிறப்பு முதல் இறப்பு வரை அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் இசை கலந்திருக்கிறது. துளைக்கருவி, தோற்கருவி, நரம்புக்கருவி எனப் பலவகை இசைக்கருவிகளை உருவாக்குபவர்களும் இவர்களே. ஆனால், இவர்களைப் பார்த்து, 'உங்களுக்கெல்லாம் இசை வராது. அதெல்லாம் ரத்தத்திலேயே ஊறி வர்றது', என்ற ஆதிக்கவாதிகளின் உளறல்கள் இன்னும் நின்றபாடில்லை! இப்படிப் பேசுபவர்கள், 'செவ்வியல் இசை'யைப் பிறக்கும் போதே கற்றுக் கொண்டு பிறந்தார்களா என்ன? இசைக் கருவிகளை உருவாக்கி, அதில் நாதத்தை ஏற்றி முழுமையாக்கிக் கொடுப்பவர்கள், இசைக்குத் தொடர்பில்லாதவர்களாகப் புறந்தள்ளப்படுகிறார்கள்.

இசையை மூச்சாகக் கொண்டவர்கள், செவ்வியல் இசைப் பக்கம் வந்துவிட்டால், தங்களுடைய 'பதவி' பறிபோய்விடும் என்ற அச்சம்தான் இதற்குக் காரணம்.



அவர்களின் அச்சம் நியாயமானதுதான்! செவ்வியல் எல்லைக்குள் அடித்தட்டு மக்களை விடாமல் தடுக்கும் மேல்தட்டு அதிகாரத்தை, மண்ணின் இசைப்படைப்பாளிகள் எப்போதுமே பொருட்படுத்தியது இல்லை. 'தீண்டத்தகாதவர்கள்' இசைக்கருவிகளை உருவாக்கிக் கொடுக்கவில்லை என்றால், தலையை ஆட்டி ஆட்டி இசைப்பதற்கும் - ரசிப்பதற்கும் அவர்களுக்குக் கருவிகள் ஏது? அப்படிப்பட்ட இசைக்கருவிகளை உருவாக்கும் விற்பன்னர்களின் பணிதொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில், புல்லாங்குழல் படைப்பாளியான கே. மகாதேவன் அவர்களை திருநெல்வேலி - புதுப்பேட்டையில் உள்ள அவருடைய இல்லத்தில் 'தலித் முரசு'க்காக சந்தித்தோம்...

சந்திப்பு : **கோ. பழனி, லெனா குமார்**
புகைப்படங்கள் : **சி. ஆறுமுகம்**

# "திறமையுள்ள தமிழனுக்குத் தடை"

புல்லாங்குழல் படைப்பாளி கே. மகாதேவன்

**உங்கள் குடும்பப் பின்புலம் பற்றி சொல்லுங்கள்.**

என் தாத்தா காலத்திலேயே திருநெல்வேலி புதுப்பேட்டைக்கு வந்துவிட்டோம். இங்கு வந்து அம்பது அறுபது வருஷம் ஆச்சு. நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இங்கேதான். என் அப்பா டி.வி.எஸ். நிறுவனத்தில் இருந்த இசைக் குழுவில், புல்லாங்குழல் வாசிப்பவராக இருந்தார். அவர் புல்லாங்குழலை முறையாகக் கத்துக்கிட்டவர். புல்லாங்குழல் செய்யற தொழில்ல ஈடுபாடு வந்ததற்கு, அப்ப 'எஸ்டேட்' மக்களோட தொடர்பு இருந்ததுதான் காரணம். 'எஸ்டேட்'ன்னா மேற்குத் தொடர்ச்சி மலை. அங்குதான் மூங்கில் கிடைக்கும். மூங்கில் வாங்கி வந்து எங்க அப்பாவே செய்ய ஆரம்பிச்சிருக்காரு. அவருக்குப் புல்லாங்குழல் செய்வதில் ஈடுபாடு அதிகமாச்சு. இதையே ஒரு தொழிலாப் பண்ணினா என்னன்னு 'பூம்புகார்'க்குப் போய் கேட்டிருக்காரு. அவர்களும் பண்ணுங்கன்னு சொல்லியிருக்காங்க. அந்த மாதிரியே செய்து கொடுத்திருக்காரு. நாளாவட்டத்துல நாமளே தனியா தொழில் மாதிரி பண்ணினா என்னன்னு வேலையை ராஜினாமா செய்துவிட்டு செய்ய ஆரம்பிச்சார். மேற்கத்திய இசை, இந்துஸ்தானி இசை, கர்நாடக இசைக்குன்னு தனித்தனியா புல்லாங்குழல் செய்வாரு.

**உங்களுக்கு அப்பாதான் ஆசிரியரா?**

நான் சின்னவனா இருக்கும்போதே எங்க அப்பா இறந்து போயிட்டார். எனக்கு எங்க அண்ணன்தான் குரு. அண்ணன் பேரு கே. மணிமோகன். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்துல வேலை செய்யறார். எங்க அண்ணனுக்கு எங்க அப்பா குரு. அப்பா புல்லாங்குழல் செய்முறையை பல பேரிடம் போய் கேட்டுப் பார்த்து கொஞ்சம் கொஞ்சமாகக் கத்துக்கிட்டாரு. இசையும் அவருக்கு நல்லா தெரிஞ்சிருந்தது. தொழில நல்லாப் பண்ணினாரு. அப்பா இறந்து போனதும் படிச்சு முடிச்சு, அண்ணன் அவர் விட்டுட்டுப் போன இந்தத் தொழிலை தொடர்ந்து செஞ்சுகிட்டிருந்தாரு. நான் வளர்ந்ததும் எனக்குக் கத்துக் கொடுத்தாரு.

**நீங்களும் இதே தொழிலைத் தொடர்வதற்கு சிறப்புக் காரணம் ஏதாவது உண்டா?**

ஆர்வம்தான். நான் சின்ன வயசிலேயே புல்லாங்குழல் வாசிப்பேன். அப்ப யார் கிட்டயும் முறையா கத்துக்கல. ஆனாலும் வாசிப்பேன். அப்பா உருவாக்கிவிட்டுப் போன இந்தத் தொழில, யாராவது ஒருத்தர் தொடர்ந்து செய்யணும்னு அண்ணன் ஆசைப்பட்டாரு. இந்தத் தொழிலை நல்லா பண்றதுக்கு திறமையை வளர்த்துக்கணும்னு - நெல்லையில் பார்வையற்றவர் ஒருவரிடம் புல்லாங்குழல் படிச்சேன். அண்ணன்தான் 'நீ இசை படிக்கணும்'ன்னு சென்னைக்கு அனுப்பிவைச்சாரு. அதன்படி, நான் சென்னை இசைக்கல்லூரியில் 1992 இல் சேர்ந்தேன். அங்கு மூணு வருஷம் புல்லாங்குழல் பிரிவில் படிச்சேன். இசைக் கல்லூரியில் படிச்சது, எனக்கு ஒரு நல்ல பக்கபலமாக இருக்குது. இப்போ 'மீனா புளூட் மேக்கர்ஸ்'ன்னு தனியாக செய்து வருகிறேன்.

**உங்களுக்கு சிறுவயதிலேயே புல்லாங்குழல் வாசிக்கத் தெரியும். இசைக் கல்லூரி**



படிப்பகம்

www.padippakam.com

**யில் சேர்ந்து படித்தது, உங்களுக்கு எந்த அளவிற்கு உதவியது?**

அதை ஒரு திருப்புமுனைன்னுதான் சொல்லணும். நான் கல்லூரிக்குப் போயிட்டு வந்தப்பறம் புல்லாங்குழலை நுணுக்கமாகச் செய்ய முடிஞ்சது. நான் சின்னப் பையனா இருக்கும்போது, நிறைய வித்துவான்கள் புல்லாங்குழல் வாங்கறதுக்காக எங்க வீட்டுக்கு வருவாங்க. அப்ப, சரியான புல்லாங்குழல் அமையாமல் சில பிரச்சனைகள் ஏற்படும். 'ஸ - பா - ஸ' இந்த சுருதியில் கீழ் 'ஸ' சரியாக வந்து விடும். மேல் 'ஷட்ஜமம்' சரியாக அமையாமல் கூடும், குறையும். அண்ணனுக்கும் இந்த நுணுக்கங்கள் முழுமையாகத் தெரியாது. அப்ப இந்த மேல் 'ஷட்ஜமம்' ஏன் குறையுது? அதுக்கு நாம என்ன பண்ணணும்? மேல் ஷட்ஜமம், ரிஷபம், மேல் காந்தாரம், மேல் பஞ்சமம் இதெல்லாம் கர்நாடக சங்கீதத்தில் ரொம்பவும் முக்கியமானவை. புல்லாங்குழல் வாங்க வர்றவங்க இதையெல்லாம் பாத்துத்தான் வாங்குவாங்க. இதில் ஏதாவது ஒண்ணு குறைஞ்சாலும் வாங்க மாட்டாங்க.

அப்ப நாம செய்யறதுல என்ன பலவீனம்ன்னு கண்டுபிடிக்கணுமேன்னுதான் என்னை சென்னைக்குப் போய் படிச்சிட்டு வான்னு அண்ணன் அனுப்பி வைச்சார். நான் அங்க போயி சில விஷயங்களைத் தெரிஞ்சிக்கிட்டேன். நானும் கண்டுபிடிச்சுடறேன். புல்லாங்குழலைப் படிக்கறதுக்குன்னு இல்லாம தயார் பண்ற நோக்கத்துல தான் நான் சேர்ந்தேன். அங்க புல்லாங்குழல தயாரிக்க சொல்லித்தருவதில்லை. என் 'மாஸ்டர்' ராஜுன்னு சேலத்துக்காரர். அவரும் ஒரு தலித். அவர்கிட்ட இருந்து புல்லாங்குழல் தயார் பண்ணறதுக்கான மேலும் சில நுணுக்கங்களை நான் கத்துக்கிட்டேன். ஒரு நல்ல கலைஞனால புல்லாங்குழலின் தரத்தைக் கண்டுபிடிக்க முடியும். இப்போ சர்வதேசத் தரமான 440 'பிட்சி'ல் புல்லாங்குழலைத் தயாரிக்கிறோம். இதற்கு என் அண்ணன் ஒரு காரணம் என்றாலும், இசைக் கல்லூரியின் பங்கு முக்கியமானது.

**இசைக் கல்லூரியில் சேர்வதற்கு முன் நீங்கள் புல்லாங்குழல் தயாரித்ததற்கும், அதற்குப் பிறகு தயாரிப்பதற்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா?**

கண்டிப்பாக வித்தியாசம் இருக்கிறது. கல்லூரியில் சேர்வதற்கு முன்னால் ஒரு நூறு புல்லாங்குழல் தயார் பண்ணறோம்ன்னா, அதில் ஒரு பத்துதான் நல்லபடியா அமையும். இப்போ அப்படியில்லை. நூறு செய்தால் அதில தொண்ணூறு நல்லபடியாக அமையுது. புல்லாங்குழலின் இசை நுணுக்கத்தில் அய்ம்பது சதவிகிதத்தை, எனக்கு இசைக்கல்லூரிதான் கத்துக் கொடுத்தது.

**நீங்கள் ஒரு தலித் என்பதால், இசைக் கல்லூரியில் சேர்வதற்கும் – சேர்ந்த பிறகும் ஏதேனும் சிக்கல்களை சந்தித்தீர்களா?**

சேருவதில் அதிகப் பிரச்சனையில்லை. முதன் முதலில் நான் இசைக்கல்லூரியில் நுழையும்போதே, அந்தச் சூழ்நிலை வித்தியாசமானதாக இருந்தது. இங்கு ஆதிக்க சாதிக்காரர்கள்தான் அதிகம் பயில்கிறார்கள் என்பதை உணர்ந்தேன். அங்கு பயில்பவர்கள் ஏறத்தாழ எண்பது சதவிகிதம் பார்ப்பனர்கள் தான். எஸ்.சி.க்கள் மிகவும் குறைவு. ஏன்னு கேட்டா, 'அவர்கள் யாரும் கற்றுக் கொள்ள வருவதில்லை. இவர்கள்தான் வருகிறார்கள்; இவர்களுக்குதான் ஆர்வம் இருக்கிறது' என்று உடன் பயிலுபவர்களே பேசிக் கொள்வார்கள். ராஜு மாஸ்டர் 'இவ்வளவு நாள்ல இதான்யா முதல் தடவ (1992 இல்) எஸ்.சி.ங்க எட்டு பேர் படிப்பது'ன்னு சொல்வாரு.



**புல்லாங்குழல் செய்முறை குறித்துச் சொல்லுங்கள்.**

புல்லாங்குழலுக்கான மூங்கில் மேற்குத் தொடர்ச்சி மலையில்தான் கிடைக்கிறது. அங்கு இதை நாணல்ன்னு சொல்வாங்க. மூங்கிலை துண்டு துண்டாக வெட்டி சாக்கில் போட்டு கட்டி எங்களுக்கு அனுப்பிடுவாங்க. அதை, பதினைந்து நாள் பக்குவமாகப் 'பாடம்' பண்ணணும். மாலை 4 மணி முதல் காலை 11 மணி வரை காய வைப்போம். சூடுமில்லாம, குளிருமில்லாம இருக்கிற சூழல்ல காய வைக்கணும். தரையின் வெப்பத்தைப் பொறுத்தும் கால நிலையைப் பொறுத்தும் காய வைப்போம். மூங்கில் பதமான சூட்டில் காய்ந்தால்தான், நல்ல தரமான புல்லாங்குழல் கிடைக்கும். பதினைந்து நாள் என்பது வெயில் காலத்தில் பத்து நாட்களும் ஆகலாம்; மழை காலத்தில் இருபது நாட்களும் ஆகலாம்.

காய்ந்த பிறகு விளக்கெண்ணெய், புங்க எண்ணெய் இரண்டையும் கலந்து அதை மூங்கில்களில் தேய்த்து அவற்றைத் தீயில் வாட்டினால் அது பழுப்பு 'கலரா'க மாறும். மூங்கிலை இப்படித்தான் கலராக மாத்துவோம். அதன்பிறகு அவற்றை சீயக்காய் போட்டுத் தேய்த்து, எண்ணெய் எல்லாம் கழுவிடுவோம். அதன் பிறகு, மூங்கிலின் அளவைக் கொண்டு மேற்கத்திய இசைக் கானவை, கர்நாடக இசைக்கானவை, இந்துஸ்தானிக்கானவை எனத் தனித்தனியாகப் பிரித்துக் கட்டி விடுவோம்.

அடுத்து, மூங்கிலின் அமைப்பைப் பொறுத்துத் துளையிடுவதற்காக 'மார்க்' பண்ணணும். மூங்கிலில் உள்ள குருத்தின் சுற்றளவைக் கணக்கிட்டு, முதலில் ஒரே ஒரு துளை போட்டு நாங்கள் அதை வாசித்துப் பார்ப்போம். அப்பவே எங்களுக்கு இந்த மூங்கிலில் இப்படித் துளைகள் போட்டால், இந்த 'பிட்ச்' கிடைக்கும் என்று தெரிந்து விடும். சிலவற்றில் குருத்து ஏறி இருக்கும், சில நம் தேவைக்கேற்ற மாதிரி நல்ல வட்டமா இருக்கும். குருத்தின் உள்கூடும் வாய்த்துளையும் எப்படி அமைகிறதோ, அதைப் பொறுத்துதான் புல்லாங்குழல் அமையும். காற்று உள்ள போய் சுழன்று வெளியே வரணும். உள்கூடானது பிசிரில்லாமல் இருக்கணும். அப்பதான் புல்லாங்குழலில் நாதம் சரியாக வரும். வாயில் வைத்து வாசிக்கின்ற துளைக்கும், விரல்களை வைக்கின்ற துளைகளுக்கும், இடையில் இவ்வளவு இடைவெளி இருக்கணும் என்ற அளவு உண்டு. அதே மாதிரி ஒவ்வொரு வாசிப்புத் துளைகளுக்கு இடையில் உள்ள இடைவெளிக்கும் அளவு உண்டு. துளைகள் போடும்போது கவனமா போடணும். உச்சஸ்தாயி தவிர மற்ற ரெண்டு ஸ்தாயி புல்லாங்குழல்களில், என்ன சிக்கல் வந்தாலும் அதற்கு உயிர் கொடுத்து விடலாம். உச்சஸ்தாயி புல்லாங்குழல்கள் தவறிப்போனால் போனதுதான். துளைகள் போட்டபிறகு புல்லாங்குழலில் உள்ள பிசிரு

**“ இப்ப பாருங்க அடுப்புல கரிய போட்டு, துருத்திய வச்சி கஷ்டப்பட்டு ஊதி மூங்கில வாட்டி, புல்லாங்குழல் செஞ்சிக்கிட்டிருக்கோம். இந்த அடுப்பு பொகை அடிச்சு கண்ணெல்லாம் எரியுது. ராத்திரியில தூக்கமே வராது. கண்ணு நிறைய பொகை அடஞ்சி கெடக்கும். 'கேஸ்' அடுப்பு இருந்தா வசதியா இருக்கும். இதற்கெல்லாம் பணம் ரொம்ப அவசியம். ”**



படிப்பகம்

www.padippakam.com

களை வெட்டி அழகாக்கி கேட்டவர்களுக்கு அனுப்புவோம்.

**புல்லாங்குழலுக்கான மூங்கிலை எப்படித் தரம் பிரித்துக் கண்டுபிடிப்பீர்கள்?**

மூங்கில்களில் பலவகை உண்டு. புல்லாங்குழல் செய்வதற்கென்றே தனி வகையான மூங்கில் உள்ளது. அதை யானை விரும்பி சாப்பிடும். அதுதான் தரமானது - புல்லாங்குழலுக்கு ஏற்றது. மூங்கிலின் விளைச்சலைப் பொறுத்தும் புல்லாங்குழலின் தரம் அமைவதுண்டு. நன்கு விளைந்த மூங்கிலுக்கும் இளம் மூங்கிலுக்கும் வேறுபாடு உண்டு. ஒன்று போலவே ஒரு பத்து புல்லாங்குழலைத் தயார் பண்ணித் தரச்சொன்னால் என்னால் முடியாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரிதான் அமையும். இப்படி உருவாக்கப்படும் ஒரு புல்லாங்குழலுக்கு ஓர் ஆண்டு வரைதான் உறுதி கொடுக்க முடியும்.

**ஒவ்வொரு இசை வகைக்கேற்ப புல்லாங்குழலில் போடப்படும் துளைகளின் எண்ணிக்கையும் வேறுபடுகிறதா?**

கர்நாடக சங்கீதத்திற்காக 12 வகையான புல்லாங்குழல் செய்கிறோம். கர்நாடக இசைக்காகச் செய்யப்படும் புல்லாங்குழலுக்கும், மேற்கத்திய இசைக்காகச் செய்யப்படும் புல்லாங்குழலுக்கும், துளைகளில் வேறுபாடு உண்டு. கர்நாடக சங்கீதத்திற்கு எட்டுத் துளைகளும் இந்துஸ்தானி, மேற்கத்திய இசைக்கு ஆறு துளைகளும் போடுகிறோம். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மாதிரியான புல்லாங்குழலை கேக்கறாங்க. சென்னையிலேயே கெல்லீசில் ஆறு துளை புல்லாங்குழலையும், மயிலாப்பூரில் எட்டுத் துளை புல்லாங்குழலையும் கேக்கறாங்க. இதேபோல் இங்கு அதிகம் விற்பனையாகும் கர்நாடக சங்கீதத்திற்கான புல்லாங்குழல், மும்பையில் போகவே போகாது. ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு மாதிரியான புல்லாங்குழல்களை விரும்புறாங்க.



**❝ மிகத் தரமான தயாரிப்பு என்னுடையது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. எவ்வளவு பெரிய வித்துவானும் என் புல்லாங்குழலைச் சோதிச்சுப் பார்க்கலாம். ❞**

**புல்லாங்குழல்களைத் தயாரித்து நீங்களே விற்பனை செய்கிறீர்களா?**

தயாரிப்பது மட்டும்தான் எங்களுடைய வேலை. விற்பதற்கு, 'மியூசிக்கல்ஸ்'க்குக் கொடுத்திடுவோம். அவங்க, அவங்களோட தயாரிப்பாக வித்துக்குவாங்க. மும்பை, அய்தராபாத், புனே, கேரளா, சென்னை போன்ற இடங்களுக்கு அனுப்பறோம். வெளிநாடுகளிலிருந்து கூட என் கிட்ட கேக்கறாங்க. அதெல்லாம் நான் ஒத்துக்கறது இல்லை. ஏன்னா நான் ஒருத்தன் மட்டும்தான் சுதிபுடிக்கத் தெரிஞ்ச ஆளு. யாரும் உதவிக்கு இல்லை. மூங்கில் கிடைக்கறதும் கஷ்டமாயிருக்கு. காடுகளிலிருந்து மூங்கிலைக் கொண்டு வருவது, பெரிய சிரமமான காரியமாயிருக்கு. மூங்கில வெட்டறவங்க ரொம்ப குறைவு. அது ரொம்ப கஷ்டம். ஒரு பாம்பு கடிச்சாலும் அவ்வளவுதான். மேலும் யானைகள் வாழும் காட்டுப் பகுதி - ஆனைச் சாணிக் காடுன்னு பேரு. யானைங்க மேய்ஞ்சிகிட்டிருந்தாலும் தெரியாது. மூங்கில் ரொம்ப உசரமாயிருக்கும். தமிழ் நாடு எல்லை - சபரிமலை காடு. விலங்குகள் காடு - யாருங்க போவாங்க?

**இத்தொழிலை மேலும் சிறப்பாகச் செய்ய எவ்வகையான உதவிகள் உங்களுக்குத் தேவை?**

பணப்பிரச்சனை நிறைய இருக்கிறது. புல்லாங்குழல் கொடுத்தால் பணம் உடனடியாகக் கையில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் நான் குடும்பத்தை நடத்துவது எப்படி? மூங்கில் வாங்குவது எப்படி? வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது எப்படி? பூம்புகார் போன்ற அரசு நிறுவனங்கள் எங்களைப் போன்ற சிறு தொழில்காரங்களுக்கு உதவி செய்ய வேண்டும். முன்னெல்லாம் புல்லாங்குழல் கொடுத்து ஒரு மாதத்திற்குள் பணம் அனுப்பிடுவாங்க. 2001இல் நான் பூம்புகாருக்கு ஒரு எண்பதாயிரம் ரூபாய்க்கு புல்லாங்குழல் கொடுத்தேன். அந்த 'ஆர்டரை கேன்சல்' செய்திட்டாங்க. இனி விற்கவிற்கத்தான் பணம் தருவோம் என்று மாற்றிவிட்டார்கள். உடனுக்குடன் பணம் கிடைத்தால்தானே எங்களைப் போன்றவர்களால் சமாளிக்க முடியும். நான் எத்தனையோ முறை கடிதம் எழுதியும் பயனில்லை.

இப்ப பாருங்க, அடுப்புல கரிய போட்டு துருத்திய வச்சி கஷ்டப்பட்டு ஊதி மூங்கில வாட்டி புல்லாங்குழல் செஞ்சிக்கிட்டிருக்கோம். இந்த அடுப்பு பொகை அடிச்சு கண்ணெல்லாம் எரியுது. ராத்திரியில தூக்கமே வராது. கண்ணு நிறைய பொகை அடஞ்சி கெடக்கும். 'கேஸ்' அடுப்பு இருந்தா வசதியா இருக்கும். இதற்கெல்லாம் பணம் ரொம்ப அவசியம்.

**புல்லாங்குழலைத் தவிர, உங்களுக்கு வேறு இசைக் கருவிகள் செய்யத் தெரியுமா?**

செய்கிறோம். தேங்காய் சிரட்டையைக் கொண்டு 'மொராகஸ்' என்ற இசைக் கருவியைச் செய்கிறோம். இதையும் இன்னொருவர் மூலம்தான் அனுப்புறோம். இரண்டாயிரம் ஜோடிகள் ஜெர்மனியில் கேட்டிருக்காங்க. செய்வதற்கு 'மெஷின்' எல்லாம் தயார். ஆனால், முதலீடு இல்லை. இதைச் செய்ய ஒரே மாதிரியான தேங்காய், ரப்பர் மரக் கட்டை, சைக்கிள் 'பால்ஸ்' ஆகியவை தேவை. அப்புறம் 'ட்ரம்ஸ்டிக்' செய்யத் தெரியும்.

**நீங்கள் தலித் என்பதால், தொழில் ரீதியாகப் பாதிக்கப்படுகிறீர்களா?**

பாதிப்பு இருக்கத்தான் செய்யுது. நான் தலைமை அலுவலகத்தில் கமிஷனரைப் போய்ப் பார்த்து 'ஆர்டரை' வாங்கிட்டு பூம்புகார் மேனேஜரைப் பார்த்தால் 'ஆர்டர்' போட அவர் யோசிக்கிறாரு. இதுக்கு என்ன அர்த்தம்? என் தயாரிப்பில் ஏதேனும் குறை என்றால் நான் கைகட்டி நிற்கத் தயார். இல்லைன்னா 'உன் புல்லாங்குழல் விக்கமாட்டேங்குது' என்றாலும் பரவாயில்லை. மிகத் தரமான தயாரிப்பு என்னுடையது என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. எவ்வளவு பெரிய வித்துவானும் என் புல்லாங்குழலைச் சோதிச்சுப் பார்க்கலாம். கேரளா 'கைரளி'யோ, 'டெம்பிள்டவர்' போன்ற நிறுவனங்களோ தரத்தை மதிக்கிறாங்க; திறமையை மதிக்கறாங்க. ஆனால், தமிழ் நாட்டு கைத்தொழில் விற்பனைக் கழகத்தில் ஒரு வட இந்தியன் வளர உதவி செய்கிறாங்க. ஒரு தமிழனை அதுவும் திறமையுள்ளவனை வளர விடமாட்டேங்கறாங்க. ●




படிப்பகம்

www.padippakam.com

## 'வேர்பிடித்த' மக்களுக்கு 'விழுதுகளி'ன் அரவணைப்பு

கோவை மாவட்டம் - காளப்பட்டியில், தலித்துகளுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற வன்கொடுமைகளைக் கண்டித்துப் பல்வேறு அமைப்புகள் போராட்டங்கள் நடத்தி வருகின்றன. இந்நிலையில், 'விழுதுகள்' என்ற அமைப்பு, 19.6.2004 அன்று காளப்பட்டி மக்களுக்கு 2.5 லட்சம் ரூபாய் நிதியளித்துள்ளது; சமுதாயக் கூடம் மற்றும் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்ச்சியையும் அது நடத்தியது. இந்நிகழ்வில், எழில். இளங்கோவன், வி.ஏ. ரமேஷ்நாதன், ப. ரவிச்சந்திரன், எஸ்.டி. கல்யாண சுந்தரம், பேரா. முத்துசாமி, ஸ்டாலின் ராஜ், ரா. சரஸ்வதி மற்றும் பலர் பங்கேற்று எழுச்சியுரை நல்கினர். இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற 'விழுதுகள்' நிறுவனர் தங்கவேல், ''ஆதிக்கச் சாதி வெறியர்களை எதிர்த்து சாதியக் கட்டமைப்பு முறைகளை உடைக்காமல், அதற்கு நம்மை இழக்காமல் - நமது அடுத்த தலைமுறையை சுதந்திரமாக வாழவைக்க முடியாது. ஆகவே, காளப்பட்டி அருந்ததியர் மக்கள் இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு அஞ்சாமல் - தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்'' என்றார்.




மா. தங்கவேல், எஸ்.டி. கல்யாண சுந்தரம், ரமேஷ்நாதன், எழில். இளங்கோவன், ப.ரவிச்சந்திரன்

## கண்டன ஆர்ப்பாட்டம்

காளப்பட்டியில் தலித்துகளின் குடிசைகளை எரித்து, கொலை வெறித் தாக்குதல் நடத்தக் காரணமான பா.ஜ.க. மாநிலத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனையும், கவுண்டர் சாதியினரையும் - வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யக் கோரி ஜூன் 1 அன்று, 'ஆதித் தமிழர் பேரவை' சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு வேளிர் மன்னன், சோளை அலங்கை, ஆசைத்தம்பி, அதிவீரன் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை விடுதலை வீரன் ஒருங்கிணைத்தார்.

## சாதி ஒழிப்புப் போர் - 5.7.2004

''அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்கிற திராவிடர் கழகத்தின் கோரிக்கையானது, சாதி ஒழிப்பு - தீண்டாமை ஒழிப்புக்கான செயல்திட்டமாக தந்தை பெரியார் அவர்களால் அறிவிக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் இதற்கான சட்டம் இயற்றப்பட்டது. அ.இ.அ.தி.மு.க. அரசும் இதனைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்நிலையில் எவ்விதத் தடையும் இல்லாமல், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கான ஆணையைப் பிறப்பித்து - அதனை நடைமுறைப்படுத்துமாறு தமிழக அரசை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

மேலும், காலதாமதமின்றி இதனைச் செயல்படுத்த வலியுறுத்தும் வகையில் - தமிழக அரசின் முக்கிய அலுவலகங்கள் முன்பு, முதற்கட்ட அறப்போராட்டமாக 5.7.2004 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்துவது என்று இக்குழு முடிவு செய்கிறது.

-மதுரையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்

## உடைமை பறிக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குறியீடு




அறிஞர் கெயில் ஓம்வெத், *Ambedkar - Towards an Enlightened India* என்ற நூலை அண்மையில் எழுதியுள்ளார். இதை 'பெங்குயின்' வெளியிட்டுள்ளது. 168 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 295

அண்ணல் அம்பேத்கர் - சீரிய சிந்தனையாளராக, உலகம் போற்றும் வழக்கறிஞராக, பொருளியல் வல்லுனராக, கல்விமானாக, பவுத்தத்திற்குப் புத்துணர்ச்சி அளித்தவராக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையாக, ஒரு தேசியத் தலைவராக, தலித் தலைவராகவும், உடைமைகள் பறிக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குறியீடாகவும் எப்படி விளங்குகிறார் என்பதை விரிவாக எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

தனியார் துறைகளில் இடஒதுக்கீடு

# பங்கு வேண்டும்; கூலி அல்ல


■ யாக்கன்

சமூக மீட்சிக்காகவும், அரசியல், ஆட்சி அதிகாரங்களுக்காகவும் தீவிரமாகப் போராடி வரும் தலித் மக்கள், தங்களின் பொருளாதார மேம்பாட்டில் அதிக அக்கறையோடு செயல்படவில்லை. ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இனக்குழு உணர்வுடன் திரளும் தலித்துகள், தங்களுக்குள் பொருளாதார இணைப்பையும், பொருளாதாரப் பகிர்வையும் இன்றுவரை உருவாக்கிக் கொள்ளவில்லை. தலித் விடுதலைப் போராட்டத்தில் விடுபட்டுப்போன மிக முக்கியமான முரண்பாடாக இதைக் காண முடியும். இந்த முரண்பாடுதான் இன்று, தலித் மக்கள் முன் நிற்கும் மிகப்பெரும் பிரச்சனையாக உருவெடுத்திருக்கிறது.

கடந்த அய்ம்பதாண்டு காலமாக நிழல் கொடுக்கும் இடஒதுக்கீடுகள், தனியார்மயமாக்கலின் மூலமும், உலகமயமாக்கலின் மூலமும் பொருளற்றவைகளாகிக் கொண்டிருக்கின்றன. இடஒதுக்கீடுகளினால் அரசு உயர் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள்கூட, அதைப் பற்றி சிறிதும் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். தங்கள் சந்ததியினரின் எதிர்காலத்தைக் கருதியாவது, இடஒதுக்கீடுகளினால் வாழ்வடைந்து வருவோர் - அதைக் காப்பாற்றக் குரல் கொடுத்திருக்க வேண்டும். இடஒதுக்கீடுகள் இல்லாமற் போனால், தலித்துகளின் வேலைவாய்ப்புகளுக்கும் பொருளீட்டலுக்கும் மாற்று வழி என்ன என்பதைப் பற்றி - தலித் அமைப்புகளும், தலித் செயல்பாட்டாளர்களும் சிந்திக்கத் தவறிவிட்டனர்.

நிலைமைகள் கைமீறிப் போய்க் கொண்டிருக்கின்றன. இடஒதுக்கீடுகளினால் இதுவரை தலித் மக்கள் பெற்ற அதிகபட்ச மொத்த வேலைவாய்ப்பு 9.6 சதவிகிதத்தைக்கூட தாண்டவில்லை. நிர்வாகம் செய்யும் உயர் பதவிகளில், 7 சதவிகிதப் பணியிடங்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. தலித் மக்களின் மூச்சுக் காற்றுகூடப் புகாத எத்தனையோ உயர் துறைகள் இன்னும் இருக்கின்றன. ஆனாலும், மத்திய - மாநில அரசுகள் கிடைத்தவைகளைக் கூடத் தட்டிவிடும் நோக்கத்தில், மறைமுகமாக இடஒதுக்கீட்டு முறையை செயலிழக்கச் செய்து கொண்டிருக்கின்றன.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் நடந்து கொண்டிருக்கும் உலகமயமாக்கல் மோசடியில் - வாழ்விழந்து நிற்பவர்கள், உண்மையில் தலித் மக்கள்தான். விவசாயப் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் இந்தியா, பன்னாட்டு நிதியத்தின் ஆணைப்படி விவசாயத்திற்கு அளித்து வந்த மானியங்களைப் படிப்படியாகக் குறைத்து விட்டதால், நாட்டின் விவசாயச் சுழற்சி வீழ்ச்சியடைந்து விட்டிருக்கிறது. மானியத்தின் அளவு மொத்த உற்பத்தி மதிப்பில் 10 சதவிகிதத்தைத் தாண்டக் கூடாது என்றும், ஏற்றுமதி விவசாய உற்பத்தி ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை முடிவுகளின்படி அரசு செயல்படுவதால், நடுத்தர மற்றும் குறு விவசாயிகளின் நிலங்கள் தரிசுகளாகி விட்டன. விவசாயக் கூலிகள் நிரந்தரப் பட்டினியில் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயத்தில் ஈடுபடும் 74.5 சதவிகித தலித் மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் கொடுமை இது. 49.6 சதவிகித நிலமற்ற தலித் விவசாயக் கூலிகள் பட்டினி கிடக்கிறார்கள். அதாவது, நாட்டில் வாழும் தலித் மக்களில் பாதிப் பேர் பட்டினி கிடக்கிறார்கள்.



நாட்டின் பொதுத் துறைகளிலும், தொழிற் துறைகளிலும் நிலைமைகள் இன்னும் மோசமடைந்திருக்கின்றன. அரசுப் பணிகளிலும், பொதுத் துறை பணிகளிலும் தலித்துகள் தங்கள் விகிதாச்சாரப்



படிப்பகம்

www.padippakam.com

பங்கைப் பெறும் முன்பே, பணி நியமனங்கள் நிறுத்தப்பட்டு விட்டன. தேசிய தகவல் மய்யத்தின் 1994 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, அரசுப் பணி யிடங்களின் 'அ' பிரிவில் 9.7 சதவிகிதம், பொதுத் துறை பணியிடங்களின் 'அ' பிரிவில் 6.69 சதவிகிதம் இடங்களில்தான் தலித்துகள் நியமிக்கப்பட்டுள்ள னர். இந்நிலை, கடந்த பத்தாண்டுகளாக நீடித்து வரு கிறது. ஆ, இ, ஈ பிரிவுகளிலும் 2003 வரை பணி நியமனங்கள் அதிகரிக்கப்படவில்லை. அரசு வேலை வாய்ப்பு என்பதே முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. பணிமுதிர்ச்சி ஓய்வு மற்றும் விருப்ப ஓய்வுகளில் காலியாகும் இடங்கள் இனி நிரப்பப்படப் போவ தில்லை. எனவே, கடந்த பத்தாண்டுகளாக இடஒதுக் கீடு மூலம் வேலைவாய்ப்புகளை தலித்துகள் பெற வில்லை. லட்சக்கணக்கான படித்த தலித் இளைஞர் களும், இளம் பெண்களும் அரசு வேலைகளுக்காக நிச்சயமற்ற நிலையில் காத்துக் கிடக்கிறார்கள்.

தொழில் துறைகளில், கடந்த அய்ம்பதாண்டு காலமாகவே தலித்துகள் புறக்கணிக்கப்பட்டுள்ள னர். 2002 ஆம் ஆண்டின் இந்திய பொருளியல் ஆய்வறிக்கையின் புள்ளி விவரப்படி, 0.89 சதவிகித தலித்துகள்தான் தொழில் முனைவோர்களாக இருக் கிறார்கள். உள்நாட்டு உற்பத்தியில் தலித்துகளின் பங்கேற்பு ஒரு சதவிகிதத்தைக்கூட தொடவில்லை. தொழிற் துறைகளில் வலுவாய் காலூன்றி இருக்கும் பார்ப்பன - பனியா முதலாளிகளும், பிற்படுத்தப் பட்ட சமூகங்களின் முதலாளிகளும், தலித் மக்கள் தொழில் முனைவோர்களாக உருவாகி விடாமல் கவனமாகக் கண்காணிக்கிறார்கள். சாதிய சமூக உளவியல் அதற்கு உதவியாக இருந்து வந்திருக்கிறது.

அரசு அறிவிக்கும் தலித் மக்களுக்கான தொழில் முறைகளும் அற்பமாக இருக்கிறது. செருப்புத் தைப்பதற்கும், பால் மாடு வாங்குவதற்கும், வண்டி மாடு வாங்குவதற்கும் கடனுதவி செய்து பழக்கப் பட்டிருக்கிறது அரசு. தங்கள் முன்னோர்களின் தொழிலையே தலித்துகளால் செய்ய முடியும் என்ற அரசு அதிகாரிகளின் பொறுப்பற்ற முடிவுகளால், கடந்த அய்ம்பதாண்டு காலமாக - நாட்டின் உற்பத் தியிலோ, வர்த்தகத்திலோ தலித்துகளால் கால் வைக்க முடியவில்லை. அதிகபட்சமாக இடஒதுக்கீடு செய்யப்பட்ட பெட்ரோல் விற்பனை நிலையங் களுடன் தலித்துகளின் வர்த்தகம் முடிந்து விட்டது.

பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டின் பொருளா தாரத்தையே கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் இச்சூழலில், பார்ப்பன - பனியா பெரு முதலாளி களால், ஆட்சி அதிகாரத்தின் உதவி கொண்டு பன்னாட்டு நிறுவனங்களுடன் வியாபாரக் கூட்டு ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. ஆனால், நடுத்தர தொழில் முனைவோர்கள் தத்தளிக்கத் தொடங்கி விட்டனர். சிறு தொழில் நிலையங்கள் முற்றிலும் வீழ்த்தப்பட்டு விட்டன. எனவே, இனி தலித்துகள் தன்னெழுச்சியாய் தொழில் முனைப்புகளில் ஈடுபடுவது என்பதும்கூட, மிகக் கடுமையான சவாலாகத்தான் இருக்கும். அதற்கு முன்பு, தலித்துகளுக்கு விகிதாச் சார முறைப்படியான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளது.



ஆனால், இந்திய அரசின் பொருளாதாரச்சீர்திருத்தங்கள் - ஏழை எளிய மக்கள் மீதான அக்கறையோடு அமைந்திருக்கவில்லை. 2002-2007க்கான திட்டக் குழு வரைவறிக்கையில், தலித் மற்றும் சிறுபான் மையினரின் நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டி ருக்கும் தொகை 3360 கோடிகள் மட்டுமே. மாநில அரசுகளும்கூட, பெரும்பாலும் தலித் மக்களின் வறுமையை இலவசங்களால் சரி செய்ய முயன்று வருகின்றன.

இந்நிலையில்தான், புதிதாகப் பதவியேற்றிருக் கும் காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகளின் குறைந்த பட்ச செயல் திட்டத்தில், தனியார் துறைகளிலும் தலித் மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்க உறுதி மொழி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 7 அன்று, நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு அமர்வில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், சமூகப் பொருளாதாரத் தளங்களில் பின் தங்கி யிருக்கும் தலித் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கும் தனியார் துறைகளில் இடஒதுக்கீடு வழங்க அரசு உறுதியேற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இட ஒதுக்கீடுகள் பற்றி உள்நாட்டுத் தொழில் அதிபர் களுடனும், பன்னாட்டு நிறுவனங்களுடனும், அரசியல் கட்சிகளுடனும் அரசு பேச்சுவார்த்தையைத் தொடங்கும் என்றும் குடியரசுத் தலைவர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கும் முன்னதாக, மகாராட்டிர மாநிலத்தில் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் முதல்வர் சுஷில் குமார் ஷிண்டே, கடந்த சனவரி மாதம் 29 ஆம் தேதியே மாநிலத்தின் தனியார் துறைகளில் தலித், பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக - 52 சதவிகித இடஒதுக்கீட்டிற்கான சட்டமுன்வரை வைக் கொண்டு வந்தார்.

இவ்விரு முயற்சிகளும் தலித் மக்களின் எதிர் காலத்திற்கு நம்பிக்கையளிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆனாலும், தனியார் துறையில் இட ஒதுக்கீட்டுக் கோரிக்கைகள் எடுத்த எடுப்பிலேயே இந்திய தொழில் அதிபர்கள் மற்றும் பார்ப்பன பொருளாதார நிபுணர்களின் எதிர்ப்பைச் சந்தித் துள்ளது. இந்தியத் தொழிலதிபர்களின் கூட்டமைப் பின் தலைவர் ஆனந்த் மகிந்த்ரா, மகாராட்டிராவில் தனியார் துறைகளில் இடஒதுக்கீடுகள் நடை முறைப்படுத்த நிர்பந்தப்படுத்தப்பட்டால், தொழிற் சாலைகளையும் வர்த்தகங்களையும் வேறு மாநிலத்திற்கு மாற்றுவோம் என மிரட்டியுள்ளார். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், பன்னாட்டுத் தொழிற் கழகங்களின் போட்டியைச்



படிப்பகம்

www.padippakam.com

சமாளிக்க முடியாமல் இந்திய நிறுவனங்கள் நலிந்துபோகும் சூழ்நிலை ஏற்படும் என்கின்றனர் பார்ப்பன பொருளாதாரப் புலிகள். காழ்ப்புணர்வு மிகுந்த இக்கருத்துக்குப் பின்னால், தாழ்த்தப்பட்ட மக்கள் திறமைக் குறைவானவர்கள் என்ற இந்திய இந்துச் சாதிப் புத்தி ஒளிந்து கொண்டிருப்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். அப்படியே வைத்துக் கொண்டாலும், இந்திய நிறுவனங்கள் பன்னாட்டுத் தொழிற் கழகங்களுடன் போட்டி போட்டுக் கொண்டிருப்பது உண்மைதானா?

பன்னாட்டு வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 2 சதவிகிதத்தைக்கூடத் தாண்டவில்லை. போட்டி யென்றால் அது இந்திய மண்ணில்தான். அதுவும் கூட தொழிற் போட்டி இல்லை; சந்தைப் போட்டி யாக அது இருக்கிறது. இத்தனை காலமும் திறமை மிக்கவர்களால் நடத்தப்பட்டு வருவதாகச் சொல் லப்படும் இந்தியத் தொழில் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டிப் போடும் பேச்சுக்கே இடமில்லாதபடி தரம் தாழ்ந்து நிற்கின்றன. இந்தியாவின் உலகமயமாக்கல், தனி யார்மயமாக்கல் என்பதெல்லாம் - இந்தியாவைப் பன்னாட்டுச் சந்தையாக்குவதில்தான் போய் முடிந் திருக்கின்றன. இந்தியத் தொழில் அதிபர்கள், பன்னாட்டுத் தொழிற் கழகங்கள் கடைவிரிக்க வழி விட்டு, அவைகளோடு வெட்கமற்ற முறையில் கூட்டு வைத்துக் கொண்டு மக்களைச் சுரண்டிக் கொள்ளையடிக்கிற வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே தொழில் திறமை என்றால், யார் அதிகமாக கொள்ளையடிக்கிறார்கள் என்பதுதான்.

தனியார் துறைகளில் இட ஒதுக்கீடுகள் நடை முறைப்படுத்தப்பட்டால், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்கத் தயக்கம் காட்டுவார்கள் என்ற புரளி கிளப்பிவிடப் படுகிறது. வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தி யாவில் தொழில் தொடங்குவதற்குக் காரணம் - இந்தியர்கள், திறமை மிக்க தொழில்நுட்பவாதிகள் என்பதால் அல்ல. மலிவான மனித உழைப்பு இங்கே கேட்பாரற்றுக் கிடைக்கிறது. தங்கள் நாட்டில் நூறு ரூபாய் செலவு செய்து முடிக்க வேண்டிய வேலையை, ஒரே ரூபாயில் முடித்துக் கொள்ளலாம் என்பதால்தான் இங்கே பன்னாட்டு நிறுவனங்கள் இங்கே நுழைந்திருக்கின்றன.



உலகின் மிகப்பெரிய சந்தை யாக இந்தியா விரிந்து கிடக்கிறது. இந்தியர்களின் மேற்கத்திய மோகமும், அறியாமையும் தங்கு தடையற்றச் சுரண்டலுக்கு வழியேற்படுத்தித் தருகின்றன. பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கும் அதன் சொத்து களுக்கும் உலகில் வேறு எங்கும் இல்லாத பாதுகாப்பு இங்கே கிடைக் கிறது. நினைத்தபடி உழைப்புச் சுரண் டலையும், வர்த்தகச் சுரண்டலையும் நடத்த முடி கிறது. இதுபோன்ற காரணங்களினால்தான் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் இங்கே படை யெடுக்கின்றன. தலித் மக்கள் தவிர்த்த இந்தியர் களின் திறமையில் மயங்கி பன்னாட்டு நிறுவனங் கள் இங்கே தொழில் தொடங்கவில்லை.

அப்படியே தனியார் துறைகளில் இடஒதுக் கீடுகள் அறிவிக்கப்பட்டாலும், அது பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர, சாதி அடிப்படையில் அல்ல என்று பார்ப்பன பொருளா தார ஜீவிகள் பேசி வருகிறார்கள். இக்கருத்து இந்தி யாவின் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளுக்கே முற்றிலும் எதிரானது. பல நூற்றாண்டு காலமாக சமூகத் தளத்தில் சாதி இழிவுகளில் சிக்கி கல்வி மறுக்கப்பட்டு, ஏழ்மையிலும் அறியாமையிலும் வைக்கப்பட்டிருந்த தலித் பழங்குடி மக்களுக்கு நாடு தரும் இழப்பீடாக அது இருக்கிறது. ஆட்சி அதிகாரத்திலும், நிர்வாகத்திலும் புறக்கணிக்கப் பட்ட மக்களுக்கு இந்திய அரசியல் சாசனம் தரும் விகிதாச்சார வாய்ப்புதான் இடஒதுக்கீடுகள். இவ்வுண்மையை திசை திருப்பி, குழப்பம் விளை விக்கவே பொருளாதார அடிப்படையில் இடஒதுக் கீடுகள் தேவை என்ற கருத்து பரப்பப்படுகிறது.

ஆனாலும், 'தனியார்துறைகளில் இடஒதுக்கீடு' பற்றிய இறுதியான தெளிவான திட்ட வரையறை கள் எதுவும் இதுவரை உருவாக்கப்படவில்லை. மத்திய அரசு இப்போதுதான் அறிவிப்புச் செய்தி ருக்கிறது. இனிமேல்தான் விவாதங்களும் எதிர்ப் புகளும் கிளம்பும். ஒருவேளை பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு இடஒதுக்கீடு தர ஏற்படுத்தப்பட்ட மண்டல் கமிஷன் போல ஒரு கமிஷன் ஏற்படுத்தப் பட்டு, இன்னும் பத்தாண்டுகள்கூட தள்ளிப் போக லாம். ஆனால், தனியார் துறைகளில் இடஒதுக்கீடு பற்றிய விரிவான விவாதங்களுக்குள் தலித்துகள் செல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

தனியார் துறையில் இடஒதுக்கீடு என்றால் என்ன? இடஒதுக்கீடுகள் என்றாலே வேலை வாய்ப் புகள்தானா? வெறும் வேலை வாய்ப்புகளை தேடி யலைபவர்களாக மட்டும் தலித்துகள் இருக்க வேண்டுமா? தலித் மக்களின் ஏழ்மையை மாற்றி அவர்களின் விகிதாச்சார வளர்ச்சிக்கு தனியார்துறை இடஒதுக்கீடுகள் உதவுமா? அல்லது இதுவும் ஏமாற்று வேலையா? தனியார் துறைகளில் இட ஒதுக்கீடுகள் நேர்மையாக நடைமுறைப்படுத்தப் படுமா? இடஒதுக்கீடுகள் முறை சார்ந்த தொழில் துறைகளில் மட்டும் கிடைத்தால் போதுமா? முறை சாராத தொழில்களில் இடஒதுக்கீடு தேவையில் லையா? தேவையெனில் அதை எப்படி நிறை வேற்றுவது? உள்நாட்டு உற்பத்தியிலும், வர்த்தகத் திலும் தலித்துகளின் பங்கு என்ன? போன்ற கேள்வி கள் பற்றி அடுத்த இதழில் விவாதிப்போம். ●



படிப்பகம்

www.padippakam.com

# சாமியை ஆக்கிரமிக்கும் சாதி !

சீர்காழி வட்டத்தில் உள்ள துறையூர் கிராமத்தில், சுமார் 150 ஆண்டுகால பழமை மிகுந்த அய்யனார் கோயில் உள்ளது. இக்கோயில் தொடக்க காலங்களில் சீர்காழி கிருஷ்ண மூர்த்தி கட்டுப்பாட்டிலும், நேரடி - வழிபாட்டிலும் இருந்து வந்தது. அக்காலங்களில் கோயிலின் அடிப்படை வேலைகளில் துறையூர் கிராமத்து மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அப்பொழுது தன் கட்டுப்பாட்டில் இருந்த பல வேலி நிலங்களை, அன்றாடம் கண்காணிக்க முடியாத கிருஷ்ண மூர்த்தி, தன் மொத்த நிலங்களையும் குத்தகை சாகுபடிக்கு விட்டார். இதில் பெரும்பான்மையான நிலங்களை, தலித் மக்கள் குத்தகை சாகுபடிக்கு பெற்றுக் கொண்டனர்.

1970 இல் சாகுபடி நிலங்கள் அனைத்தும் குத்தகைதாரரிடமே ஒப்படைக்கப்பட்டன. கோயிலைச் சுற்றி தலித் மக்களின் நிலங்களே அமைந்தன. அய்யனார் கோயிலின் சிரமைப்புப் பணிகள் மற்றும் வழிபாடுகளை, தலித் மக்கள் முழுவதும் ஏற்றுக் கொண்டனர். 1989 இல் எம்.ஜி. ராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்த பொழுது, கோயில்களுக்கு ஒரு கால பூசை நடத்துவதற்கான திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் கிழ் ஒவ்வொரு கோயிலிலும் பூசை செய்வதற்காக ஒரு பூசாரியும் நியமிக்கப்பட்டார். அதன்படி துறையூர் அய்யனார் கோயிலுக்கும் நல்லசாமி என்கிற தலித், பூசாரியாக நியமிக்கப்பட்டார்.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத வன்னியர்கள், எதிர் நிலையான வேலைகளில் தொடர்ந்து இறங்கினர். இந்து அறநிலைத் துறையின் சார்பில் கோயிலின் வளாகத்தில் 'போர்டு' ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இதில் ஒரு கால பூசை நடந்து கொண்டிருப்பதற்கான அறிவிப்புகளும் கோயிலின் பூசாரி பெயரும் எழுதப்பட்டிருந்தது. அப்பலகையில் ஒரு தலித் பூசாரி என்று குறிப்பிட்டுள்ளதை தாங்க முடியாத சாதி வெறியர்கள், சில நாட்களில் பலகையை சேதப்படுத்தினர். பிறகு, பூசையும் நிறுத்தப்பட்டது. ஒரு கால பூசை நின்ற பிறகு, கோயிலின் திடலிலுள்ள பனை மரங்கள், ஈச்ச மரங்கள், வேம்பு, கருவை ஆகியவற்றை கோயிலை ஒட்டி சாகுபடி நிலங்கள் வைத்திருக்கக் கூடிய ஓய்வு பெற்ற ஆசிரியர் ராமலிங்கத்தின் குடும்பத்தினர் கண்காணித்து வந்தனர்.



வன்னியர் அதிகாரத்திற்குள் எடுத்துக் கொண்ட கோயில் கட்டும் பணி தொடக்கம்



பூசாரி நல்லசாமி

அய்யனார் கோயிலில் தலித் மக்கள் தங்கள் பண்பாட்டு அதிகாரத்தைப் பயன்படுத்தி - வழிபட்டு வருவதை விரும்பாத வன்னியர்கள், கொஞ்சம் கொஞ்சமாக கோயிலுக்குள் அய்யனாரை வழிபட வந்தனர். பிறகு இந்து அறநிலைத் துறையின் மூலம் இக்கோயிலுக்காக ஒரு அறக்கட்டளையை ரகசியமாக உருவாக்கினார்கள். இது பற்றி கோயிலின் பூசாரி நல்லசாமியிடமோ, துறையூர் தலித்துகளிடமோ அல்லது கோயிலின் இடம், மரங்களை கவனித்து வரும் ராமலிங்கம் குடும்பத்தினரிடமோ தெரிவிக்கவில்லை. மேலும், இந்தக் கோயிலின் அறங்காவல் குழுத் தலைவராக அவர்களுக்குள் ஒரு வன்னியரையே தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

அண்மைக் காலமாக, வன்னியர்கள், 'இனி அய்யனார் கோயில் தங்களுடைய முழுக் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும். தலித் மக்கள் எந்தவொரு அதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது' என திட்டமிட்டனர். அதன்படி 12.6.2004 அன்று, துறையூர் வன்னியர்கள் ஒன்று கூடி, அய்யனார் கோயிலை தங்களுடைய செலவில் புதிதாகக் கட்டி அதன் அதிகாரம் முழுவதையும் தாங்களே எடுத்துக் கொள்வதற்கான முதல் பணியில் இறங்கினர்.

அய்ந்து பனைமரம், மூன்று ஈச்ச மரம், மூன்று வேம்பு மற்றும் கருவை மரங்களை - கோயில் கட்டுவதற்கு இடையூறாக இருக்கிறது என வன்னியர்கள் கிரேன் மூலம் பிடுங்கி எறிந்தனர். மேலும், கோயிலைச் சுற்றி திடலை சமன் செய்து புதிய கோயில் கட்டுவதற்கானப் பணியில் இறங்கினார்கள். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத தலித் மக்கள், 'வன்னியர்களின் அத்துமீறலை ஒத்துக் கொள்ள முடியாது' என வெகுண்டெழுந்து காவல் துறையில் புகார் செய்தனர். கட்டுமானப் பணி தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அய்யனார் கோயில் மீண்டும் தலித் மக்களின் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என்றால், அடங்க மறுத்துப் போராடினால் மட்டுமே முடியும்.

- பூவிழியன்


மருதா பதிப்பகம் வெளியிடும்

## அடிமைகளின் தலைவர் அய்யன்காளி

நூல் வெளியீட்டு விழா

18.7.2004 ஞாயிறு மாலை 5 மணி

மீனாட்சி வணிக வளாகம், ராதாபுரம் சாலை, வள்ளியூர்

தலைமை : ந. அரணமுறுவல்
வெளியிடுபவர் : பொன்னீலன்
முதல் பிரதியினைப் பெறுபவர் : எப். ஞானப்பிரகாசம்
விற்பனை பிரதியினைப் பெறுபவர் : கொ.வீ. நன்னன்
நூல் மதிப்புரை : ஜான் ஜெயகரன்
கருத்துப் பொழிவு : ஓவியா
சிறப்புரை : யாக்கன்
ஏற்புரை - நூலாசிரியர் : ஏபி. வள்ளிநாயகம்
கலை நிகழ்வு : கே.எஸ். முத்து



அமைப்பு : தமிழ் நாடு கலை - இலக்கியப் பெருமன்றம், வள்ளியூர் கிளை




படிப்பகம்

வறட்சி / கடன் / பொருளாதாரக் கொள்கை

# வேட்டையாடப்படும் விவசாயிகள்

■ பி. சாய்நாத்

ஆந்திரப் பிரதேசம் கடுமையான விவசாய நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. கிராமங்களில் நிலவும் கொடூரமான துன்பங்களின் வெளிப்பாடே - விவசாயிகளின் தற்கொலை. லட்சக்கணக்கான மக்களின் வாழ்வின் மீது, கடந்த பத்தாண்டுகளாக விழுந்த மரண அடியின் விளைவே இது. இத்தகைய நெருக்கடி நிலை, தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் குடும்பங்களையும் மீறிச் செல்கிறது. இதுபோன்ற தற்கொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டியது, மிக மிக அவசரமானதொரு பணியாகும். ஆனால், பரவலாக நீக்கமற நிறைந்திருக்கும் துன்பங்களைப் போக்காமல், இதற்கு மட்டும் தீர்வு காண்பது என்பது - குழாயைத் திறந்து விட்டுத் தரையைத் துடைப்பதற்கு ஒப்பாகும்.

கடந்த ஆறு வாரங்களில் 300 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். ஆந்திரப் பிரதேசத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு, விவசாயத் துறையில் அமைப்பு ரீதியான தாக்குதல் தொடுக்கப்பட்ட போது, ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். அதிகரித்து வரும் பசி மற்றும் வறுமையினால், பெருமளவிலான மக்கள் சமச்சீரற்ற வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த ஆண்டு ஆந்திராவில் பட்டினியாலும் மக்கள் இறந்தனர். இதே நிலை நீடித்தால், இன்னும் பலர் இறப்பதற்கு வாய்ப்புள்ளது.

பத்திரிகைகளைப் பொருத்தவரை, அவர்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல. பதவியேற்று ஒரு மாதமே ஆன அரசும் எதுவும் செய்துவிடப் போவதில்லை. ஏழு ஆண்டுகளாக தற்கொலை நிகழ்ந்து வருகின்றன. சில காலகட்டங்களில் இது இன்னும் அதிகமாக நிகழ்ந்திருக்கிறது. பசி பட்டினியும் அதிகரித்தே வருகிறது. 'இந்து' பத்திரிகை சார்பில் பல்வேறு மாவட்டங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வும் இதை உறுதி செய்கின்றன.

இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலானது. 'வறட்சி' என்ற வழக்கமான வார்த்தைக்குள் இதை அடக்கிவிட முடியாது. வளமான பகுதிகளில் உள்ள விவசாயிகள்கூட, தற்கொலை செய்து கொள்கின்றனர். கிராமப்புற இயற்கையே அருவருப்பாகக் காட்சியளிக்கிறது. விவசாயக் கடன் மற்றும் நிதி முறைகள் நொடிந்து போய்விட்டன. வட்டிக்காரன் தொல்லை அதிகரித்துள்ளது. ஏறிவிட்ட விலைவாசிக்கு சிறு விவசாயிகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்குப் பதில் வர்த்தக விளைபொருட்களைப் பயிரிடும் சூழலும், மோசமான விளைவுகளையே ஏற்படுத்தின. அனைத்துக்கும் மேலாக மின்கட்டண விலையும் உயர்ந்து விட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள் பறிக்கப்பட்டது, பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விட்டது.

> “ தற்கொலைகள் ஆந்திராவில் மட்டும் அதிகம் நடப்பது ஏன்? வேறு எந்த மாநிலங்களைக் காட்டிலும் - இந்தியா முழுவதும் பின்பற்றப்படும் பொருளாதார மாதிரியை, சந்திரபாபு தான் மூர்க்கத்தனமாக நடைமுறைப்படுத்தினார். ”



இத்துடன் வாங்கும் திறனும் பெருமளவில் குறைந்து விட்டது. பல ஆண்டுகளாக கிராமப்புற வேலைவாய்ப்பு மிக மோசமான நிலையில் உள்ளது. நிலமுள்ள விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். ஏறக்குறைய 40 சதவிகிதம் உள்ள விவசாயத் துறையை மாற்றியமைக்க நடைபெற்ற முயற்சிக்கு, ஆந்திரப் பிரதேச மக்கள் அளிக்கும் விலை இது. அடுத்து என்ன செய்வதென்றே தெரியாத சூழலில் அவர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

இது குறித்து கணக்கெடுப்பு நடத்திய போது, எல்லா வீடுகளும் வெளிவர முடியாத கடனில் மூழ்கியிருப்பது தெரிய வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பயிர் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், ஒவ்வொருவரும் தங்கள் நிலங்களை விற்கவோ, கால்நடைகளை விற்கவோ அல்லது இரண்டையும் விற்கும் நிலைக்கோ தள்ளப்பட்டனர். பயிரிடுவதற்கு தண்ணீரைப் பெற, இவர்கள் அனைவரும் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு செலவு செய்துள்ளனர். கடன் வாங்கப்பட்ட பணம் அனைத்தும், ஆழ்துளைக் கிணறுகளில் மூழ்கியுள்ளது. கடன் கொடுத்தவர்களுக்கு, சந்தை விலைக்குக் கீழாக பொருட்களை விற்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ''கிராமப்புறங்களில் நடைபெறும் வணிகக் கொள்ளைக்கு, விவசாயிகள் இரையாக்கப்பட்டுள்ளனர்'' என்று பேராசிரியர் கே. நாகராஜ் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகைகளின் தற்போதைய விழிப்புணர்வு முரண்நகையாக இருந்தாலும், அது வரவேற்கத்தக்கதே. தற்கொலைகள் மிக அதிகமாக இருந்த காலங்களில், அது பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லாத பத்திரிகையாளர்கள், தற்பொழுது இறந்து போன உடல்களை எண்ணத் தொடங்கியுள்ளனர். அவர்கள் இது குறித்து அமைதி காத்ததை ஒப்புக் கொள்ள முடியாவிட்டாலும், ஏதோ செய்ய முயலுகின்றனர். தெலுங்கு மொழியில் எழுதும் சில பத்திரிகையாளர்கள், இப்பிரச்சினை குறித்துப் பெரிய அளவில் சிறப்பாக எழுதி வந்தனர். 'தேசிய பத்திரிகைகள்'தான் இப்பிரச்சினையை - ஏளனத்தோடும், அவநம்பிக்கையுடனும் பார்த்தன.

'தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைப்பதால் தான் இது தொடர்கிறது' என்று சொல்லப்படும் கருத்துதான் இதில் கொடூரமான செய்தி. என்னே முரண்பாடு! ஒருவர் தற்கொலை செய்து கொண்டா லாபத்தை அடைய முடியும்? ஒரு விவசாயி, அரசு

www.padippakam.com

கொடுக்கும் ஒரு லட்சத்திற்காக குழந்தை களுடனும் மனைவியுடனும் வாழ்வதற்கு பதிலாக செத்துப் போகவா விரும்புவார்? இன்னொரு உண்மையையும் நாம் குறிப் பிட்டாக வேண்டும். 2000-01 ஆண்டு களில் பெருமளவு தற்கொலை நடைபெற்ற போது, இழப்பீடுகள் தரப்படவில் லையே! இத்தகைய கருத்தியல்கள், நம் மிடையே தேய்ந்து வரும் மனிதநேயத் தையே சுட்டிக் காட்டுகின்றன.

இதுபோன்ற தற்கொலைகள், வேறு எங்கும் நடைபெறுவதைவிட ஆந்திரா வில், அதிகம் நடப்பது ஏன்? இந்தியா முழுவதும் கடைப்பிடிக்கப்படும் அடிப் படையான 'பொருளாதார மாதிரி'தானே இங்கும் பின்பற்றப்படுகிறது? இதற்குக் காரணம், வேறு எந்த மாநிலங்களைக் காட்டிலும் - இப்பொருளாதார மாதிரியை சந்திரபாபு (நாயுடு)தான் மூர்க்கத்தனமாக நடைமுறைப்படுத்தினார். தேசிய அளவிலும், உலக அளவிலும் உள்ள மேல்தட்டு வர்க் கம் அவரை ஆதரித்தது. எனவே, அவரும் எவ்வித மனசாட்சியின் உறுத்தலுமின்றி செயல்பட்டார். இம்மாநிலத்தில் ஏழை களுக்கு ஆதரவாக இருந்த - பெரும் பாலான ஆதரவு அமைப்புகளும் ஈவிரக்க மின்றி தூக்கியெறியப்பட்டன.

மேலும், இம்மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரம் குறைந்ததற்கு 'ஜன்மபூமி வளர்ச்சி மாதிரி'த் திட்டமும் ஒரு காரணமாகும். இது, பஞ்சாயத்து அமைப்புகளை ஓரங்கட்டி, அவ்வூராட்சி களின் வளத்தைச் சுரண்டி - உள்ளாட்சி ஜனநாயகத்தையே சீர்குலைத்து விட்டது. எனவே, கிராம அளவில் ஒருங்கிணைந்த செயல்பாடு நிலைகுலைந்து போனது. இந்த நெருக்கடி நிலையின்போது, ஊராட்சி மன்றங்கள், குறைந்த அளவுகூட தலையிட்டு எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. உள்ளாட்சி ஜனநாயகம் செயலிழந்து போனதைத் தொடர்ந்து, அந்நியர் தலையீடு அதிகமானது.

ஆந்திரப் பிரதேசம் - மக்களுக்காக, மக்களின் விருப்பத்திற்கேற்ப, மக்களால் நடத்தப்படவில்லை. 'மெக்கின்செ', 'உலக வங்கி', 'உலக நிதி ஆதார மய்யம்' மற்றும் இதே போன்ற பன்னாட்டு நிறு வனங்களின் ஆதரவுடன்தான் ஆந்திரப் பிரதேசம் செயல்படுகிறது. ஆயிரக்கணக் கில் 'விலையுயர்ந்த ஆலோசகர்கள்' திட்டம் வகுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இவை அனைத்துமே சட்டப்படி தேர்வு செய்யப்படாத அதிகார மய்யங்களாகும்.

பிற மாநிலங்களிலும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். சென்ற ஆண்டு கர்நாடகத்தில், விவசாயிகளின் தற்கொலை அதிகளவில் இருந்தது. மகா ராட்டிரம், பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானி லும் இக்கொடுமை நிகழ்ந்தது. கேரளாவும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒருவேளை பத்திரிகைகளின் அணுகுமுறை மாறியிருப் பதால், பிற இடங்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி ஓரளவுக் குத் தெரிந்து கொள்ள முடியும். விவசாயி களின் தற்கொலை அதிகளவு இருந்த ஆண்டுகளில், எந்த தேசியப்பத்திரிகை யும் - இதை அட்டைப்படக் கட்டுரையாக வெளியிடவில்லை.



**❝ புதிய நாடாளுமன்ற அமைச் சரவை பொறுப்பேற்ற முதல் நாளன்றே ஆந்திராவில் 8 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். ஆனால், அன்று நிதி அமைச்சர் அவைக்கு வரவில்லை. அவர், மும்பை பங்குச் சந்தை வீழ்ச்சியில் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த லட்சாதிபதிகளின் துயர் துடைப் பதில் கவனமாக இருந்தார். ❞**

தற்பொழுது பொறுப்பேற்றுள்ள புதிய அரசு, குறைந்தது இத்தகைய தற்கொலைகள் நடந்து கொண்டிருப்பதையாவது ஒத்துக் கொண்டது. அரசு, தற்கொலைகளின் எண் ணிக்கையை வேண்டுமானால் குறைக்கலாம். ஆனால், தற்கொலைகள் நடைபெறுவதை மறுக்க முடியவில்லை. அரசு அறிவித்தி ருக்கிற குறைந்தளவு செயல்திட்டங்களைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்வது அதில் ஒரு திட்டம். கடன்களை ஆறு மாதக் காலத்திற்கு காலந்தாழ்த்திக் கொடுக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆனால், இதனால் பிரச்சினை முடிந்து விடப் போவதில்லை.

குறைந்த காலத்திட்டத்தில் 'வேலைக்கு உணவு அளிப்பது' என்ற திட்டமானது, உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்த ஆறு மாத காலத்தில், அவர்கள் கட னிலிருந்து வெளியேற வேண்டிய திட்டங் களை அரசு தீட்ட வேண்டும். அரசு வரு வாயை உயர்த்தி, ஏழைகளிடையே வாங்கும் வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். முன் னெப்போதும் இல்லாத அளவுக்கு கிரா மப்புற வேலைவாய்ப்பையும் உருவாக்கி, உள்ளாட்சி அமைப்புகளைப் பலப்படுத்த வேண்டும். இந்தத் தேர்தலில் வாக்காளர் களின் கோபம் எந்தளவுக்கு உக்கிரமாக வெளிப்பட்டது என்பதை, புதிதாகப் பொறுப் பேற்றுள்ள மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இந்த நெருக்கடி எவ் வளவு தீவிரமாக இருக்கிறது என்பதை, மய்ய அரசு உணர்ந்திருக்கிறதா என்பது சந்தேகமே.

நாடாளுமன்றம் சூன் 2 அன்று கூடியது. புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற முதல் நாளன்றே - ஆந்திப் பிரதேசத்தில் எட்டு விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். நாடாளுமன்றம் சூன் 10 அன்று முடியும்போது, விவசாயிகளின் தற் கொலை எண்ணிக்கை 69 ஆக உயர்ந்து விட்டது. ஒரு வரலாற்றுப் பூர்வமான தேர் தலுக்குப் பிறகு நாடாளுமன்றம் நடந்து முடிந்திருக்கிறது. ஆனால், முதல் நாளே நிதி அமைச்சர் அவைக்கு வரவில்லை. அவர், மும்பை 'தலால் தெரு'வில் உள்ள பங்குச்சந்தை வீழ்ச்சியில் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த - லட்சாதிபதிகளின் துயர் துடைப்பதில் கவனமாக இருந்தார். புதிய அரசு எதற்கு முன்னுரிமை அளித்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, நம்மால் மகிழ்ச்சி அடைய முடியவில்லை.

இந்திய ஜனநாயகத்தின் ஒவ்வொரு துறையும் - அரசு, அரசியல் தலைவர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் திட்டக் குழு உறுப்பினர்கள் என அனைவரும் ஆந் திரப் பிரதேச விவசாயிகளின் துன்பங் களுக்குக் காரணமாக இருந்திருக்கிறார் கள். மனித உரிமைகள் குழு மற்றும் முன்பு செயல்பாட்டுடன் விளங்கிய நீதிமன்றமும் ஒரு காரணம். அடுத்தது பத்திரிகைகள். சமூகத்தின் பலவீனத்தைக் கண்டுபிடித்து எச்சரிக்கும் எளிமையான - ஆனால், ஜன நாயகத்தில் மிக முக்கியமானப் பணியைக் கூட செய்ய அவை முன்வரவில்லை. ●

நன்றி : 'தி இந்து' - 22.6.2004

தமிழில் : புலேந்திரன்



படிப்பகம்

www.padippakam.com

# பெருந்தலைவர்

# எம்.சி. ராஜா - III

■ ஏபி. வள்ளிநாயகம்



இளவரசர் எட்டாம் எட்வர்ட், 1922 ஆம் ஆண்டு சனவரி மாதம் சென்னைக்கு வருகை தந்தபோது, 'பி அண்ட் சி மில்' வேலை நிறுத்தத்தையொட்டி எழுந்த கலவரம் நீடித்திருந்தது. புளியந்தோப்பு என்ற சேரிப்பகுதி, சாதி இந்துக்களால் தீவைக்கப்பட்டு அடியோடு எரிந்து சாம்பலானது. இளவரசரைச் சந்தித்த எம்.சி. ராஜா - 'பூர்வகுடிகளின் பாதுகாப்பிற்கு உத்திரவாதத்தை ஏற்படுத்தி விட்டுத்தான், இளவரசர் தன் தாயகம் திரும்ப வேண்டும்' என்று வலியுறுத்தினார். சாதித் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இருந்த திரு.வி.க.வை நாடு கடத்துவதற்கு ஆளுநர் வெல்லிங்டன் தயாரானார்.

இச்சூழலில், நீதிக் கட்சியின் தலைவர் தியாகராயர், பூர்வகுடிகளின் நம்பிக்கையைப் பெறும் வகையில் - பாதிக்கப்பட்டோரின் உற்ற தோழராக விளங்கிய 'பற நாயுடு' என்று அழைக்கப்பட்டு வந்த டி. சுந்தர்ராவ் (நாயுடு)வை கேப்டனாகக் கொண்ட ஒரு படையை நிறுவி, கலகக்காரர்களை அடக்கி ஒடுக்கினார். சேரிப் பகுதிகள் எரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த 'மாடல் லைன்ஸ்' என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, அதை மாநகராட்சியின் மூலம் நிறைவேற்றினார். இதன் மூலம் எம்.சி. ராஜா, தன் மீது கொண்டிருந்த அதிருப்தியைப் போக்கினார்.



'பி அண்ட் சி மில்' கலவரத்தில் எம்.சி. ராஜாவுக்கு உறுதுணையாக - பூர்வ குடித் தலைவர்கள் எல்.சி. குருசாமி, சுவாமி தேசிகானந்தா ஆகிய இருவரும் இருந்தனர். தந்தை சிவராஜ், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்குமாக வாதாடி, விடுதலையைப் பெற்றுத் தந்தார். இது, அவரின் வாழ்நாள் குறிக்கோளின் ஒரு சாதனையாக அமைந்தது.

1919 ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டப்படி நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. அன்னிபெசன்ட் தலைமையிலான 'ஹோம் ரூல்' இயக்கம் தோல்வியுற்றது. தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 98 இடங்களில் 63 இடங்களை நீதிக்கட்சி பெற்று ஆட்சியில் அமர்ந்தது. எம்.சி. ராஜா நீதிக்கட்சி ஆட்சியினை வரவேற்று ஆதரவளித்தார்.

நீதிக் கட்சியின் முதல் அமைச்சரவை, இந்து அறநிலையப் பாதுகாப்பு சட்டவரைவைக் கொண்டுவரத் தீர்மானித்தது. இச்சட்டவரைவு, அக்காலத்தில் மிகவும் புரட்சிகரமான ஒன்றாகக் கருதப்பட்டது. அறநிலையத் துறையை ஏற்படுத்தி அதன் மூலம் பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றை ஏற்படுத்தி, பொதுமக்கள் அனைவரும் பயன்பட வழிவகை செய்தது. இதனால், இச்சட்டவரைவை பார்ப்பனர்களும், ஆதிக்கச் சாதி இந்து வைதீகர்களும் கடுமையாக எதிர்த்தனர்.

இந்து அறநிலையப் பாதுகாப்பு சட்டவரைவு என்பது, கோயில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி, ஊழல்களைக் களைந்து சீர்படுத்துவதாகும். மேலும், கோயில் நிர்வாகமும், சொத்துகளும், வருமானமும் பரந்துபட்டு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பலன் தருவதாக அமையும் என்று எம்.சி.ராஜா, ஆளுநர் லார்டு வெல்லிங்டனைச் சந்தித்து எடுத்துரைத்தார். இச்சட்டவரைவை சட்டமாக்கிட, வைசிராய் லார்டு ரீடிங்குக்கும் கடிதம் எழுதினார். (இந்து சனாதன தூதுக் குழுவின் குறுக்கீட்டினால், இச்சட்டவரைவுக்கு ஒப்புதல் அளிக்க தாமதித்த வைசிராய், 1925 ஆம் ஆண்டு சனவரியில் தனது ஒப்புதலை அளித்து சட்டமாக்கினார்.)

1922 இல் எம்.சி.ராஜா தென்னிந்திய அளவில் பூர்வகுடிகளின் மாநாட்டினைக் கூட்டினார். இதில், தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் பல தீர்மானங்களை நிறைவேற்றி, அரசு அவற்றை செயல்படுத்துவதிலும் வெற்றி கண்டார். பூர்வகுடிகளின் முன்னேற்றத்தில் முழுவீச்சாயிருந்த எம்.சி. ராஜாவை, ஆங்கிலேய அரசு போற்றிப் பெருமைப்படுத்த முடிந்தது. ஆளுநர் லார்டு வெல்லிங்டன் பரிந்துரையின் பேரில், சென்னை மாவட்ட ஆட்சியாளர் ஏ.ஆர். கர்க்ஸ், அய்.சி.எஸ்., 15.12.1922 அன்று எம்.சி. ராஜாவுக்கு 'ராவ்பகதூர்' என்ற பட்டத்தினை அளித்து சிறப்பு செய்தார்.



படிப்பகம்

www.padippakam.com

1923 ஆம் ஆண்டு சூலை மாதம் 21 ஆம் நாள் தென் தமிழ் நாட்டின் கோயில் பட்டியில், இரண்டாவது தென்னிந்திய பூர்வ குடிகளின் மாநாட்டினை எம்.சி. ராஜா கூட்டினார். இம்மாநாட்டில், ''நாம் இந்த நாட்டில் சலுகைகளுக்கும் உரிமைகளுக்கும் உரியவர்கள் என்பதை, மற்ற வகுப்பார்கள் மறந்து விட்டுப் பேசுகின்றனர். நாம் அறியாமையிலேயே இருப்போம்; நம்மை அவர்கள் ஆண்டு கொண்டே இருக்கலாம் என்று நினைப்பதுதான் - உண்மையில் பெரும் அறியாமையாகும். நான் கேட்கிறேன், நாம் ஏன் அவர்களுக்கு அடங்கியவர்களாக இருக்க வேண்டும்?'' என்று சூளுரைத்தார். கூட்டுறவுத்துறைக்கு கவுரவத் துணைப் பதிவாளராக 15.8.1922 அன்று எம்.சி. ராஜா நியமிக்கப்பட்டார்.

1924 ஆம் ஆண்டு ஆளுநர் லார்டு வெல்லிங்டனால், சென்னை பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினராக நியமனம் பெற்றார். அரசுத் துறைகளில் அரசு ஆணைகள் (வகுப்புரிமை ஆணைகள்) சரிவர நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய, ஒரு பாதுகாவலர் மற்றும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று சட்டமேலவையில் நீதிக்கட்சியினரோடு சேர்ந்து எம்.சி. ராஜாவும் கோரிக்கை விடுத்தார்.

1925 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 அன்று, நீதிக் கட்சியின் தலைவர்கள் டி.ஏ. ராமலிங்கம், டாக்டர் சி. நடேசனார் முன் முயற்சியில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதன்படி, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப் பட்டு, அக்குழு அரசுத் துறைகளில் உள்ளடங்கிய அலுவலகங்களில் - வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி நியமனங்கள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து தகவல் அளிக்கும். நிலவும் உத்தியோக ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிந்து,

> "எம்.சி. ராஜா அவர்கள் தாழ்வு மனப்பான்மையின் எதிரி. அவர் ஒரு சமுதாயப் புரட்சியாளர். அவர்தம் இனத்தைக் காப்பாற்ற வந்த மாவீரர். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தலைசிறந்த வழிகாட்டி! அவர் உருக்குலைந்த தம் மக்களுக்காக அயராது போராடியவர். அவர் தடுமாறி நின்ற சமுதாயத்தின் ஒப்பற்றத் தலைவர். தாழ்த்தப்பட்ட மக்களை விழிப்புற வைத்த முதன்மைத் தலைவர்."
>
> 'பயனீர்' இதழ் -
> அலகாபாத், 12.2.1932

எந்தெந்த துறைகளில் பல தகுதி வாய்ந்த வாய்ப்புகள் மறுக்கப்பட்ட வகுப்பினர்களுக்குக் கிடைக்காமல் இருந்தனவோ, அவர்கள் தத்தம் பங்கினைப் பெறுவது எப்படி என்ற வழிமுறைகளையும் கூற வேண்டும் என்பதே - அக்குழு சட்டமன்றத்திற்குப் பரிந்துரைத்த தீர்மானமாகும்.

சட்டமன்றம் பரிந்துரைத்த இக்குழுவில், எம்.சி.ராஜா இடம் பெற்றார். எம்.கிருஷ்ணன் தலைமையேற்ற இக்குழுவில் ஓ. தணிகாசலம், பி. முனுசாமி, டி. நரசிம்மன், ஆர்.எஸ். கிருஷ்ணா, எம். அப்துல்லா, எஸ். அற்புதசாமி ஆகியோரும் இடம் பெற்றனர். இத்தகைய முயற்சிகள், நடவடிக்கைகள் காரணமாக - உத்தியோக மண்டலத்தில் உள்ள பார்ப்பனர் ஆதிக்கக் குறைப்பு மெல்ல மெல்ல ஆனால், உறுதியாக வலிமை பெறத் தொடங்கியது. ஒட்டு மொத்த கண்ணோட்டத்தில், அரசுப் பணிகளில் பார்ப்பனர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையத் தொடங்கியது.

'ஆதி திராவிடர் மகா ஜன சபை'யின் பொதுச் செயலாளராக 1916 ஆம் ஆண்டு எம்.சி. ராஜா, ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1919, 1923, 1925, 1929 ஆகிய ஆண்டுகளிலும் தலைமையேற்றுச் செயல் பட்டார். 1927லிருந்து அமைப்பினை இந்திய அளவில் விரிவாக்கம் செய்தார். தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் சென்று பூர்வகுடிகளை அமைப்பாக்கி ஒருங்கிணைத்தார்; உரிமைக் குரல் எழுப்பினார்.

அக்காலத்தில் எம்.சி. ராஜாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டங்கள் 537. இதில் 106 மாநாடுகளாக நிகழ்ந்தவை ஆகும். பூர்வகுடியின் பிற தலைவர்களை ஒப்பிடும் போது, எம்.சி. ராஜாவின் உழைப்பும் விடா முயற்சியும் - நம்மை வியப்பின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியதாகும். 1926 இல் எம்.சி. ராஜா தன் முயற்சியால் மேலும் ஒரு மாணவர் விடுதியினை அரசு திறக்க ஏற்பாடு செய்தார். அவ்விடுதி, தொழிலாளர் நலத் துறைக் காப்பாளர் சி.எப். பாத்திசன் பெயரில் அமையப் பெற்றது. சென்னை மாகாண ஆளுநர் சர் நார்மன் எட்வர்ட் மர்ஜோரி பேங்க்ஸ் அவர்களால், மீண்டும் சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினராக்கப் பட்டார். எம்.சி. ராஜாவின் விடாமுயற்சியில் 21.11.1927 முதல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில், பூர்வகுடி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

'ஆதி திராவிடர் மகா ஜன சபை' 1919லேயே மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீட்டினைக் கேட்டது, இரட்டைவாக்குரிமையின் கருப்பொருளையும், மூல விவாதத்தையும் தொடங்கி வைத்தது. இதன் படைப்பாளராக விளங்கிய எம்.சி. ராஜா, 1919 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட 'சைமன் குழு'வை வரவேற்றார். 3.2.1928 அன்று தொடங்கிய 'சைமன் குழு'வின் பணியினை அங்கீகரித்து சான்றியமளித்தார்.

## இந்தியர்மயமானால் ஆபத்து

"தகைமைச் சான்றோரே தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். தாங்கள் இங்கிலாந்து சென்றவுடன் - 'தாழ்த்தப் பட்ட இந்தியர்' தங்களின் நலன்களைக் காக்கும் அறங்காவலர்களாகக் கருதுகின்றனர். உயர்த்தப்பட்ட குலத்தவனே ஆளத் தகுதியுடையவன் என்ற சாதிய அடிப்படை இந்நாட்டில் இருக்கிறவரை, உழைப்பாளர்களை ஒதுக்கி வைத்திருக்கின்றவரை, பழங்குடிகளின் நலன்கள் பாதிக்காதபடி கண்காணிக்கவும், கட்டுதிட்டம் செய்யவும், ஒத்துபோகக் கூடிய ஆட்சி இங்கு தேவை. ஆங்கிலேயே அரசாங்கம் பெருவாரியான சாதி இந்துக்களின் விருப்பு வெறுப்புக்காக, தங்களின் பண்பாட்டிலிருந்து மறுவி - தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையான வகுப்பாரின் நலன்களைப் பாதிக்கும் முறையில் ஒருபோதும் நடக்கக் கூடாது. 'இந்தியர்மயம்' ஆக்கப்பட வேண்டுமென்ற கூச்சல் திடீரென பலம் பெற்று வெற்றியும் கண்டுவிட்டால், தாழ்த்தப்பட்ட நாங்களெல்லாம் நாதியற்று எங்கள் பூண்டே இல்லாது மறைய நேரிடும்."

*- எம்.சி. ராஜா, சென்னை மாகாண பூர்வகுடிகள் சார்பில் 5.4.1924 அன்று, சென்னை மாகாண ஆளுநராகயிருந்த வெலிங்டன் பிரபுவின் பிரிவு உபசாரத்தின்போது.*



படிப்பகம்

www.padippakam.com

1929 இல் எம்.சி. ராஜா இங்கிலாந்து அரச குடும்பத்தினரின் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். லண்டனில் சூலை 22 இல் ரோட்டரிசங்கத்தில் ஆற்றிய உரையில், இந்திய ஒடுக்கப்பட்டோரின் பிரச்சனைகளை சரியாக ஆராய்ந்து செயல்படுத்த ஆட்சியாளர்களின் இயலாமையையும், இந்திய பார்ப்பனியச் சமூக மக்களின்சாதிய மனவேறுபாட்டு உணர்வினையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார்.

செப்டம்பர் 30 அன்று லண்டனில் 'சிறுபான்மையோருக்கான பாதுகாப்பு' என்ற கட்டுரையை வெளியிட்டார். இவ்வெளியீட்டினைப் படித்துணர்ந்த இங்கிலாந்து அரசியல் பிரமுகர்கள், எம்.சி. ராஜாவின் கருத்துகளின் நியாயத்தை ஒப்புக்கொண்டு ஊக்குவித்தனர். நாளடைவில் பிரிட்டிஷ் அரசு சில திட்டங்களைக் கொண்டு வந்து, தலித் மக்கள் பலன் பெற ஏதுவானதற்கு - இவ்வெளியீடும் ஓர் அடிப்படையாக அமைந்தது. எம்.சி. ராஜாவின் இங்கிலாந்து பயணம், லண்டனிலுள்ள பத்திரிகைகள் இந்திய பூர்வ குடிகள் மீது கவனத்தை ஏற்படச் செய்தது. 7.9.1929 அன்று வெளியான 'லண்டன் டைம்ஸ்', ''தாழ்த்தப்பட்ட மக்கள் பல நூற்றாண்டு காலமாக தொல்லைக்குள்ளாகி ஒடுக்கப்பட்டு வந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் தங்கள் உரிமையின் பேரால் தேவைகளைக் கேட்பது - அவர்களுக்கு இந்த நாடு கடமைப்பட்டிருக்கிறது என்பதால்தான்'' என்று செய்தி வெளியிட்டது.

எம்.சி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார். 24.3.1933 அன்று இந்திய நாடாளுமன்றத்தில், தீண்டாமை ஒழிப்புச் சட்டவரைவைக் கொண்டு வந்தார். கோயில் நுழைவுக்கான சட்டவரைவு ஒன்றினையும் உருவாக்கினார். 1.8.1934 அன்று, தற்காலிக அவைத் தலைவராகப் பொறுப்பேற்று நாடாளுமன்றத்தினை நடத்தினார்.

1935 இல் ராமநாதபுரத்தில் 'ஆதி திராவிடர் மகாஜனசபை'யினர் ஏற்பாடு செய்திருந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். 1931 ஆம் ஆண்டில் ராமநாதபுரம் மாவட்ட கள்ளர்கள், பூர்வ குடி மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ற பெயரில், மனித இனத்திற்கு இழுக்கானவற்றை வரையறை செய்ததைக் கண்டித்தார். ''ராமநாதபுரம் மன்னராகிய சேதுபதி, என்னோடு சென்னையில் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர். அவரது அண்ணன் என்னோடு சட்ட சபையில் உறுப்பினராக இருக்கிறவர். இருவருமே எனக்கு நண்பர்கள். ஆனால், இவர்களது ஆட்சிக்குக் கட்டுப்பட்ட பகுதியில் என் இன மக்கள் மீது குறிப்பிட்ட ஆதிக்கச் சாதியினர், இப்படித்தான் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என சமூக ஆதிக்க விதிகளை விதிப்பது, சேதுபதிகளுக்குதான் களங்கத்தை ஏற்படுத்தும்'' என்று எம்.சி. ராஜா எடுத்துரைத்தார்.

1937 ஆம் ஆண்டு எம்.சி. ராஜா, சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு செங்கல்பட்டு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1.4.37 அன்று கே.வி. ரெட்டிநாயுடு தலைமையிலான நீதிக் கட்சி அமைச்சரவையில், வளர்ச்சித் துறை



**❝ நாம் அறியாமையிலேயே இருப்போம்; நம்மை அவர்கள் ஆண்டு கொண்டே இருக்கலாம் என்று நினைப்பது தான் - உண்மையில் பெரும் அறியாமையாகும். நான் கேட்கிறேன், நாம் ஏன் அவர்களுக்கு அடங்கியவர்களாக இருக்க வேண்டும்? ❞**

அமைச்சரானார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் 1936 இல் தலித் மக்களுக்காக கோயில்கள் திறந்துவிடப்பட்டன. கோயில் நுழைவுக்கு ஆணை பிறப்பித்த அரசரையும், அரசி சேது பார்வதிபாய் அவர்களையும் பாராட்டி, 24.9.1937 இல் சென்னை சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து எம்.சி.ராஜா பேசினார். எம்.சி. ராஜாவைத் தொடர்ந்து சுவாமி சகஜானந்தா, வி.அய். முனிசாமிப் பிள்ளை, லட்சுமி பாரதி, எஸ். சட்டநாதக் கரையாளர், யாகூப் அசன் ஆகியோர் பேசினார்கள். 1939 சூலை 7 அன்று, தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் அவர்களின் 80 ஆவது பிறந்த நாள் விழா சென்னையில் அனைத்துக் கட்சியினர் சார்பில் கொண்டாடப்பட்டது. எம்.சி. ராஜா இக்கூட்டத்தில் புகழுரையாற்றினார். அவரைத் தொடர்ந்து ராஜாஜி, நாராயண குருப், பாசுதேவ் போன்றவர்கள் தாத்தாவுக்குப் புகழ் மாலை சூடினர். இக்கூட்டத்தில்தான் தாத்தா அவர்கள் 'திராவிடமணி' என்று சிறப்பிக்கப் பட்டார்.

இரண்டாவது உலகப் போரையொட்டி இந்திய வைசிராயால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில், 1941 இல் எம்.சி. ராஜா இடம் பெற்றார். 1942 லிருந்து புரட்சியாளர் அம்பேத்கருடன் இணைந்து பணியாற்றிய எம்.சி. ராஜா, 18.6.1943 அன்று உடலால் மட்டும் தம் மக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். சமூக முன்னேற்ற நேர்மை ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு, சமூகத்தில் ஒன்றிவிடுகிறவராக எம்.சி. ராஜா இருந்தார். ஒவ்வொரு பூர்வகுடிகளின் மத்தியிலும் அவர் குறித்த மதிப்பு உயர்ந்து கொண்டே இருந்தது. அவரால் மக்கள் வளர்ந்தார்கள் என்பது நிரூபணம் ஆனது.

பலவகையிலும் வெற்றிகரமாக நடந்த எம்.சி. ராஜா, ஓரிடத்தில் மக்களுக்கான தோல்வியைத்தானே தீர்மானித்தார் என்பது, நம்மை அதிர்ச்சிக்கு ஆளாக்குகிறது. பூர்வகுடிகளின் தொடர் பரிமாணத்தை கச்சிதமாகப் பாதுகாத்து வந்த அவர், வட்டமேசை மாநாட்டிற்குத் தான் அழைக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, தன்னகங்கார தவிப்பிற்கு ஆளாகி - எதிர் நிலைப்பாட்டில் போய் முடிந்தது. வெளிச்சமான அவர் வீரிய வரலாற்றுக்குள், ஒரு இருட்டுப் பகுதியும் அடங்கிவிட்டது.

புரட்சியாளர் அம்பேத்கரும் தாத்தா ரெட்டமலை சீனிவாசனாரும் வாதாடி, போராடிப் பெற்ற சமூக வெகுமதியான இரட்டை வாக்குரிமைக்கு எதிராக சண்டித்தனம் செய்த காந்தியின் பக்கம் அவர் நின்றது - அவரது ஆளுமையின் அழகைக் குலைத்து விட்டது. ஆங்கிலேயர் ஆட்சியளித்த ஒப்பற்ற அரசியல் பிரதிநிதித்துவத்தை மூளியாக்கும் முயற்சியில், மூஞ்சேவோடு ஒப்பந்தம் செய்து கொண்டதும், பூனா ஒப்பந்த வஞ்சகத்திற்குத் துணை போனதும், தன் மனசாட்சி மன்னிக்க முடியாத செயலை அவர் நிறைவேற்றியதாகும். பூர்வகுடிகளின் விடுதலைக்கான பாடம் எம்.சி. ராஜா என்று நாம் உணர்கின்ற வேளையில், படிப்பினையையும் அவரிடமிருந்தே பெற முடிகிறது. ●

- முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

# கல்விக் கட்டணம் தேவையில்லை

தமிழகத்தில் உள்ள கலை, அறிவியல் அரசுக் கல்லூரிகள் (67) மற்றும் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் (183) படிக்கும் - ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத் தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவர்கள், கல்லூரிக் கட்டணம் / கல்விக் கட்டணம் / சிறப்புக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களும் கட்ட வேண்டிய தேவையில்லை. (தகுதி: அரசின் கல்வி உதவித் தொகை பெறுவோர்; ஆண்டு வருமானம் ரூபாய் 50 ஆயிரத்திற்குள் இருக்க வேண்டும்.) அதற்குரிய அரசாணையை இங்கு வெளியிட்டுள்ளோம்:

**ABSTRACT**

Higher Education Department - Welfare of SCs/STs,BCs/ MBCs/DNCs - orders issued on various concessions - observance of Government orders - instructions issued.

**Higher Education (C1) Department**

G.O.Ms. No. 44 Dated : 20.02.2004

Read :

1. From Special Commissioner and Director of Most Backward Classes and Denotified Communities letter No. D1/4955/03, Dated 16.5.2003
2. Government letter No. 11038 / G1 / 2003 - 1 dated 27.5.2003
3. From the Secretary to Government, Backward Classes, Most Backward Classes & Minorities Welfare Department, D.O. Letter No. 4615 / MW2/03-2 dated 30.06.2003

Order :


In the letter first read above, the Special Commissioner and Director of Most Backward Classes and Denotified and communities has requested the Government to instruct the Heads of all Educational Institutions not to collect the fees from SC/ST/BC/ MBC/DNCs who are eligible for free Education / exempted from payment of fees at the time of Admission / Commencement of Second and subsequent years and also to display on Notice Boards the announcement that these students (eligible for fee waiver) need not pay the fees. He has also requested to instruct the field officers to monitor the above instruction in the implementation effectively.

In the letter third read above, the BC, MBC, and MW Department has endorsed the views of the Special Commissioner and Director of Most Backward Classes and Denotified and Communities in Para 1 above.

The Government after careful consideration of the request of the Special Commissioner and Director of Most Backward Classes and Denotified and Communities reiterate the earlier instruction direct the Director of Collegiate Education to instruct the Heads of all educational instructions under his control to comply with the request of the Special Commissioner and Director of Most Backward Classes and Denotified and Communities stated in Para 1 above and instruct all Regional Joint Director of Collegiate Education under his control to ensure the effective implementation of the Government order scrupulously in future.

( By Order of the Governor )

**K. Gnanadesikan**
Secretary to Government



## பிறகுதானே...

பசைத் தடவிய வார்த்தைகளும்
பாசாங்கு வேசங்களும்
மலத்தில் மொய்க்கும் ஈக்களாய்
சுற்றிப் பறக்கும் உன்னில்
என்னிடமிருந்து
யாசகம் கிட்டும்வரை

என் பசியினால்
உன் வயிற்றை நிரப்பும் தருணம் வரை
என் பாதங்களை
நக்கிச் சுவைக்கும் உன் எச்சில்

சிறுவாடாய் சேமித்த
என் வேர்வைகளில்
உன் மடி முடிப்பு கனக்கிறவரை
என் தோள்களில்
சொரணையற்று மிதக்கும்
வஞ்சனைத் தளிர்த்த உன் கைகள்

நான் ஒன்றுமில்லாதவனாகும் வரை
நீ தெரிவதில்லை
இருப்பவனாய்

பிறகுதானே
என்னைக் குப்புறக் கவிழ்த்தி நீ
குதிரையேறுவதும்
ஜாதிகெட்டவனாய் உன்
காமாலைக் கண்களுக்கு நான் தெரிவதும்...

மீசை முறுக்கி ஆள் சேர்த்து
ஒத்தைச் செத்தையாய் என் சுவடுகள் பார்த்து
மறைந்திருந்து நீ தாக்குவதும்
சின்னசாதிப் பயலேயென
என் சேதாரத்தில்
உன் சாதி ஆதிக்கத்தை நீ
சேமித்து வைக்க எத்தனிப்பதும்
பிறகுதானே.

- அபிமானி



படிப்பகம்

www.padippakam.com



# இடஒதுக்கீடு : விடுதலைக்கான கருவியா?

■ கவுதம சன்னா

சிறந்த ஒன்றுக்கு எதிரி மிகச் சிறந்த ஒன்றாகத்தான் இருக்க முடியும் - விஞ்ஞானவளர்ச்சிக்கு இதுதான் விதியாக இருக்கும்' என்று சோவியத் விஞ்ஞானி ஒருவர், விஞ்ஞானம் அளிக்கும் எதிர்கால நம்பிக்கை குறித்து குறிப்பிட்டார். மிகச் சிறந்த ஒன்றினை எப்படி எடுத்துக் கொள்வது? அறிவியல் கண்டுபிடிப்பின் முன்னேற்றத்திலா அல்லது அதன் பயன்பாட்டிலா என்பதற்கு - அதை நாம் நீட்டித்து சோதித்துக் கொள்ள முடியும்.

பலவேளை மிகச் சிறந்த ஒன்று, வெகுமக்களுக்கு எதிராகக்கூட போகலாம். சீனர்களின் வெடிமருந்து கண்டுபிடிப்பு, கண்கொள்ளா வாண வேடிக்கைகளைக் காட்டும்போதும், அதில் எழும் வெடிச்சத்தமும் சிலருக்கு மகிழ்வைத் தருகிறது.

அதே வெடிச்சத்தம், 'இரோஷிமா'வில் கேட்டபோது உலகமே அதிர்ந்து உறைந்து போனது. சிறந்த வாண வேடிக்கை, மிகச் சிறந்த அணுகுண்டாக வளர்ந்து விட்டது. இந்த எடுத்துக்காட்டுபோல ஏராளம் இருந்தாலும், மிகச் சிறந்ததற்கான எதிர்காலம் விஞ்ஞானத்தில் எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், கேள்வி என்னவெனில் மிகச் சிறந்ததின் பயன், உலகின் கடைகோடி பாமரனுக்குப் போய்ச் சேருகிறதா? இந்தக் கேள்வி, தொழில்நுட்ப விஞ்ஞானத்திலிருந்து சமூக விஞ்ஞானத்திற்கு நம்மை நகர்த்தி விடுகிறது.

சமூகத்தில் மிகச் சிறந்தவைகளை அடையாளம் காண்பதும், அதன் பயனை அனுபவிப்பதும் வெகுமக்களுக்கு இன்னும் எட்டாக் கனியாகவே இருக்கிறது. மக்களின் விடுதலைப் பயணத்தில், அவர்கள் மோசமானதிலிருந்து சிறந்ததிற்கும், சிறந்ததிலிருந்து மிகச் சிறந்ததிற்கும் மாறிப் போக வேண்டும். ஆனால், நிகழ்வது என்ன? அவர்கள் மோசமானதிலிருந்து சிறந்த ஒன்றிற்குப் போகும்போது, அந்தச் சிறந்த ஒன்று மோசமாகி விட்டிருக்கிறது. மிகச் சிறந்தது, எதிர்கால லட்சியமாகவே என்றும் நிலைத்து விடுகிறது.

மக்களில், தலித் மக்களும் அங்கமாக இருக்கும்போது, அவர்களுக்கும் சிறந்தவைகளும், மிகச் சிறந்தவைகளும் தவிர்க்க முடியாதவை. ஆனால், இவை எத்தனை வகையாக இருக்கிறது என்பதையும், அதன் பயன்கள் எப்படிப்பட்ட விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது என்பதையும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், தளையாகப் பிணைத்துக் கொண்டிருப்பவற்றை - மிகச் சிறந்தவையாக நம்பி கொண்டிருக்கலாம் அல்லவா?



II

இடஒதுக்கீடு - விடுதலை பெற்ற இந்தியாவில் தலித்துகளுக்கு கிடைத்த அரசியல் பங்குரிமை; தனித் தொகுதி முறையினை விட்டுக் கொடுத்ததால் பெறப்பட்ட அரசியல் உரிமை. ஆனால், இன்று அது சலுகையாக சுட்டிக் காட்டப்படுவதன் மூலம் தொடர்ந்து இழிவுக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. இந்த இடஒதுக்கீட்டு உரிமையினை அரசமைப்பில் உறுதி செய்தார் அம்பேத்கர். 10 ஆண்டு காலத்திற்கு மட்டும்தான் நடைமுறையில் இருக்கும் என்றும், தேவைப்பட்டால் அது நீட்டிக்கப்படலாம் என்ற வசதி அரசமைப்பில் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அம்பேத்கர் அது 20 ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

தலித்துகளின் விடுதலைக்கு அம்பேத்கர் விரும்பியவை பல இருக்க, இடஒதுக்கீடு மட்டும் தொடர்ந்து அய்ந்து முறை நீட்டிக்கப்பட்டுள்ளது. தலித்துகளின் வைரிகளான - இந்து பயங்கரவாதிகளின் அரசான பா.ஜ.க. கூட்டணி அரசுகூட அதை நீட்டித்துள்ளது. (2001) அம்பேத்கரின் விருப்பம் தலித்துகளின் விடுதலை என்றால், அவர் விரும்பாததும் தலித்துகளின் விடுதலைக்காகத்தான் இருக்கும் என்பது, அவரது வாழ்க்கை காட்டும் பாடம். எனவே, இந்த நீட்டிப்பிற்குப் பிறகு அல்லது



படிப்பகம்

www.padippakam.com

வாழும் இடஒதுக்கீட்டினால் ஏதேனும் பின் விளைவுகள் இருக்குமா?

இன்று தலித் அரசியல் சந்திக்க வேண்டிய முக்கியமான கேள்வி இது. இந்தக் கேள்விக்குப் பெறும் பதிலை விட, இதனால் உருவாகும் சந்தேகம் மிகுந்த அரசியல், முக்கியத்துவம் வாய்ந்தது. இருப்பினும், இந்த இடஒதுக்கீட்டினால் விளைந்த பயன்களில் சிலவற்றைக் காண வேண்டும். துறைவாரியாக இவற்றை அணுக வேண்டும்.

## III

தலித்துகளின் அரசியல் அங்கீகாரம் என்பது, அது பெற்றிருக்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் (Representation by Reservation)தான். இது அரசியல் உரிமையை வெளிப்படுத்துகிறது. அதேபோல, அரசியல் அங்கீகாரத்தையும் அது குறிக்கிறது. இதில் அரசியல் அங்கீகாரம் அளித்திருக்கும் பலனைவிட, அரசியல் பிரதிநிதித்துவம் அதிக பலனைக் கொடுக்கவில்லை. முதலில் பிரதிநிதித்துவத்தைப் பார்ப்போம் : இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களில் 4,052 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் தலித்துகளுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிகள் மொத்தம் : 749 (1999 ஆண்டு நிலவரம்) நாடாளுமன்றத் தொகுதிகள் மொத்தம் 545. இதில் தலித்துகளுக்கு 79 தொகுதிகள், பழங்குடியினருக்கு 39 தொகுதிகள் (மொத்தம் 118, 1999 நிலவரப்படி) ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தொகுதிகள், தலித் மற்றும் பழங்குடியினரின் அரசியல் உரிமையை வெளிப்படுத்தும் வெறும் குறியீடுகள் அல்ல. மாறாக, இம்மக்களின் சமூக, அரசியல் கோரிக்கைகளை 'அரசு பராமரிப்பு அவை'களில் முன்வைக்க அதிகாரம் வாய்ந்தவையாகும். அவைகளின் பணியும் அதுதான்.

ஆனால், நடைமுறை என்னவாக இருக்கிறது? இந்த ஒதுக்கீட்டு தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நபர் - தலித்துகளின் கரமாக செயல்படுவதைவிட, ஒடுக்குவோரின் வாளாக மாறிவிடுகிறார் என்ற குற்றச்சாட்டு அம்பேத்கர் காலத்திலிருந்து இருக்கிறது. இருப்பினும், ஒவ்வொரு தேர்தலின் போதும் இந்த நிலைமையில் முன்னேற்றம் ஏதுமில்லை. குற்றச்சாட்டும், அதன் காரணப் பொருளும் தொடங்கிய இடத்திலேயே இருக்கிறது.

**மய்ய அரசில் தலித் - பழங்குடி பணியாளர்கள்**

| வகை | பிரிவுகள் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | |
| 1.1.1974 (நிலவரப்படி) | | | | | |
| மொத்தம் | 33672 | 52343 | 1566796 | 1242548 | 2895359 |
| எஸ்.சி. (%) | 1094 (3.25) | 2401 (4.59) | 161775 (10.33) | 230203 (18.53) | 395473 (13.66) |
| எஸ்.டி. (%) | 155 (0.57) | 258 (0.49) | 33383 (2.13) | 47679 (3.84) | 81475 (2.81) |
| 1.1.1994 (நிலவரப்படி) | | | | | |
| மொத்தம் | 59016 | 103198 | 2381613 | 1023285 | 3567112 |
| எஸ்.சி. (%) | 6046 (10.25) | 12442 (12.06) | 374758 (15.73) | 209423 (20.46) | 602670 (16.90) |
| எஸ்.டி. (%) | 1727 (2.92) | 2902 (2.81) | 128228 (5.38) | 62945 (6.15) | 195802 (5.48) |

அட்டவணை 1

இதற்கான காரணமும் அதே பழைய காரணம்தான். தலித்துகளின் பிரதிநிதிகளாக செல்லும் எந்த ஒரு நபரும், பிறப்பினால் மட்டுமே தலித்தாக இருக்கிறார். இந்தத் தகுதியை, சாதி இந்துக்களின் கட்சிகள் பயன்படுத்திக் கொள்கின்றன. இதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதும் அரசமைப்பில் இல்லை. ஏனெனில், இந்தப் பிரதிநிதித்துவ அரசியல் உரிமை - தலித் மக்களுக்கானதே தவிர, தலித் மக்களின் அமைப்புகளுக்கானதல்ல.

தலித்துகளின் அரசியல் பிரதிநிதிகள், சாதி இந்து கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாடாளுமன்ற, சட்டமன்ற அவைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இந்நிலையில், இந்த உரிமையைத் தனக்கு சொந்தமான உரிமையாக மாற்றிக் கொள்ள முடியாத சூழலில், அது என்ன பயனை விளைவித்திருக்கும்? இதற்கான சான்றுகள் தெளிவாக இருக்கின்றன. இந்தப் பிரதிநிதித்துவம் என்பது, தலித்துகள் சமூகத்தில் தனித்த சமூகப் பிரிவினர் என்பதை உறுதி செய்கிறது. தலித்துகளின் அரசியல் உரிமை என்பது, இந்திய அரசு நிறுவனங்களிலும், அது நிர்வகிக்கும் வளங்களிலும் தலித்துகளுக்குள்ள பங்கினை எடுத்துக் கொள்வதற்கான உரிமையை வெளிப்படுத்துகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, தலித்துகளுக்கு கிடைத்த அரசியல் அங்கீகாரத்தை வெளிப்படுத்தும் அரசியல் வடிவமாக - இந்த இடஒதுக்கீட்டு தனித் தொகுதி முறை நிலவுகிறது. இந்த அரசியல் அங்கீகாரத்தின் ஒரு பகுதி தனித் தொகுதி முறை என்றால், இதன் தொடர்ச்சி அரசின் அனைத்துத் தளங்களுக்கும் பரவி நிற்கும் இடஒதுக்கீடு ஆகும்.

## IV

அரசியல் அங்கீகாரத்தின் தொடர்ச்சியாக கிடைத்த பலன்களில், அரசுப் பணிகளில் அளிக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, (கடந்த இதழில் தமிழக அரசுப் பணியாளர் விபரம் உள்ளது) முக்கியமானது. விடுதலை பெற்ற காலத்திலிருந்து மத்திய அரசுப் பணிகளில் உள்ள தலித்துகளின் எண்ணிக்கை கண்கூடான சான்றாகும். எடுத்துக்காட்டு, 10ஆவது அய்ந்தாண்டு திட்ட அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களில் 1974க்கும் - 1999க்கும் இடைப்பட்ட காலத்தில் உள்ள அலுவலர்கள் குறித்த விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (காண்க அட்டவணை 1)

இந்தப் புள்ளி விவரங்களின் நம்பகத்தன்மை குறித்து நாம் நம்பிக்கையோடு இருக்க முடியாது. ஏனெனில், இதில் சுட்டப்பட்டுள்ள எண்ணிக்கையானது, ஒவ்வொரு ஆண்டும் தெரிவு செய்யப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை,



படிப்பகம்

www.padippakam.com

அந்தந்த ஆண்டுக்கு தனித்தனியான எண்ணிக்கையாக இருக்கிறதா? அல்லது 74லிருந்து ஆகஸ்டு 94 வரையிலான பணியாளர்களின் கூட்டு மொத்தமா என்பதைப் பற்றி அறிக்கையில் விளக்கம் ஏதுமில்லை. ஏனெனில், 1974இல் தேர்வு செய்யப்பட்டு பணியில் இருப்பவர், 1994 ஆம் ஆண்டு கூட்டு மொத்தத்தில் சேர்த்து கணக்கிடப்பட்டால், இடஒதுக் கீடு முறை மிகத் தவறாகக் கையாளப் படுகிறது என்று எடுத்துக் கொள்ளலாம். அப்படி நடந்தால் அது மோசடியே.

எனினும், இந்த குறைந்தபட்ச ஒதுக் கீட்டு உரிமைகூட கண்கூடான பலனை அளித்திருக்கிறது. இவ்வளவு அரசு தலித் பணியாளர்களுக்கான ஊதியம், தலித் மக்களின் ஒரு பிரிவினருக்கு நிதியாகவும், வாழ்க்கை மேம்பாட்டுச் சாதனமாகவும் வாய்த்துள்ளது என்பதை மறுக்க முடியாது. இது தவிர அரசுத் துறை நிறுவனங்கள், உள்நாட்டு அமைப்புகள் எனப் பரவலாக இதைப் பொருத்திப் பார்க்க முடியும்.


10ஆவது அய்ந்தாண்டுத் திட்ட அறிக்கையில் தலித் அரசு ஊதிய அதி கார வர்க்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அடைமொழி : ''நிர்வாகம் மற்றும் முடிவெடுத்தலில் பட்டியலினத்தவர் மற் றும் பட்டியல் பழங்குடியினர் பங்கேற்பு'' (Participation of SCs/STs Administrations and Decision Making) என்பதாகும். இது சிறப்புக்குரியதுதான் என்றாலும், முடிவுகள் எடுக்கப்படும்போது, இட ஒதுக்கீட்டுக்கான தத்துவார்த்த தீர்வுகள் இதில் கடைப்பிடிக்கப்பட்டதா? சமூக முன்னேற்ற நலன்கள் கைவிடப்பட்டு, தனி நபர் நலன்களுக்கு இது வழிவகுத்து விட்டது. பலன் கிடைத்தது. ஆனால், அது ஒரு பகுதிதான்.

இந்த ஒதுக்கீட்டுப் பார்வையை கல்வித்துறை, மருத்துவம், நீதித் துறை, வேளாண் துறை, தரிசு நிலமேம்பாடு, வளங்கள் பகிர்வு எனப் பரவலாக அணுகினால் கிடைக்கின்ற பதில்கள், திருப் திகரமாக இருக்காது என்பதை உறுதியாக நம்பலாம். இருந்த போதிலும், பலன்கள் குறை வாகவும், இந்த குறைந்தபட்ச பலன் களைப் பெறுவதற்கான முயற்சியோ பிரம்மாண்டமானவையாக இருக்கிறது.

V

அதேபோல், நிதி நிர்வாகத்தில் தலித்துகளுக்கு ஒதுக்கப்படும் அளவிலும் இது வெளிப்படுகிறது. கடந்த பத்து அய்ந்தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கப் பட்ட தொகை, இதைத் தவிர ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் தொகை, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒதுக்கப் படும் தொகை என இவைகளின் கூட்டு மொத்தத் தொகை - கடந்த 54 ஆண்டுகளில் மய்ய, மாநில அரசு களில் செலவிட்ட தொகையில் தலித்து களுக்கான பங்கினை (எஸ்.சி. + எஸ்.டி. 22.5) ஒப்பிட்டுப் பார்த்தால் மிக அற்பமாகத் தெரிகிறது. ஆனால், தலித்துகளுக்கு ஒதுக்கப்படும் தொகை யினை தனித்துப் பார்க்கும்போது, பெரிய தொகையாகத் தோன்றும். எடுத்துக்காட்டாக, இரண்டு அய்ந் தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கப்பட் டத் தொகையினைப் பார்ப்போம். (காண்க அட்டவணை 2)

இந்தத் தொகையின் அளவு மிகப் பெரியது போல காட்டப்படுகிறது. ஆனால், அவை செலவழிக்கப்படும்



திட்டங்களை ஆய்வுக்குட்படுத்தும் அளவில், தலித்துகளிடையே பொருளா தார அறிவாளுமை இல்லை. அதனால் தான் வெறும் ஆரவாரக் கூச்சல் போடும் விளம்பரத் திட்டங்களுக்கு இத்தொகை கள் திருப்பிவிடப்படுகிறது என்பது வேறு விஷயம்.

மேலும், எஸ்.சி.பி./எஸ்.டி.பி. திட்டங்களை செயல்படுத்துவது 24 மாநிலங்கள் (யூனியன் பிரதேசங்கள் உள்ளடக்கி) மட்டும்தான். புகழ்மிக்க சமூக நீதிக்களமான, திராவிட இயக் கங்கள் வேரூன்றிய தமிழகத்தில், இத் திட்டங்கள் இன்னும்கூட செயல்படுத் தப்படவில்லை. சிறப்புக் கூறு திட் டங்கள் செயல்படுத்தும் மாநிலங் களில், ஒதுக்கப்படும் தொகை செல வழிக்கப்படுவதற்கு, தலித் மக்களிட மிருந்து தேவைப்படும் கண்காணிப்பு - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசுப் பணி அதிகாரிகள் ஆகியோர் களால் உருவாக்கப்படுகிறது. இவர் களின் பணித் திறனை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். தோல்வி யானது சங்கிலி கண்ணிகள் போல ஒன்றையொன்று பிணைத்துக் கொண் டுள்ளது.

பத்தாவது அய்ந்தாண்டுத் திட்டப் படி, தலித்துகளில் 48.9% பேர் இன் னும்கூட வறுமைக் கோட்டின் கீழே இருக்கிறார்கள். 1991இல் படித்தவர்க ளின் எண்ணிக்கை தலித்துகள் 37.41%, பழங்குடியினர் 29.60%. இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டும் பலன் இதுதான். இவை, துல்லியமான ஆய்வு முடிவில்லை என்றாலும், இட ஒதுக்கீடு முறையான அளவில் கிடைக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே, இடஒதுக்கீட்டினால் விளைந்த நன் மைகள் சிலவற்றைப் பார்த்ததுபோல, அது உண்டாக்கியுள்ள மோசமான நிலைமைகளையும் பார்க்க வேண்டும்.

- பார்ப்போம்

அட்டவணை 2

| எண் | வகை | 7ஆவது அய்ந்தாண்டு திட்டம் (1988 - 90) | 8ஆவது அய்ந்தாண்டு திட்டம் (1992 - 97) |
|---|---|---|---|
| 1. | சிறப்புக்கூறு திட்டம் | | |
| | அ. மய்ய அரசில் (13 அமைச்சகம் - துறைகள்) | 625.09 (கோடி) | 37687.00 (கோடி) |
| | ஆ. மாநில அரசுகளில் (24 மாநிலம் / யூனியன் பகுதி) | 7385.42 | 202850.19 |
| 2. | பழங்குடியினருக்கு | | |
| | அ. (17 துறைகள் / அமைச்சகம்) | NA | 68924.14 |
| | ஆ. (20 மாநிலம் / யூனியன் பகுதி) | 6216.76 | 174245.02 |



படிப்பகம்

www.padippakam.com

# 'கவுண்டர் கம்யூனிஸ்ட்'!



தோழர் கே. சுப்பராயன் எம்.பி. அவர்களுக்கு,

கம்யூனிஸ்ட் கட்சி, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக ஓங்கி ஒலிப்பதில், பாரம்பரியம் கொண்ட கட்சி. இக்கட்சியின் அடுத்த தலைமையை அலங்கரிக்கப் போகின்ற ஆற்றல் மிக்க செயல் வீரர் தாங்கள். ஆனால், 29.5.2004 அன்றைய நாளேடுகளில் வந்த செய்தி, கம்யூனிஸ்டுகளைத் தலைகுனிய வைத்துள்ளது.

தாங்கள் மேற்குறிப்பிட்ட நாளில், காளப்பட்டி குற்றவாளிகளை சிறைக்குச் சென்று சந்தித்துப் பேசியது, எந்த வகையில் நியாயம்? தலித்துகள் மீது நடந்த கொடிய தாக்குதல் நாடறிந்த செய்தி. மிளகாய் பொடிகளைத் தூவியும், பெட்ரோல் குண்டுகளை வீசியும் - பெண்டு, பிள்ளை, பெரிசு, சிறுசு, ஆடு, மாடு, கோயில் என எதுவும் பாராமல் - கட்சி வித்தியாசமின்றி, (குற்றவாளிகளில் ஒருவனின் பெயர் 'கம்யூனிஸ்ட்' கோபால்) 'சமதர்ம தாக்குதல்' நடத்தி இருக்கிறார்கள்.

இதற்கெதிராக, மயிரளவு காயம்கூட கவுண்டர்கள் மீது தலித்துகளால் ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறு இருக்கையில், எப்பொழுதுமே ஆதிக்க சாதிகளின் அடிவருடியாக இருக்கும் அரசின் காவல் துறையோ, மிகச் சில குற்றவாளிகளை மட்டும் கைது செய்து பிணையில் விடுதலை செய்துவிட்டது. இச்சூழலில், தலித்துகள் உடைமையை இழந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, ஊரை விட்டு காலி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாகிய தாங்கள், காளப்பட்டி குற்றவாளிகளை சிறையில் சென்று சந்தித்து இருக்கிறீர்கள். இதனை தலித் இயக்கங்கள் வெஞ்சினத்தோடு வன்மையாகக் கண்டித்து 'தமிழன் எக்ஸ்பிரஸ்' இதழில் செய்தி கொடுத்தனர். அதற்கு பதில் கூறிய தாங்கள், ''நான் குற்றவாளிகளை சிறையில் சந்திக்கச் செல்லவில்லை. சிறைவாசிகளை சந்திக்க வருபவர்கள் ஒதுங்குவதற்கு நிழல் குடை அமைக்க, நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக சென்ற பொழுது, கவுண்டர் தரப்பின் வற்புறுத்தலின் பேரில் சந்திக்க வேண்டியது ஆகிவிட்டது'' என கூறியுள்ளீர்கள்.

தங்களுடன் வந்த கே.சி. கருணாகரன் எம்.எல்.ஏ., குற்றவாளிகளை சந்தித்தோம் என்றும், அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களே தவிர, குற்றவாளிகள் அல்ல என்றும் - நிலைகுலைந்து போயிருக்கும் எங்கள் நெஞ்சின் மீது குத்தீட்டியைப் பாய்ச்சி இருக்கிறார். மேற்படி இருவரும் ஒன்றாகச் சென்றிருக்கிறீர்கள். இருவரின் கூற்றும் நேர் எதிராய் இருப்பது கண்டு பத்திரிகை படித்த எங்களது உள்ளம் பற்றி எரிகிறது. மத, சாதி வெறியன் சி.பி. ராதாகிருஷ்ணன் கூட, சிறையில் குற்றவாளிகளைச் சென்று சந்திக்கவில்லை. இதற்கு தங்களின் பதில் என்ன?

இவைகளை நீங்கள் பொய் ஆக்க விரும்பினால், உங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாக கம்யூனிஸ்ட் கட்சியும், தாங்களும் இருப்பது உண்மையென்று உலகறியச் செய்ய விரும்பினால் - இதை செய்வீர்கள் என நம்புகிறோம். காளப்பட்டி மாரியம்மன் கோயிலில் இந்த நிமிடம் வரை, தலித்துகள் கோயிலுக்குள் செல்ல முடிவதில்லை. கம்யூனிஸ்ட் கட்சி கட்டி முடித்து 75 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தக் கேடுகெட்ட நிலை நீடிக்கிறது. எனவே, நீங்களே தலைமை ஏற்று கோயில் நுழைவு நடத்தி - தங்களின் மீதும், கட்சியின் மீதும் பட்ட களங்கத்தைக் கழுவிக் கொள்ள முன்வருவீர்களா?

இல்லையேல் இனி - 'கம்யூனிஸ்ட் கட்சி அல்ல; கவுண்டர் கட்சி'; 'மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல; மநுதர்மத்தை ஏற்றுக் கொண்டவர்கள்' என்று இகழப்படும் நிலைக்குச் சென்று விடும்.

- மு. கார்க்கி,
*செம்பட்டி*

---

# போராளிக்கு விருது



***Combat Communalism*** **என்ற ஆங்கில மாத இதழின் ஆசிரியர் தீஸ்தா செடல்வாட் அவர்களுக்கு, அண்மையில் 'ஏ.எம். தாமஸ் தேசிய மனித உரிமைகள் விருது' கிடைத்திருக்கிறது. 'பெஸ்ட் பேக்கரி' வழக்கில் நீதி கிடைக்க, தனி மனிதராகப் போராடிய தீஸ்தாவை கவுரவிக்கவே இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.**

**பத்திரிகை உலகை - சாதி, மதவாத சக்திகள் ஆக்கிரமித்துக் கொண்டு சீரழித்து வரும் நிலையில், ஒரு மாற்றுப் பத்திரிகைக்கான இலக்கணத்துடன் இதழை வெற்றிகரமாக நடத்தி, ஓர் இயக்கமாகவும் செயல்பட்டு வரும் தீஸ்தா செடல்வாட் அவர்களுக்கு, 'தலித் முரசு' தனது வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

# தலித், பழங்குடியினருக்கான உரிமைகள்

'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை' வெளியிட்டுள்ள அறிக்கையில் இருந்து

| உரிமை | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|
| தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்குதல். | உலர் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்வோர், தெரு பெருக்கும் தொழில் செய்பவர், தோல் உரிப்போர் மற்றும் தோல் பதனிடுவோர் முதலியவர்களின் குழந்தைகள் / சாதி மத பேதம் இல்லை / மற்றும் ஆண்டு வருமான வரம்பு இல்லை. | சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| கல்வி நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கி 6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. (மாதம் ரூ. 25 முதல் ரூ. 35 வரை) | அங்கீகாரம் பெற்ற தனியார் கல்வி நிலையங்கள் நடத்தும் விடுதி / பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.15,000/-க்குள் இருக்க வேண்டும். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| மய்ய அரசு கல்வி உதவித் தொகை : கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத அனைத்துக் கட்டணம் மற்றும் பராமரிப்புத் தொகை உதவித் தொகையாக வழங்கப்படும். | 11 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் (இந்து) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் ஆண்டு வருமான வரம்பு ரூ.65,290/-க்குள் | பள்ளித் தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| பராமரிப்புத் தொகை : பெற்றோருடன் தங்கிப் படிப்பவருக்கு மாதம் ரூ. 90 முதல் ரூ. 190 வரை விடுதி மாணவர்களுக்கு மாதம் ரூ. 150 முதல் ரூ. 425 வரை. | 11 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் (இந்து) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் ஆண்டு வருமான வரம்பு ரூ.65,290/-க்குள் | பள்ளித் தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| பட்டயக் கணக்கர் பயிற்சி : பட்டயக்கணக்கர் பயிற்சி பெற மூன்றாண்டுகளுக்கு பராமரிப்பு செலவு கல்விக்கான கட்டணம் முதலியன வழங்கப்படும். | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் வருமான வரம்பு ரூ. 50,000/- | ஆதி திராவிடர் நல இயக்குநர் சென்னை - 5 |
| 1998 - 1999 ஆம் ஆண்டு முதல் ஒரு மாணவருக்கு ஒரு செட் புத்தகம் ரூ. 5000/-க்கு மிகாமல் புத்தக வங்கித் திட்டத்தின் கீழ் பின்வரும் பாடங்களுக்கு வழங்கப்படுகிறது : பட்ட மேற்படிப்புகள், மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் இது போன்ற பல்கலை கழகங்கள் மேற்படிப்புக்கான கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் ஒத்த படிப்புகள். | | கல்லூரி முதல்வர் / சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் |
| சட்டப்படிப்பு பி.எல்., எல்.எல்.பி. (3 ஆண்டுகள்) மற்றும் அய்ந்து ஆண்டுகள் எல்.எல்.எம். (2 ஆண்டுகள்) | ஆதி திராவிடர் / பழங்குடியினர் மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெறும் மாணவர்கள் | |
| பட்டயக் கணக்காயர் படிப்பு (இடை நிலை, இறுதிப் படிப்பு) | | |
| எம்.பி.ஏ. இரண்டு ஆண்டு மற்றும் ஒத்த படிப்புகள் | | |
| பயோ சயின்ஸ் படிப்புகள் | | |
| பட்டம் பெற்ற வழக்கறிஞர்களுக்கு மூத்த வழக்கறிஞர்களிடம் நான்கு ஆண்டுகளுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 750/- வழங்கப்படும். | இந்து ஆதி திராவிடர் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும். | ஆதி திராவிடர் நல இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| மூத்த வழக்கறிஞர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒருவருக்குப் பயிற்சி அளிக்க ரூ. 2500/- மதிப்பூதியமாக வழங்கப்படும். | இந்து ஆதி திராவிடர் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும். | ஆதி திராவிடர் நல இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க கட்டிட வாடகை புத்தகங்கள், மரச்சாமான்கள் வாங்க ரூ. 5000/- மான்யமாக அளிக்கப்படும். | இந்து ஆதி திராவிடர்கள் | ஆதி திராவிடர் நல இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |



படிப்பகம்

www.padippakam.com


சிவகங்கை பொதிகை கலை இலக்கிய வட்டம்
அரும்பு புத்தக நிலையம் இணைந்து நடத்தும்

## குறும்படம் மற்றும் ஆவணப்பட விழா - 2004



குறும்படம் மற்றும் ஆவணப்படம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் சிறந்த மூன்று படங்களுக்கு - முறையே 'என்.எஸ். கிருஷ்ணன் பொதிகை விருது 2004' மற்றும் 'ஏ.கே. செட்டியார் பொதிகை விருது 2004' ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

விதிமுறைகள் :

1. குறுந்தகடு (வி.சி.டி.) வடிவில் இருக்க வேண்டும்
2. உரிய பாதுகாப்புடன் குறுந்தகடுகள் அனுப்பப்பட வேண்டும்.
3. குறுந்தகடுகள் திருப்பித் தரப்பட மாட்டாது.

இணைக்க வேண்டியவை :

1. படமாக்கம் செய்யப்பட்ட தொழில் நுட்ப விவர அறிக்கை 2. கதை / கருத்தாக்கம் குறித்த அறிக்கை 3. இயக்குநரின் அஞ்சல் தலையளவு புகைப்படங்கள் இரண்டு. 4. ஒவ்வொரு படத்திற்கான நுழைவுக் கட்டணமாக என். மாதவன் என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ. 100/- க்கான வங்கிக் கேட்பு வரைவோலை.

- விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் : 30.07.2004
- விருது வழங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி : அரும்பு புத்தக நிலையம்
பேருந்து நிலையம் எதிரில், சிவகங்கை - 630 561, பேச : 240967, 245872

ஆர். சந்திரகுமார், செயலர், பொதிகை    என். மாதவன், தலைவர், பொதிகை



# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்

ஜாதி அடக்குமுறைக்கு எதிரான குரல்

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | ரூ. 100 |
| நூலகக் கட்டணம் | : | ரூ. 200 |
| வாழ்நாள் கட்டணம் | : | ரூ. 1,000 |

நான், 'தலித் முரசு' ஆண்டு / வாழ்நாள் கட்டணம் செலுத்துகிறேன்

பெயர் ........................................................................

முகவரி ......................................................................

......................................................................................

பேசி ..........................................................................


காசோலை, கேட்போலை அனுப்புகிறவர்கள்

**DR. AMBEDKAR CENTRE**

என்ற பெயருக்கு எடுத்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும் :
203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, குளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 600 094



# சித்திரமும் கைப்பழக்கம்



சந்ருவின்
ஓவியக்
கண்காட்சி

2004 சூலை 15 முதல் 30 வரை

கண்காட்சியைத் திறந்து வைப்பவர்
ஓவியர் ஏ.பி. சந்தானராஜ்

இடம் :
பலாசோ ஆர்ட் கேலரி,
முதல் மாடி
ஆழ்வார்ப் பேட்டை
9, சீத்தம்மாள் சாலை
சென்னை - 18

காலை 11 மணி முதல்
மாலை 7 மணி வரை


Studio Palazzo
An Art Gallery




படிப்பகம்

www.padippakam.com






## புரட்சியை நோக்கி...

**எரியும் தீப்பிழம்பில் மேலவளவு போராளிகளுக்கு வீரவணக்கம். எரியும் விடுதலைக் கனல், எழுதப்படாத கவிதை - நெஞ்சை மட்டுமல்ல; அறியாமையில் மூழ்கித் திளைக்கும் ஒவ்வொரு தோழரின் செயல்பாட்டையும் புரட்சியை நோக்கி நகர வைக்கும். யாழன் ஆதியின் முதல் பக்க வரிகள், ஜனநாயகம் பேசும் அமெரிக்காவின் முகமூடியைக் கிழிப்பதாக இருந்தது. 'தலித்' க. சுப்பையாவின் 'விடுதலைக் குரல்' எந்த அடக்குமுறைக்கும் கட்டுப்படாது. தலித்துகள் 'தலித் முரசை'யே கூர்மையான ஆயுதமாகக் கொண்டு போராட வேண்டும்.**

**தமிழ்ப்பித்தன்,** *பேசும்பூர்*

■ 'அரசியல்வாதிக்கு மட்டுமே வெற்றி' - தலையங்கம் கண்டேன். இந்துத்துவ வெறி முன்பைவிட வீரியமுடன் வளரத் தொடங்கும். இதற்கு சங்பரிவாரங்களின் நுண்ணிய திட்டப் பணிதான் காரணம். இதைத் தடுப்பதற்கு, எந்தக் கட்சியிலும் தனி அமைப்புகள் இல்லை. பார்ப்பனர்கள் எங்கிருந்தாலும், தங்கள் லட்சியத்தை வெற்றி கொள்வதில் குறியாயிருக்கிறார்கள். சிறுபான்மையினரான யூதர்களும், பார்ப்பனர்களும் - பெரும்பான்மை முஸ்லிம் மற்றும் தலித்துகளை அடிமைப்படுத்துவதன் மூலம் - தங்களை மய்யப்படுத்திக் கொள்கிறார்கள்.

**சா. ஷபீ,** *ஏரிப்புதூர்*

■ வழக்கறிஞர் சமூகத்திற்கு மிகவும் தேவையானது, கே. சந்துரு அவர்களின் பேட்டி. காலத்திற்கேற்ப அவருடைய முடிவுகள் பாராட்டத் தக்கவையாக உள்ளன. சி.பி.எம். கட்சி அவரை ஒதுக்கி இருந்தாலும், அவர் மீது ஒரு தனி மரியாதை கொண்டுள்ளது என்பதைக் கடந்த மாதம் 'தீக்கதிர்' அலுவலகத்திற்குச் சென்றபோது உணர்ந்தேன். கட்சியின் சில கொள்கைகளுக்காக, சிறந்த வழக்கறிஞரும் சமூக ஆர்வலருமான ஒருவரை கட்சி இழந்துள்ளது என்பதே உண்மை.

**ஓசூர் பாலா,** *சூளைமேடு*

■ யாழன் ஆதியின் கவிதை, மனித நேய ஆர்வலர்களின் ரத்தக் கொதிப்பை அதிகப்படுத்தியது. உலகில் நடைபெறும் எத்தகைய மனித உரிமை மீறல்களையும் கண்டிக்கும் உணர்வை 'தலித் முரசு' வளர்த்து வருகிறது. காளப்பட்டி கொடுமைகள் இனியும் நடக்காமல் தடுக்க தலித் தலைவர்கள் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள்? விடுதலை உணர்வு, ரத்தத்தில் அணுக்களாய் ஓடிக்கொண்டிருக்கும் தலித் இளைஞர்கள் விடுதலை கேட்கிறோம். தலித் தலைவர்கள் 'விடுதலை' என்ற உண்மையான புத்தகத்தினை எப்பொழுது தூசி தட்டி எடுக்கப் போகிறார்கள்?

**வி. சுபாசு,** *ஆ. அம்மாபட்டி*

■ மூர்த்தி தாத்தா பேட்டி என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இன்றைக்கு அரசியலாலும், திரைப்படங்களாலும் சீரழிக்கப்பட்டு, என்ன செய்வதென்று குழம்பி நிற்கும் இளைஞர்களுக்கு இப்பேட்டி வழிகாட்டுகிறது.

**ஆர். ஜெயப்பிரகாஷ்**
*தேவகோட்டை*

■ பெருந்தலைவர் எம்.சி. ராஜாவைப் பற்றிய வரலாறு மிகவும் நேர்த்தியாக வெளிவந்தது மெத்த மகிழ்ச்சி. இதன் மூலம் நமக்கு அவர் ஆற்றிய பெருந்தொண்டினை அறிய முடிகிறது. பூர்வகுடி மக்கள் அனைவருக்கும் பொருத்தமான 'ஆதிதிராவிடர்' என்ற பெயரைச் சட்டமேலவையில் முன்மொழிந்து ஆங்கிலேய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சென்னை முதல் கன்னியாகுமரி வரை நாம் இப்பெயரையே நம் இன மக்கள் அனைவருக்கும் சூட்டி, உட்பிரிவுகளை முற்றிலும் நீக்க வேண்டும். 'கொல்லும் ஜாதி கொதிக்கும் காளப்பட்டி'யை அறிந்து சொல்லணா துயரமடைகிறேன்.

**கே.எஸ். பொன்னுசாமி**
*வடபழனி*

■ அண்மையில் மத்திய உணவு விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார், எம்.எஸ். சாமிநாதன் அவர்களை விவசாயிகளின் தேசிய ஆணையராக நியமித்துள்ளார். சனவரி 2003 - 'தலித் முரசி'ல் பேட்டி கொடுத்த வைகை குமாரசாமி, எம்.எஸ். சுவாமிநாதன் ஒரு மோசடிப் பேர்வழி என்று 'இல்லஸ்டிரேடட் வீக்லி' குறிப்பிட்டதையும், 'பசுமைப் புரட்சி - பார்ப்பனர்களின் சதியே' என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், மத்திய அரசு அவருக்கு பதவி அளித்திருப்பது என்ன நியாயம்?

**மு. தங்கவேலு,** *கோட்டையூர்*

■ வடாற்காடு மாவட்டத்தில் தோன்றிய வரலாற்று நாயகர்களின் வரிசையில் வாடாத மலராக வலம் வந்து கொண்டிருக்கும் பெரியவர் மூர்த்தியாரின் வரலாற்றினை - 'தலித் முரசு' இரண்டு இதழ்களில் வெளியிட்டது. அவருடைய சமுதாயப் பணியினை, வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து காட்டிய பெருமைக்குரிய ஏடான 'தலித் முரசு'க்கு என் நன்றியும் வாழ்த்துகளும்.

**வி. அருள்தாசன், செயலாளர்,**
*அண்ணல் அம்பேத்கர் அறிவாலயம், அரக்கோணம்*

### நான் இனி அப்துல்லா !

'தலித் முரசு' இதழை ஆரம்பத்திலிருந்து வாங்கிப் படித்து வருகிறேன். தலித் மக்களின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண, விரைந்து பணியாற்றும் ஓர் அரிய பத்திரிகை. நான், அண்ணல் அம்பேத்கரின் சமூகத் தொண்டால் உந்தப்பட்டவனாகவே அவரின் அடிச்சுவற்றைப் பின்பற்றி 25.6.2003 இல் எனது 65ஆவது வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். தலித் மக்களை இஸ்லாமிய மார்க்கத்தில் வாழ வலியுறுத்தி வருகிறேன். எந்த வகையான போராட்டத்தின் மூலமும் - இந்து மதத்தையும், இந்துக்களையும் திருத்தவே முடியாது. நாம்தான் இந்த நரகத்திலிருந்து வெளியே சென்றுவிட வேண்டும் என்று, அண்ணலே தன் மனைவியுடன் பவுத்த மார்க்கத்தில் இணைந்தார். தலித் மக்கள் ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தைத் தழுவினால், நாளாவட்டத்தில் இவர்கட்கு விடுதலை கிடைக்கும். முதலில் தீண்டாமை ஒழிந்துவிடுகிறது. இரண்டாவது சமத்துவம் வருகிறது. மூன்றாவது சகோதரத்துவம் கிடைக்கிறது. என் பெயரை இனி கோதண்டபாணி என்று குறிப்பிட வேண்டாம்; என். அப்துல்லாஹ் என்று அடுத்த இதழ் அனுப்பும்போது குறிப்பிடவும். பெயர் மாற்றம் குறித்து தமிழக அரசு 'கெசட்'டிலும் வந்துவிட்டது.

என். அப்துல்லா, *மயிலாடுதுறை*



படிப்பகம்

www.padippakam.com




# தாய்ப் பால் பைத்தியம் தவிர்த்து தமிழை அறிவியல் மொழியாக்குக !

'தாய்ப் பால் சிறந்தது' என்பதில் தாய்ப் பாலில் சக்தியும் சத்தும் இருந்தால் தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே சத்தற்றவள் என்பதோடு, நோயாளியாகவும் இருக்கும்போது, அந்தப் பாலைக் குடிக்கும் பிள்ளை உருப்படியாக முடியுமா? தாய்க்கு நல்ல உணவு இருந்தால்தானே அவளுக்குப் பாலும் ஊறும்; அந்தப் பாலுக்கும் சக்தி இருக்கும்? தமிழில் நல்ல உணவு எங்கே இருக்கிறது? நண்பர் சிவஞானம் கூறும் தமிழ்த் தாய் உண்ட உணவெல்லாம் சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பஞ்ச காவியம், எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பாரதம், ராமாயணம், பாகவதம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலிய இவைகள்தானே? இவைகளில் சுவை இருக்கலாம்; அழகு இருக்கலாம்; முன்னேற்றத்துக்கான அறிவு இருக்கிறதா?

ஒருவருக்கு ஒருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளத்தானே பேச்சு (மொழி) வேண்டும்? பேசப் பழக வேண்டுமானால், அது தானாகப் படிக்காமலேயே வந்துவிடுகிற சாதனமாகுமே! தமிழ் மக்களில் 100க்கு 60 பேர்களுக்கு மேல் - தாய்மார்களில் 100க்கு 80 பேருக்குமேல் படிப்பு வாசனை அற்ற தற்குறிகளாக இருக்கிறார்கள். என்றாலும், இவர்களில் யாருக்குத் தமிழ் பேசத் தெரியாது? எனவே, எதற்காகத் தமிழ் வேண்டும்? மேலும், தாய்ப் பால் குடித்துத் தமிழில் மேதாவிகளாகிய நபர்கள் முதல் - தமிழில் அரைகுறையாக 'பஜாரி' இலக்கியங்கள் கற்றவர்கள் உட்பட, அவர்களுக்கு ஏற்பட்ட உடல் நலமெல்லாம் மூடநம்பிக்கை என்ற நோய்களுக்கு ஆளாகியதே! அந்நோயைத் தீர்க்க எவ்வளவோ பேதி மருந்து கொடுத்து அவைகளை வெளியாக்கிப் போக்க வேண்டி இருக்கிறது. இன்றைய முற்போக்குக்கு எதிரி தாய்ப் பால் குடித்த மக்கள்தானே!

எவ்வளவு தமிழ்ப் பற்று, தமிழ் மேதைத் தன்மையுள்ள கலைஞர்களை எடுத்துக்



கொண்டாலும், அவர்கள் இடத்தில் அவர்களில் 100க்கு 5 பேர், 10 பேர்கள் இடத்திலாவது - முன்னேற்ற உணர்ச்சி இருக்கின்றதா என்று பார்த்தால், எல்லாம் பழங்குப்பைகளும், அவைகளுக்கு ஏற்ற கற்பனைகளும், ஒழிக்கப்பட வேண்டியவைகளும், அழிக்கப்பட வேண்டியவைகளும் உருவமாய்க் காணப்படுகின்றன என்பதைத் தவிர,வேறு என்ன இருக்கிறது? மரியாதைக்குரிய - பாராட்டத்தகுந்த தமிழ்ப் பெரியார்கள் மறைமலை அடிகள் முதல் திரு.வி.க. வரை உள்ள பெரியார்களிடம் - அவர்கள் கருத்துகளிடம், அவர்கள் நடந்து கொண்ட முறைகளில் இருந்து, இன்றைய நாட்டு முன்னேற்றத்துக்கு என்றோ, மக்கள் முன்னேற்றத்திற்கென்றோ எடுத்துக் கொள்ளத்தக்க சாதனங்கள் என்ன இருக்கின்றன என்று அன்பர்கள் தோள்தட்டிக் கூறமுடியுமா?

இப்போது நாம் உலக அந்தஸ்தில் மிக மிகத் தாழ்வான நிலையில் இருக்கிறோம். மனிதன் இன்றைய ஆசாபாசங்களுக்கு, அனுபவங்களுக்கு, இன்றியமையாத தேவைகளுக்கு, மற்ற நாட்டானோடு தலை நிமிர்ந்து நடப்பதற்கு நம்மிடம் (தாய்ப் பாலில்) என்ன இருக்கிறது? எதற்குத் தமிழைப் பயன்படுத்துகிறோம்? நமது வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் இதுவரை நாம் அனுபவியாததை, காணாததை, நினைக்காததை அனுபவிக்கிறோம், காண்கிறோம், நினைக்கிறோம்.

இதன் அடிப்படைகளை ஊமையன் மாதிரி கை ஜாடை அல்லது கண் ஜாடை அல்லது புட்டிப் பாலால் (அயல் மொழியால்) உணருகிறோம்; அறிகிறோம். செய்யத் தெரிகிறோமே அல்லாது, தாய்ப் பால் சக்தி பயன் தருகிறதா?

பார்ப்பனர்களும் அரசாங்கமும் இந்தத் துறையில் செய்கின்ற அக்கிரமங்கள், சொல்லி முடியாது. ஒரு பண்டத்துக்கு - தமிழ்ப் பெயர் உண்டாக்கி, தமிழில் சொல்லிவிட்டால் போதுமா? அதன் செயல் முறைக்கும், அதன் பாகங்களுக்கும், அதை ஊடுருவி அறிந்து கொள்வதற்கும், அதன் அடிப்படைக்கும் சொற்கள் வேண்டாமா? மற்றும் மருத்துவம், பொறியியல், சட்டம் முதலிய எத்தனையோ துறைகளின் நுணுக்கங்களுக்கு, செயல்களுக்கு நமக்குத் தக்க அறிவும், அனுபவமும், செய்முறையும் வேண்டுமானால் - நமது தாய்ப் பாலில் (தமிழ் மொழியில்) என்ன இருக்கிறது?

நம் நாட்டுப் பார்ப்பனர்கள், முன்னேற்றத்தின் பயன்களை எல்லாம் அனுபவிக்கவும், தாங்கள் முன்னேறவும் - இங்கிலிஷ் மொழியை நல்லவண்ணம் பயன்படுத்திக் கொண்டு, மற்றவர்கள் எங்கு தங்களைப் போலவே முன்னேறி விடுவார்களோ என்ற பொறாமையினால், கெடுதல் புத்தித் தன்மையால் நமக்கு இந்தியைக் கொண்டு வந்து புகுத்தி, அதை வேண்டாம் என்று சொல்வதற்காக - நமக்குத் தாய்மொழி தாய்மொழி என்று பைத்தியம் பிடித்து அதிலேயே அழிந்து விடுவோமே ஒழிய, இங்கிலிஷ் என்ற உணர்ச்சி ஏற்படாது என்ற 'ஞானதிருஷ்டி'யினால், நமக்கு இந்தத் தாய்மொழிப் பைத்தியம் ஏற்படும்படி செய்து விட்டார்கள்.

உதாரணமாக, இந்தி கட்டாயம் என்றதனால்தான், தமிழ் மொழிப் பைத்தியம் நமக்கு ஏற்பட்டது. இது, பார்ப்பனர்களின் திறமையேயாகும். யாராவது சொல்லட்டுமே - பார்ப்பனர்களில் யாருக்காவது, எங்காவது தாய்மொழிப் பைத்தியமோ, தாய்மொழிப் பற்றோ இருக்கிறதா? அவனுக்கு முதலாவதாக தாய்மொழி என்பதாக ஒரு மொழியே கிடையாது என்பது மாத்திரமல்லாமல் - தாய்நாடு என்பதாக ஒரு நாடே கிடையாதே! அவர்கள் மொழிப் பற்று, நாட்டுப் பற்று எல்லாம் - அவர்கள் 'சாதி ஆதிக்கப் பற்று'தானே!

*'தாய்ப் பால் பைத்தியம்' நூலிலிருந்து.*

**"நாம் மொழியால்தான் தமிழனே தவிர, 3000 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழைப் பேசுகிறோமே ஒழிய - பேச ஆசைப்படுகிறோமே ஒழிய - வாழ்க்கையில், ஆசாபாசங்களில், வளர்ச்சியில், போக போக்கியங்களில், நாம் தமிழன் அல்லரே! பேச்சில் 'நான் பழந்தமிழன்' என்பதுபோல - நடப்பில், வாழ்வில், பழக்க வழக்கங்களில், 'நான் பழந்தமிழன்' என்று யாராவது சொல்லிக் கொள்ள முடியுமா?"**

படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/PMG CC(S) / Dn. 19/03-05 Posted at Patrika Channel Egmore
RMS / 1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No.TNTAM / 2003 / 11948

# தமிழ் நாடு இறையியல் கல்லூரி

(Affiliated to Madurai Kamaraj University)

32 - C, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 625 016

பேசி : 0452 - 2602352, 2302199 தொலை நகல் : 0452 - 2601424

மின் அஞ்சல் : principal_tts@touchtelindia.net / drc_mdu@sify.com

**சேர்க்கை ஆரம்பம் / விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

- அம்பேத்கர் கல்வி - பட்டயப்படிப்பு - 1 ஆண்டு
  Diploma Course in Ambedkar Studies
  கல்வித் தகுதி : இளங்கலை பட்டப்படிப்பு
- அம்பேத்கர் கல்வி - சான்றிதழ் படிப்பு - 1 ஆண்டு
  Certificate Course in Ambedkar Studies
  கல்வித் தகுதி : +2 (பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி)
- ஜெர்மன் மொழி - பட்டயப்படிப்பு - 1 ஆண்டு
  Diploma Course in German Language
  கல்வித் தகுதி : இளங்கலை பட்டப்படிப்பு
- முதுகலை தொடர்பியல் - 2 ஆண்டுகள்
  M.Sc Communication
  கல்வித் தகுதி : இளங்கலை பட்டப்படிப்பு

விண்ணப்பங்கள் பெற விரும்புவோர் 1, 2, 3 ஆகிய சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புக்கு ரூ. 50க்கும், முதுகலை தொடர்பியல் படிப்புக்கு ரூ. 125 /-க்கும் பண அஞ்சலாகவோ (money order) வரைவோலையாகவோ (DD) 'தமிழ் நாடு இறையியல் கல்லூரி' என்ற பெயரில் எடுத்து முதல்வர், தமிழ் நாடு இறையியல் கல்லூரி, 32-சி, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 625 016 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

முனைவர் பா. மோகன் லார்பீர்
முதல்வர்

Owned, Printed & Published by [illegible] Raj from No.30, Vizhagathottam, Saidapet, Chennai - 15 at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet Chennai - 15, Editor : Punitha Pandiyan

படிப்பகம்